
உ

# அருள் ஒளி



PUBLIC LIBRARY JAFFNA

தேரடிச் சித்தர் செல்லப்பா சுவாமிகளின்
100வது குருபூசை சிறப்புமலர்

மாசி

வெளியீடு


**ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்**


102

தெல்லிப்பழை, இலங்கை

2015

இந்தியப் பிரதமர் கௌரவ திரு. நரேந்திரமோடி அவர்கள்
அருள்மிகு கீரிமலை நகுலேஸ்வரப் பெருமானை 14-03-2015 அன்று
தரிசித்த காட்சி







உ

# அருள் ஒளி

(மாதாந்த சஞ்சிகை)



ஆசிரியர்
**கலாநிதி ஆறு. திருமுருகன் அவர்கள்**
**உதவி ஆசிரியர்**
**சைவத்திரு. கா. சிவபாலன் அவர்கள்**

**மாசி மாத மலர்**
**2015**

**வெளியீடு : ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்,**
**தெல்லிப்பழை, இலங்கை.**

**பதிவு இல. : ISSN 2362 - 0587**
**ISBN 978 - 955 - 23 - 0019 - 3**

e-mail : thurkaiammantemple@gmail.com
Face book: tellidurga@gmail.com

## தவத்திரு செல்லப்பா சுவாமிகளின் நூறாவது குருபூசை

ஈழத்திருநாட்டில் சித்தர் பாரம்பரியத்தில் தோன்றிய செல்லப்பா சுவாமிகளின் திருவருளை அறியாதவர்கள் இல்லை. நல்லூர்த் தேரடியில் அருள்ஒளிப் பிரகாசமாக விளங்கிய சுவாமிகள் பற்றிய சிந்தனைகள் இன்றுவரை அற்புதமாகப் பேசப்படுகிறது. காவியோ, கமண்டலமோ, பீடமோ எதுவும் இல்லாத பிச்சாண்டியாக உலாவியவர் செல்லப்பர். தன்பாட்டில் கதைத்துக் கொண்டிருந்த இப்பெருமகனை விளங்காதவர்கள் "விசர்ச் செல்லப்பா" என அழைத்தனர். விளங்கியவர்கள் இறைவனே இறங்கி வந்துள்ளதாகப் போற்றினர். தவத்திரு யோகர் சுவாமிகள் தன்னை ஆட்கொண்ட செல்லப்பா சுவாமிகளை உலகறியச் செய்தார். "என்னை எனக்கறிவித்த எங்கள் குருநாதன்" என போற்றிய யோகர் சுவாமிகள் செல்லப்பா சுவாமிகளின் மகா வாக்கியங்களை உலகுக்கு உணர்த்தினர்.

கந்தை ஆடையோடும் கடும் வார்த்தையோடும் கருணை முகம் காட்டிய செல்லப்பா சுவாமிகளின் திருவருளைப் பெற்றவர்கள் பெருங் கைங்கரியங்களை நிறைவேற்றினர். சேர். பொன்னம்பலம் இராமநாதன் அவர்கள் ஒப்புரவாளராகவும், பரோபகாரியாகவும் விளங்குவதற்கு வித்திட்டவர் செல்லப்பா சுவாமிகள். நல்லூர்த் தேரடியில் இராமநாதனைக்

கண்ட செல்லப்பர் முடிச்சை அவிழடா, கொட்டடா, பரவடா என்று சித்தர் பாஷையில் ஏசினாராம். ஆச்சரியப்பட்ட பெரியார் இராமநாதன் மீண்டும் செல்லப்பரைச் சந்தித்து அவரது அருட்பார்வையில் அகப்பட்டார். சுவாமிகள் சொன்ன வார்த்தையின் பொருளை விளங்கினார். தான் தேடிய சொத்துக்களை தர்மகாரியங்களுக்குப் பயன்படுத்தினார். இதன் விளைவாக இராமநாதன் கல்லூரி பரமேஸ்வராக் கல்லூரி உருவாகியதெனப் பலரும் போற்றுவர்.

நல்லூர்த் தேரடியில் அன்றும் இன்றும் பல சித்தர்கள் தம்மை அடையாளம் காட்டாமலேயே நடமாடுவர். நாள், கோள், ஏழை, பணக்காரன், கற்றவர், பாமரர் என்ற எல்லைகளைக் கடந்த நிலையில் சிந்தையில் புனிதம் உடையவர்களுக்கு சித்தர்கள் காட்சி கொடுப்பது இயற்கை. சித்தர்களின் பாஷையை விளங்கிக் கொள்ளும் தகுதி எல்லோருக்கும் கிடைப்பதில்லை. சித்தர்கள், ஆன்ம விடுதலைக்கு வழிகாட்டுபவர்கள். கர்ம வினையைக் கலைப்பவர்கள். செல்லப்பா சுவாமிகள் பலரது கர்ம வினையைக் கலைத்து, பிறவிப் பயனை உணர வைத்தவர். அகந்தை என்னும் இருளை அகற்றுவதற்கு வழிகாட்டியவர். அவாவினால் அல்லற்படுபவர்களுக்கு அவா அறுத்தலுக்கான பண்பை வளர்த்தவர் செல்லப்பா சுவாமிகள். செல்லப்பா சுவாமிகளின் திருவருளை யோகர் சுவாமிகள் ஊடாகப் பலரும் அறிந்தனர். அதனால் உலகின் பல பாகங்களிலும் செல்லப்பா சுவாமிகளை நீள நினைந்து வணங்கும் மரபு தொடர்கிறது. சுவாமிகளின் திருமுறைத் தோற்றத்தை உணர்த்தும் விக்கிரகம் அமெரிக்க ஹவாய் சைவ ஆதீனத்தில் கருங்கல் விக்கிரகமாக வடித்து வழிபாடு நடைபெறுகிறது. சுவாமிகளின் சமாதிக் கோவில் கடந்த நூறு வருட காலமாக நல்லூர் முன்றலில் உள்ள வளவில் பாதுகாக்கப்பட்டு வருகிறது. பல பக்தர்கள் சுவாமிகளின் சமாதிக்கோவிலைத் தரிசித்து ஆறுதல் பெறுவர். சுவாமிகளின் 100வது குருபூசை 22-03-2015 உலகம் முழுவதும் அனுட்டிக்கப்பட இருப்பது மகிழ்ச்சியைத் தருகிறது. சைவமக்கள் இத்தவ ஞானியின் திருவருளை உணர்ந்து அவர் ஞானத்தை உச்சரித்து நல்லருள் பெறவேண்டும்.

**- ஆசிரியர்**

# பசுவதை செய்யாதீர்கள்!!

அம்பலவாணர் இராஜரட்ணம் அவர்கள்
(சைவப்புலவர், சைவசித்தாந்த பண்டிதர்)

இப்பூவுலகிலுள்ள விலங்குகள் யாவற்றிலும் மேன்மையானதும் புனிதமானது மாகக் கருதப்படுவது பசுவாகும். இதைக் கோமாதா எனவும் அழைப்பர். கோ என்பது இறைவனைக் குறிக்கும் சொல். மாதா என்பது தாயைக் குறிக்கும் சொல். பசுவானது தெய்வங்களோடு பல சந்தர்ப்பங்களில் சம்பந்தப்பட்டு மனித மேம்பாட்டிற்குத் துணை புரிவதால் "கோ" என்று பகுதியாகவும், தாய்ப்பாலுக்கு நிகரான தன்பாலலைத் தந்து குழந்தைகளை வளரச் செய்வதால் "மாதா" என்று விகுதியாகவும் சேர்த்து கோமாதா என அழைப்பர்.

பசுவின் பாலானது பல வழிகளிலும் மக்களுக்குப் பிரயோசனப்படுகிறது. ஆன் மீகச் செயற்பாடுகளில் முதலிடம் வகிக்கிறது. இறைவனின் திருவுருவ விக்கிரகங்களுக்கு அபிஷேகம் செய்வதற்கும், இறைவனின் மிக விரும்பிய நீராகாரமாகவும் பாவிக்கப்படுகிறது. பாற்குட பவனிகளில் இடம்பெறுகின்றது. பஞ்ச கவ்வியத்திலும் இடம்பெறுகிறது. சிறியோருக்கும் பெரியோருக்கும் போஷாக்கு அளிக்கக்கூடிய பானமாகவும் விளங்குகிறது. பிறந்த குழந்தைக்குத் தாய்ப்பாலுக்குப் பதிலாக தாயால் முதலில் ஊட்டப்படுவதும், ஆறு மாதங்களின் பின் குழந்தைக்கு முதன் முதல் உணவூட்டும் நிகழ்வான அன்னப் பிராசனம்... எனப்படும் பாற்சோறு ஊட்டல் நிகழ்விலும் முதலிடம் வகிப்பது பசுவின் பால்தான் என்றால் மிகையாகாது. பூணூல் சடங்கு, ருது சாந்தி வைபவம், திருமண வைபவம் போன்ற நிகழ்வுகளுக்கு நீராட்டுவதற்கு முன் சம்பந்தப்பட்டவர்களுக்கு தலையில் வைத்து பெரியோர்களால் ஆசி வழங்குவது பாலும் அறுகம் புல்லுமே. திருமண பந்தத்தில் ஈடுபடும் மணமக்களுக்கு முதன் முதல் வழங்கப் படுவது பாலும் பழமுமே. புதுமனை புகுதலின் போதும் முதன் முதல் காய்ச்சப் படுவது பசுவின் பாலே. கோயிற் பூசை முடிவிலும் பிரசாதமாகத் தரப்படுவது பாற்தீர்த்தமே. இறக்கும் தறுவாயில் இருக்கும் மனிதனுக்கு வாயில் ஊற்றப் படுவது பசுவின் பாலே. இறந்த பின் நடக்கும் சகல கிரியைகளுக்கும், காடாற்றல் எனப்படும் எலும்புகள் சேகரிக்கும் கிரியைகளுக்கும், அந்தியேட்டி, ஆட்டுத்திவசம் எனப்படும் அமங்கல நிகழ்வுகள் யாவற்றிற்கும் இன்றியமையாததாக வேண்டப் படுவது பசுவின் பாலே!

பசுவின் சாணம் கூட பல்வேறு செயற்பாடுகளுக்கும் பயன்படுகிறது. மண் வீட்டை மெழுகிச் சுகாதாரமாக வைத்திருப் பதற்கும், சிவ சின்னமாகிய வீபூதி தயாரிப்பதற்கும், பஞ்சகவ்வியம் தயாரிப் பதற்கும், இறந்த உடலை எரிப்பதற்கும் விறாட்டி தயாரிப்பதற்கும், தாவரங்களுக்கு போஷாக்குள்ள உரமாகவும் பசுவின் சாணம் பயன்படுகிறது.

கும்பாபிஷேக வேளைகளிலும், புது மனை குடிபுகு வேளைகளிலும் பசுவைக் கொணர்ந்து மங்கல தரிசனமாக காண்பிக் கிறார்கள். ஏனெனில் பசுவின் பின் பகுதியில் இலக்குமி வாசம் செய்வதாக

ஆகமங்கள் கூறுகின்றன. ஆன்மீகக் கதைகளிலும் பசுக்கள் முக்கியத்துவம் பெற்றிருக்கின்றன. ஸ்ரீ கிருஷ்ணன் வளர்ந்து வந்த ஆயர் பாடியில் ஆயர்களால் பிரியமாக வளர்க்கப்பட்டதும், ஸ்ரீ கிருஷ்ணனின் பிரியமான விலங்கும் பசுதான். திருமூலர் பசுக்களிலே கொண்ட இரக்கத்தை அவரது வரலாற்றிலே அறிந்திருப்பீர்கள். மனுநீதிகண்ட சோழன் தாய்ப்பசு பட்ட துன்பத்தைத் தாங்காது தன் மகனையும் தேர்ச்சில்லில் அகப்பட்டு இறக்கச் செய்த வரலாறும் எமக்கு உணர்த்துவது பசுவின் மகத்துவத்தையே.

எருதை நோக்குங்கால் எருதும் தெய்வீக நிகழ்வுகள் பலவற்றில் சம்பந்தப் பட்டிருக்கிறது. கைலையில் வீற்றிருக்கும் சிவனுக்கும், பார்வதிக்கும் காவல் தெய்வமான நந்தியாகவும், சிவன் கோவில்களிலே சிவலிங்கத்தையே நோக்கிய வண்ணமிருக்கும் ஆன்மாவாகிய நந்தியெம்பெருமானாகவும் விளங்கு கின்றது. சிவ பார்வதித் தெய்வங்களுக்கு வாகனமாகவும் விளங்குகிறது. இராசி களில் ரிஷபமாகவும், சிவாலய திருவிழா வின் போது ஏற்றப்படும் கொடிச்சீலையில் நந்தியாகவும் காட்சி தருகிறார். திருக் கோயிலில் தினம் தோறும் நடைபெறும் ஆறுகாலப் பூசையின்போது நந்திக்கும் பூஜை நடைபெறும். பிரதோஷ காலத்தில் இவருக்கு சிறப்பான பூஜை வழிபாடு நிகழும். இவருடைய இரு கொம்புகளுக் கிடையே சிவலிங்கத்தை தரிசித்தபின்பே விரதத்தை நிறைவு செய்வார்கள்.

எருது விவசாயிக்கு மிகவும் இன்றியமை யாத ஒரு விலங்காகும். அவன் நிலத்தை உழுது கொள்வதற்கும், வயலுக்குத் தேவை யான உரத்தை வழங்குவதற்கும், வயலில் விளைந்த நெற்கதிர்களை சூடு மிதித்து நெல் மணிகளாக்குவதற்கும், அந் நெல்மணிகளை மூடைகளாகக் கட்டி வீடு கொண்டு செல வதற்கும் வண்டியை இழுப்பவைகளும் எருதுகளே. இதனால்தான் விவசாயி சூரியப் பொங்கலுக்கு மறுநாள் எருதுகளுக்கும் நன்றிக் கடன் செலுத்துவதற்காக மாட்டுப் பொங்கலை நடத்துகிறான்.

இவ்வகையான சிறப்புக்கள் மிக்க பசுவையும், எருதையும் பதைபதைக்கக் கொன்று உண்பது எவ்வளவு பாதகமான செயலாகும். இவையிரண்டும் மக்களாகிய எமக்குப் பல வழிகளிலும் உதவி செய் கின்றன. நாமோ அச் செய்நன்றிகளை மறந்து எம் உடலை வளர்ப்பதற்காக அப்பாவிப் பிராணிகளான அவைகளை ஈவிரக்கமின்றிக் கொன்று குவிக்கின்றோம். நாம் அவற்றின் ஊனை உண்பதால்தான் அவைகள் தினம்தோறும் கொல்லப்படு கின்றன. நாம் உண்ணாவிட்டால் அவைகள் கொல்லப்படமாட்டா.

ஆகவே நாம் பசுக்களையும், எருது களையும் தெய்வத்தால் எமக்கு அளிக்கப் பட்ட விலங்குகளாகக் கருதி அவை களைக் கொன்றொழியாதிருப்போமாக!

# திருக்கோவிலும் இசைமாட்சியும்

திரு. செ. வைத்தியலிங்கன் எம்.ஏ., எம்.லிட்

PUBLIC LIBRARY
JAFFNA

**கோயில் மாட்சி :**

"இன்னிசை வீணையர் யாழினர் ஒரு பால்"

– மணிவாசகர்

இறைவன் முன் 'ஆ' (பசு – உயிர்) லயப்படுதற்கு இடந்தருதலின் 'ஆலயம்' என்றும் எங்கும் நிறைந்த பரம்பொருளாகிய 'கோ' உயிர்களுக்குப் பேரருள் சுரக்க விளங்கித் தோன்றும் 'இல்' ஆதலின் 'கோவில்' என்றும் இறைவன் உறைவிடம் அழைக்கப்படுகின்றது. இறைவனை மனத்தாற் சிந்தித்து வாயால் பாடிக் கையால் கோயிலில் திருத்தொண்டு புரிந்து சமயவுணர்வைத் தக்காங்கு வளர்த்துக் கொண்ட தமிழர்கள் 'ஆலயம் தொழுவது சாலவும் நன்று', 'கோயிலில்லா ஊரில் குடியிருக்கவேண்டா', 'ஊரானோர் தேவகுலம்' என்றெல்லாம் கூறினர்; அவ்வாற்றான் வாழ்வை நெறிப்படுத்திக் கொண்டனர்; எனவே, தமிழகச் சமய வரலாற்றில் திருக்கோயில்களுக்குப் பண்டு தொட்டே சிறப்பிடம் இருந்து கொண்டிருக்கின்றது.

தூய்மையின் வடிவமான இறைவனுக்குரிய கோயில்கள் தூய்மை நிறை நிலையங்களாக அமைக்கப்பட்டன; ஆறறிவுடன் படைக்கப்பட்ட மக்கள் தம் உயிர்ப் பொறுப்பான நன்றியுணர்வைப் பணிவன்புடன் புலப்படுத்திக் கொள்ளக் கோயில்கள் வாய்ப்பளித்தன.

பிறவிப் பெருங்கடலினின்றும் தம்மைக் கரையேற்றும் 'துறை' யாகக் கோயில் விளங்கியமையால் அதனைத் 'துறை'யென்றும் மக்கள் அழைத்து மகிழ்ந்தனர்; திருப்பெருந்துறை, திருவாவடுதுறை போன்றவற்றைச் சான்றாகக் காண்க.

தனக்கு உவமையில்லாத இறைவனின் தாளை வழிபட நினைத்த அன்பர்கள் கோயிலை எழுப்புகையில் அது பலரின் மனக்கவலையை மாற்றுந் திறத்தில் அருளழகுக் கவர்ச்சியுடைய தாய் அமைய வேண்டுமென அவாவினர்; ஆன்மீக நலத்திற் கியைந்த வகையில் மக்கள் நலத்தையும் மையமிட்டுச் செல்லுமாறு திட்டமிட்டுச் செயல்படுத்தினர். இதனால், ஆகம நெறியும் விரிவாக அமைக்கப் பட்டது; கோயிலமைப்பும் நிர்வாகமும் நல்ல நிலையில் உறுதிபெற அமைந்தன.

மக்களேயன்றி நாடாளும் மன்னர்களும் கோயிலைக் கட்டுவதிலும், பாதுகாத்தலிலும் நிரம்ப நாட்டம் செலுத்தத் தொடங்கினர்; சமயக் காழ்ப்பின்றிப் பிற சமயக் கோயில்களையும் கட்டி ஆக்கமளித்தனர். இறையருளால் தான் தமக்கு எல்லாப் பொன்னும் பொருளும் போகமும் கிடைத்தன என்று நம்பினர்; நன்றிப் பெருக்கால் கட்டிய கோயிலில் இறைவனிடம் அன்பைப் புலப்படுத்தி அருளும் அறமும் தழைக்க வேண்டினர். மன்னர்கள் தாம் பட்டத்திற்கு வருகையில் முடிசூட்டிக் கொள்வதும், தாம் பெற்ற வெற்றியைக் கொண்டாட 'விசயாபிடேகம்' நடத்துவதும் தம் வீரமாட்சியைக் கொண்ட வீராபிடேகம் நடத்துவதும் நல்

வினையீட்டம் குறித்துத் 'துலாபாரம்', 'இரணிய கருப்பம்' ஆகியவை நடத்தித் தானம் செய்வதும் முதலிய செயல்கள் எல்லாம் பெரும்பான்மையும் கோயிலில் நிகழ்ந்தன; வரலாற்றுப் பேரறிஞர்களின் கூற்றை ஆராய்கையில், மன்னர்கள் கோயில் களுக்காகச் செலவிட்ட பெரும் பொருள் பற்றியும் மானியம் பற்றியும் அறியலாம். தாம் வழிபடுங் கடவுள் காரணமாகக் கோயில் திருவிழாவைக் கோலாகலமாகக் கொண் டாடியுள்ளனர். விலைமதிப்பற்ற அணி களைக் கடவுளுக் கணிவித்துக் கண்களிக்க நின்றனர்; நிலையாத செல்வத்தை ஆள வந்த அம்மன்னர்கள் நிலைத்த செல்வமாகத் தேடிக் கொண்டது புகழுடன் அமைத்த கோயிற் பெருஞ்செல்வமேயாகும்.

பெரும் பொருட்செலவில் எடுக்கப் பட்ட கோயிலானது அழகு கொலு வீற்றி ருக்கும் நிலையாகக் – கருவறை கோபுரம், சிரகம், மண்டபம், மதில் போன்ற பகுதி களைக் கொண்ட அமைப்பாக அமைந்தது. இதிகாசம், புராணம் முதலியவற்றின் கூறு களை விளக்கும் ஓவியம், சிற்பம், இசை, கூத்து, முதலிய நுண்கலைகளுக்கு இட மளிக்கும் நல் வாய்ப்பு ஏற்பட்டது. எனவே கலைஞகர்களை ஊக்குவிக்கும் 'கலைப் பண்ணையாகக்' கோயில் ஆக்கப்பட்டது.

**இசையின் மாட்சி :**

இசையென்பது கடவுளின் திரு முன்னர் மக்களை இட்டுச் சென்று ஒன்றவைக்கும் ஆற்றலுடைய அருங்கலையாகும். எனவே, அதனை நாதயோகம் என்றுஞ் சொல்வர். இறைவனே கலைஞனாதலின் அவனே இசை மயமாகவும் விளங்கியுள்ளான் என்பது பொருத்தமுடையதே.

ஓசையாகவும், ஒலியாகவும், ஏழி யாயும் இசைப் பயனாயும், பண்ணின் இசையாகி நின்றவனாயும், பண் காட்டும் இசையனாயும் பண்ணிடைத் தமிழொப் பவனாயும் அருளாளர்களால் பாராட்டப் பெற்ற இறைவன் இசையில் தன்னை ஒன்ற வைத்து இன்புற்று உயிர்களையும் இன்புறுத்துகின்றான்.

கம்பள அசுவதரராகிய இசை வல்லு நர்களைக் காதிற் குழையாகக் கொண்ட சிவன் 'நல்வீணை வாசிப்ப'வனாகவும் கண்ணன் குழலூதுபவனாகவும், கலை மகள் வீணை வாசிப்பவளாகவும் நந்தி தேவர் மத்தளம் இயக்குபவராகவும் இலக்கி யத்தில் கூறப்படுதலையும் சிற்பச் சித்திரங் களில் அமைத்துக் காட்டுதலையும் யாவரும் அறிவர். எனவே அத் தெய்வங்கள் உறையும் கோயில்களில் இசை வெள்ளம் பரவியதில் வியப்பில்லை.

தமிழ்நாட்டிசையே கருநாடக சங்கீத மாக இன்று வழக்கத்திலுள்ளது என்பதை ஆராய்ச்சியாளர்கள் கூறுவர். கருநாடக இராகங்களான நாராயணி, பவாநி, சகன்மோகினி, சரசுவதி, ஏமவதி, பைரவி போன்றவை தெய்வப் பெயர்களாகவும், சங்கராபரணம், சண்முகப்பிரியா, கரகரப் பிரியா, ஸ்ரீபிரியா போன்றவை தெய்வ விருப்பப் பெயர்களாகவும் இருப்பது கொண்டு இசையின் தெய்வீகத் தன்மை புரியலாகும். திருத்தல யாத்திரை புரிந்து கோயில் வழிபாடு நிகழ்த்திய நாயன்மார் களும், ஆழ்வார்களும் அருளிய பாசுரங் களெல்லாம் தெய்வம் உகக்கும் தீந்த மிழிசைச் செல்வங்களேயாகும்!

பிள்ளைப் பருவத்தினராகிய திருஞான சம்பந்தர் ஒவ்வொரு தலத்திற்கும் ஆர்வ முடன் சென்று தாளமிட்டு இசை மரபுடன் பாடி இறைவழிபாடு புரிதலில் ஈடுபாடு கொண்டவர். அவரது வாழ்வின் நோக் கத்தைப் புரிந்து கொண்ட இறைவன், சம்பந்தரின் பிஞ்சுக்கை, நைந்து விடாதி ருக்கத் திருவைந்தெழுத்தமைத்த பொற் றாளம் தந்து அவரது பாசுரத்தைச் செவி மடுக்க ஆர்வமுடன் கெஞ்சி நிற்கிறானாம்; இதனைச் சுந்தரர்,

*'நாளும் இன்னிசையால் தமிழ்பரப்பும்*
*ஞான சம்பந்த னுக்குல கவர்முன்*
*தாளம் ஈந்தவன்; பாடலுக் கிரங்கும்*
*தன்மை யாளனை என்மனக் கருத்தை*
*ஆளும் பூதங்கள் பாடநின் றாடும்*
*அங்கணன் றனை.....'* எனத்

திருக்கோலக்காவில் பாடிக் களிக்கிறார்.

திருஞானசம்பந்தர் பாடியருளும் பதிகங்களுக்கு இசைகூட்டி யாழிலே வாசிக்கின்ற பெரும்பேறு திருநீலகண்ட யாழ்ப்பாணருக்குக் கிட்டுகிறது; மறை யவர் குலத்துச் சம்பந்தரும், தாழ்குலத்துப் பாணரும் ஒருவரையொருவர் நேசிக்கை யில் குலங்கடந்த தெய்வநல மாட்சி யானது குலவிக்களிக்கிறது. பாணரை உளமுவந்து 'ஐயரே' யெனச் சம்பந்தர் வாக்கினால் அழைக்க வைக்கின்ற சேக்கிழாரின் திறமறிந்து பாராட்டி மகிழ்கிறோம். தெய்வத்தின் திருவடி நீழலில் உலவுகின்ற அடியவருள்ளத்தில் சாதி குல ஏற்றத்தாழ்வு தலைகாட்டாத நிலையறிந்து களிக்கின்றோம்!

திருநீலகண்ட யாழ்ப்பாணர் மதுரைக்கு வழிபாடு நிமித்தம் வருகிறார்; கோயில் வாயிலின் முன் சென்று நிற்கிறார்; உமை யொரு பாகன் சீர்த்தியை உளமுருகிப் பரவும் இசைப்பாட்டினை யாழிலே இட்டுக் களிக்கிறார். அவருடைய இதய இன்னி சையைக் கோயிலினுள்ளே தன் திரு முன்னரே அமர்த்திக் கேட்கவும் சுவைக் கவும் ஆவல் கொள்கிறான் ஆலவாய்ச் சொக்கன். அடியவர்கள் கனவில் தோன்றிப் பாணனாரைக் கோயிலினுள் கொணர வைத்து யாழ் வாசிக்கச் செய்கிறான். பாணனாரும் இறைவன் திருவருளை எண்ணி அவன் சந்நிதியிலே, முப்புர மெரித்த தன்மையினையும், யானைத் தோல் போர்த்திய வரலாற்றையும், மன்மதனைக் காய்ந்த திறத்தையும், திரு மாலுக்கும் பிரமனுக்கும் அரிதற்கரிய னான தன்மையையும், அடியவர்களுக் கெளியனான தன்மையையும் உள்ள டக்கிச் சிவன் சீர்த்தியை யாழிலிட்டு வாசிக்கிறார். சொல்லிசை மாலைக்கு இறைவன் அகமகிழ்ந்தவனாய் அசரீரி மூலம் "அன்பினாலே பாணனார் பாடு கின்ற சந்த யாழானது தரையிலுள்ள சீதம் தாக்கினால் நரம்பின் இறுக்கம் சிதையு மாதலின் அழகிய பலகையினை அவர் முன் இடுங்கள்" என அடியவர்களிடம் பணிக்கிறான். அவர்களும் பொற் பலகையை இட அதன் மேல் அமர்ந்து பாணனார் இறைவன் புகழ் பாடி பரவு கிறார் என்பது பெரியபுராணத்தினால் அறியும் செய்தியாகும்.

பாணபத்திரர் என்ற வேறொரு இசை வல்லுநராகிய அடியவர் காரணனராக மதுரைச் சொக்கனே மணிகளிழைத்து சுந்தரப் பொற்பலகையிட்டு அவரது இசைத் திறன் கேட்டதைத் திருவிளையாடற் புராணத்தால் அறியலாம். மேலும் பாணபத்திரர் நிமித்தம் இறைவனே அவரது

சீடனாக வந்து இசையால் அகந்தை கொண்ட ஏமநாதனை நாட்டினின்றே ஓட வைத்த திருவிளையாடலும் இறைவனது இசையீடுபாட்டினை உணர்த்தும்.

**கோயில் திருவிழாவில் இசை :**

தமிழ்நாட்டிலுள்ள கோயில்கள் ஆண்டின் பல்வேறு காலங்களில், பல நிலைகளில் திருவிழா கொண்டாடப்படு கின்றன. திருவிழாக்கள் கொண்டாடப் படுவதால் வாழ்க்கையின் பல்வேறு தரத்து மக்களும் குழுமி ஆன்மநலன் காணவும், பொருளாதாரப் பங்கீடு கொள்ளவும் வாய்ப்பேற்படுகிறது. இம்மை நலத்திற்கும் மறுமை நலத்திற்கும் திருவிழாக்கள் தொண்டு புரிகின்றன.

சுவாமி புறப்பாடு காரணமாக ஓதுவா மூர்த்திகளும், நாதசுரம், புல்லாங்குழல் முதலிய இசைக்கருவிகள் வாசிக்கின்ற வர்களும் தம் இசைத் திறனை ஆன்மீக நலத்தில் இயைத்துக் கொள்ள வாய்ப்பினைப் பெறுகின்றனர். வைணவர்கள் புரியும் பஜனையையும் நினைவுகூரலாம்.

சிவன் கோயில்களில் தொடர் திருவிழா எனின், கைலாய வாகனத்தின் மீது சிவபார்வதி முகூர்த்தங்களை எழுந்தருளப் பண்ணி உலாவரச் செய்தலைச் சிறப்பாகக் காணலாம். அகந்தையால் அறிவிழந்த இராவணன் சிவனுறையும் கைலையைத் தூக்கி உடல் மெலிந்து அவதிப்படுதலையும் இசை வாயிலாக இறைவனை மகிழ்வித்து தன் பிழையினின்று உய்தி தேடுவதையும் உணர்த்துகின்ற அரிய தத்துவமே கைலாய வாகனமாகும். (இராவணன் வீணை மீட்டிய வண்ணம் சாமகானத்தால் பாடி இறைவன் திருவுள்ளத்தை மகிழ்வித்தான், அதன் காரணமாக இறைவனே சாமகானப் பிரியனென அழைக்கப்படுதலும் காண்க).

கோயில்களில் திருவிழா நடைபெறு கையில் அடியவர்களும் எளிய மக்களும் பல்வேறு இடங்களிலிருந்து திரளு வார்கள். அவர்கள் நாட்டத்தையெல்லாம் ஒருமுகப் படுத்திடக் கோயிலில் நடனமும் நாடகமும் புராணக் கருத்தினடிப்படையில் இசைத் தொடர்புடன் அமைக்கப்பட்டன. அது காரண மாகத் திருவிழாவிற்கு வந்து திரும்புவர்கள் ஆன்ம நலத்தின் தேவையையும் சிறப்பை யும் உணர்ந்து திரும்பினார்கள். வாழ்விலும் நன்னெறி கண்டார்கள்.

ஆடல் வல்லானின் ஆட்டத்திற்கே நந்தி தேவரின் மத்தளமும், பிற இசைக்கருவி களும் தேவைப்பட்டன என்பதால், மக்கள் ஆடும் ஆட்டத்திற்கு எத்துணையளவிற்கு இசைக்கருவிகள் தேவைப்படும் என உணரலாம்!

இசை கூத்து முதலிய கலைகள் தெய்வ நலம் வாய்ந்தவை என மக்கள் உணர்ந் தமையின் அவற்றின் அரங்கேற்றத்தைக் கோயில்களில் நடத்தி மகிழ்கின்றனர்; கோயிலில் இசை நிகழ்ச்சிகளுடன் கதைச் சொற்பொழிவும் (கதாகாலட்சேபம்) புரிந்து களிகொள்கின்றனர்.

சில கோயில்களுக்கெனச் சில இசை மரபுகளும் இசைக்கருவிகளும் உண்டு; சான்றாகத் திருவாரூர்க் கோயிலுக்கெனப் 'பஞ்சமுக வாத்தியம் வாசிக்கப்படு தலைக் காணலாம். இதுபற்றி விரிக்கிற் பெருகும்.

தேர்த் திருவிழாவினை நடத்துவதால் இறைவன் திருமேனியைத் தேரில்

அமர்த்திப் பல்லாயிரக் கணக்கான மக்கள் கண்டுகளிக்க வாய்ப்பேற்படுகிறது. அப்பொழுதும் இசைக் கருவிகளை இயக்கும் காரணமாக இறைவனுக்கு இசைச்சுழல் அமைக்கப்படுகிறது.

தெப்பத் திருவிழாவினை நடத்துகையில், தெப்பக்குளத்திலே அழகு நிறை தெப்பத்தையலங்கரித்து, பெரும் விளக்கொளிச் சூழலிலே மூர்த்தங்களை அணி நலத்துடன் எழுந்தருளுவித்துத் தேர்ந்த நாதசுரம் போன்ற இசைச் சூழலுடன் வலம் வரச் செய்து, பிறகு நீராழி மண்டபத்திலே அமர்த்திக் கண்கொள்ளாக் காட்சியாக அனுபவித்துக் களிகொள்கின்றனர். விளக்கொளி வெள்ளம் குளத்து நீர்ப்பரப்பின் பிரதி பலிப்பிலே எல்லோர்க்கும் இன்பந்தருவது இயல்புதானே! ஆகத் தெப்பத் திருவிழாவிலே ஒளி வெள்ளமும், இசை வெள்ளமும் ஆன்மீக வெள்ளமும் மேலோங்கி நிற்கும். மேலும் பிறவிப் பெருங்கடலிலிருந்து ஆன்மாக்களைக் கரை சேர்த்து உய்விக்கும் இறை வனுக்கே தெப்பந் தந்து களித்த அருளா ளர்களின் உளப்போக்கினையும் உணர் கிறோம். நாயக்க மன்னர்களும் சிறப்பாகத் திருமலை நாயக்கரும் தெப்ப விழாவிற்கு ஆக்கமும் ஊக்கமும் தந்து மகிழ்ந்ததை வரலாற்றால் அறிகின்றோம்!

**எங்கும் இசை :**

இசை வடிவினனாகிய இறைவனைக் கோயிலுக்குச் சென்று வழிபடும் முனிவர்கள் வைகறையில் சங்கொலியிட்டுக் கொண்டே செல்வதை ஆண்டாள் திருப்பாவையுள்,

**'செங்கல் பொடிக்கூறை வெண்பல் தவத்தவர்
தங்கள் திருக்கோயில் சங்கிடுவான் போதந்தார்'**

எனக் கூறுதலால் அறியலாம். மக்களை விழித்தெழப் பண்ணுதற்குக் கோயிலில் சங்கு ஊதுதலையும், ஆலய மணியடித்தலையும், முரசறைதலையும் செய்துள்ளனர். திருவிழாவினை உணர்த்தும் பொருட்டுக் கோயில் முரசம் அறையப்பட்டுள்ள குறிப்பானது சங்க விலக்கியங்களிலும் காணலாம்.

எங்கும் நிறை இறைவனுக்கு அமைத்த கோயில் தூண்களிலும் இசையொலி உண்டாகுமாறு கலைஞர்களின் கற்பனை வேலை செய்திருக்கிறது. இதனை மதுரைக் கோயிலுள்ள இசைத் தூண்களால் அறியலாம். கோயில் மண்டபத்திலும் இசையின் எதிரொலியுண்டாகுமாறு செய்த கலைமாட்சியிணைத் திருவையாற்றுக் கோயிலுள் காணலாம்.

தமிழகத் கோயிற் சிற்பங்களை ஆராய்ந்து பார்த்தால் எத்தனையோ இசைக் கருவிகளைப் பற்றியறிய வாய்ப்புண்டாகும்.

*"மெய்யன்பர் மனத்தன்பின்
விளைந்த விசைக் குழலோசை
வையந்தன் னையுநிறைத்து
வானுந்தன் வயமாக்கிப்
பொய்யன்புக் கெட்டாத
பொற்பொதுவின் நடம்புரியும்
ஐயன்றன் திருச்செவியின்
அருகணையப் பெருகியதால்"*

– சேக்கிழார்

**[நன்றி – சிதம்பரம் கும்பாபிஷேக மலர்]**

### அகில இலங்கை இந்து மாமன்றம் : நூல் வெளியீட்டு விழா

## "தங்கம்மா அப்பாக்குட்டியின் வகிபாகம் : ஓர் ஆய்வு"

### (நூலாசிரியர் - திரு. தி. செல்வமனோகரன்)

பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் 7.3.2015 அன்று மாலை 4.30 மணிக்கு

# பிரதம விருந்தினர் உரை

**நீதியரசர் க.வி. விக்கினேஸ்வரன் அவர்கள்**

( முதலமைச்சர், வடமாகாணம் )

குருர்ப்ரம்மா குருர் விஷ்ணு குருதேவோ மகேஷ்வரஹா
குருர் சாக்ஷாத் பரப்பிரம்ம தஸ்மை ஸ்ரீ குருவே நமஹ

தலைவரவர்களே, நல்லூர் ஆதீன முதல்வர் அவர்களே, மகாதேவக் குருக்கள் ஐயா அவர்களே, என் மதிப்பிற்குரிய ரிஷி தொண்டுநாதன் சுவாமிகள் அவர்களே! நூலாசிரியர் அவர்களே, மற்றும் கலாநிதி பால கைலாசநாத சர்மா அவர்களே, நண்பர் ஆறு.திருமுருகன் அவர்களே மற்றும் இங்கு வந்திருக்கும் ஆன்றோர்களே, சான்றோர்களே, எனதருமை சகோதர சகோதரிகளே, குழந்தைகளே!

பக்கத்தில் இருந்து படம் எடுப்பதற்கும் தூர இருந்து படம் எடுப்பதற்கும் வித்தியாசம் இருக்கின்றது. பக்கத்துப் படம் பளிச்செனத் தோன்றும், பக்கவாட்டில் இருப்பவை தென்படாது. பரவலாக இருக்கும் பின்புலம் புலப்படாது. தூரத்துப் படம் பலதையும் உள்ளடக்கியிருக்கும். பின்புலம் தெரியும். பிறிது பல புலப்படும். ஆனால் படம் சற்று மங்கலாகவே தோன்றும்.

இன்று உங்கள் மத்தியில் இந்தக் கூட்டத்தில் பங்கு பற்றும் போது சிவத் தமிழ்ச்செல்வி சற்று மங்கலாகத் தான் தெரிகின்றார். பளிச்சென்று தெரியப் பலதையும் மறந்து அவருடன் பக்கத்தில் நின்று அளவளாவி வந்த காலம் இனி வராது என்ற எண்ணம் பெருமூச்சைத் தருகின்றது. அவரை இனி மங்கலாகத் தான் பார்க்கமுடியும். ஆனால் பின்புலத்துடன் பலதையும் உள்ளடக்கியதாக எங்கள் பார்வை அமையும். இன்றைய நூல் அவ்வாறானதாகத் தான் அமைந்துள்ளது. தூரத்தில் நின்று துர்க்கா துரந்தரியை நோக்குகின்றோம். அப்பொழுதெல்லாம் ஆறடி உயரம் நின்று அண்மையில் அவரை வைத்து வாமன ரூபத்தில் கண்டேன். இன்று நான் வாமனன் ஆகிவிட்டேன். அன்னையார் ஆறடி அல்ல அறுபது அடி உயரத்திற்கும் அப்பால் நின்று அடியேனைப் பார்த்துச் சிரிப்பது போல் ஒரு மயக்கம் ஏற்படுகின்றது.

புதுக்கடையில் நான் சட்டத்தரணி தொழிலில் ஈடுபட்டிருந்த காலத்தில், சுமார் 40, 45 வருடங்களுக்கு முன்னர் என் அலுவலகத்தின் அண்மையில் மேதர் என்ற ஒரு சிரேஷ்ட சட்டத்தரணி தொழில் புரிந்து வந்தார். அப்போதெல்லாம் அவருக்குச் சுமார் எண்பது வயதிருக்கும். அவரின் மிக நெருங்கிய நண்பர் ஒருவர், அவருமொரு சட்டத்தரணியென்று நினைக்

கின்றேன், இறந்து விட்டார். "Sir, செத்த வீட்டுக்குப் போகவில்லையா?" என்று அவரிடம் கேட்டேன். "உயிருடன் பக்கத்தில் வைத்துப் பழகிப்போன எனக்கு அவரை உயிரற்ற சடலமாகப் பார்க்குந் திராணி கிடையாது. நான் வரவில்லை. நீ போ" என்றார். "என்ன சேர்! கடைசி யாத்திரையில் கலந்து கொள்ளமாட்டேன்" என்கின் றீர்களே! என்றேன். "யார் சொன்னது கடைசி யாத்திரை என்று? என் கடைசி யாத்திரை வரை அவன் என்னுடன் இருப்பான்" என்றார். மரணம் என்பது ஒரு விசித்திரமான நிகழ்வு. பக்கத்தில் பளிச் சென்று தெரியப் பலதையும் அளவளாவும் ஒருவர் மரணத்தின் பின்னர் எங்கள் எண்ணத்தில் மட்டுந்தான் நிறைந்து கிடக்கின்றார். எதிரிலே அவர் இல்லை.

அந்த நிலையில்தான் இன்று இருக் கின்றேன் நான். அன்னையாருடன் அதனையும் இதனையும் அங்கங்கு நின்று பேசிய அவையெல்லாம் இன்று கனவாகி விட்டது. அந்தக் கனவின் மத்தியில்தான் அவர் நினைவை வரவழைக்க இந்த ஆய்வு நூல் அரங்கத்திற்கு ஏறியுள்ளது. ஏழில் பிறந்த அவர் ஏகியே ஏழு வருடங்கள் ஆகிவிட்டன. ஏக்கத்துடன் அவரை வழி யனுப்பிய நாங்கள் இன்று அவர் இன்றி ஏழ்மையடைந்துள்ளோம். எனினும் தம்பி செல்வமனோகரன் அவர்கள், அன்னை யாரின் பணிகளைச் சமயம், சமூகம், தத்துவம், தமிழ்மொழி சார் தலைப்புக் களின் கீழ் ஆராய்ந்து ஆய்வு செய்து இன்றைய நூலை வெளியிட்டுள்ளார். அருகே அன்னையார் நிற்கும் போது புரியாத ஆய்வுத் தகவல்களையெல்லாம் அழகாக எழுத்தில் வடித்துள்ளார். அன்னை யார் இனி அனைவருக்கும் ஆவணப்படுத் தப்பட்டுள்ளார். அத்தகையதொரு அழகிய நூல்தான் இன்று அரங்கம் ஏறியுள்ளது. இந்து மாமன்றத்திற்கு நன்றி. இதை யெல்லாம் இனிதே நடந்தேறச் செய்துள்ள நீலகண்டனுக்கு நன்றி.

வழக்கமாக என்னை ஆய்வுரை செய்ய அழைப்பார்கள். அடியேன் அரசியலில் பிரவேசித்ததால் அந்தப் பொறுப்பி லிருந்து அகற்றப்பட்டுள்ளேன். இன்று அடியெடுத்துத் தந்தாலும் ஆய்வு வழங்க முடியாமல் அரசியல்பணிகள் என்னை ஆக்கிரமித்துக் கொண்டிருக்கின்றன. அழ காக ஆய்வு செய்து அமைதி வாழ்க்கை வாழ்ந்து வந்த என்னை அரசியல் அரங்கேற வைத்தவர்களில் அகில இலங்கை இந்து மாமன்றத் தலைவரும் ஒரு குற்றவாளி. எனக்குக் குற்றமிழைத்துவிட்டு அவர் குறுநகையுடன் பவனி வருகின்றார். அன்னையாரின் ஆய்வுநூலை அலசிப் பார்க்கக்கூட அவ காசம் அளிக்காத அர சியல் வாழ்க்கையில் என்னை அவதிப்பட வைத்துள்ளார்.

இன்று அன்னையாரின் நூலில் ஏதே னும் ஒரு பகுதியை ஆழப் பார்ப்போம் என்று தான் இருந்தேன். அதற்கெங்கே அவகாசம் இருக்கின்றது? அதனால் நேற்று எனக்குக் கிடைத்த நூலை நோக்கி என் கைவிரல்கள் வீணையை வருடுவதுபோல வருடின. அந்த வருடலின் பால் எனக்குத் தரப்பட்ட தரவை வைத்து ஒரு சில வார்த்தைகள் கூறலாம் என்று நினைக் கின்றேன். அதற்கு முன் நண்பர் நீல கண்டனின் நெற்றிக்கண்ணிற்கு ஆளா காமல் நிற்க ஒரு விளக்கம் தேவை. முடி வடைந்த நூலை நேற்று கொழும்பு வந்தே பெற்றேன். முற்றுப்பெறாத முதல்

நூலொன்றை இரு வாரங்களுக்கு முன்னர் அவர் தந்துதவியதை நான் இங்கு குறிப்பிடத்தான் வேண்டும். காமராஜர் "ஆகட்டும் பார்க்கலாம்" என்று அன்று கூறியது போல் நானும் "ஆய்வு நூல் அழகாக வெளிவரும்; அப்போது பார்க்கலாம்" என்றிருந்து விட்டேன். ஆனால் காலம் சதி செய்து விட்டது. நேற்றிரவு தம்பி நீலகண்டன் தொலைபேசியில் பேசியபோது ஆய்வு நூலை அரைநிமிடங்கூட அளந்து பார்க்க அவகாசம் கிட்டவில்லை. ஐயா! ஆகாய விமானத்தில் அமைதியாகக் கொழும்பு செல்வோம் என்று வந்த என்னை அதற்குள்ளேயே வைத்து அன்னியர் ஒருவர் நேற்று பேட்டி எடுத்துவிட்டார் என்றால் என் அலைப்பையும் அமைதியின்மையையும் என்னதான் சொல்வது! முடியாது என்றிருக்கலாம். முயன்று முயன்று பார்த்து முதல்வரைச் சந்திக்க முடியாமல் போன அவர் முந்திக்கொண்டு வந்து "நீங்கள் முதல்வர் அல்லவா?" என்றார். "ஆம்" என்றேன்.

"நான் கலாநிதிப் பட்டம் பெற்றவன். நூல் எழுதுகின்றேன். என்னைத் தெய்வம் கைவிடவில்லை. ஒரு சில வினாக்கள் உங்களிடம் கேட்கலாமா?" என்றார். இல்லை முடியாது. நான் அதிகாலையில் இருந்து அலைந்தவாறு இருக்கின்றேன். அமைதியாக உறங்க விடுங்கள்!" என்று அவரிடம் கூற மனம் விடவில்லை. அந்தரத்தில் பறந்த அந்த விமானத்தை அவரின் ஆய்வுக்குப் பயன்படுத்திக் கொண்டார் அந்த அன்னியர். வீட்டுக்கு வந்த போதுதான் அன்னையின் வகிபாகம் பற்றிய ஆய்வுநூல் அறிவுக்குப் புலப்பட்டது. ஆனால் இன்று காலை வழங்க வேண்டிய கல்லூரிப் பேச்சு நிறைவு படாமலே நின்றது. ஆகவே இன்று அதிகாலையில்தான் அன்னையின் ஆய்வு நூலின் மேல் என் விரல்களைப் பரவவிட அவகாசம் கிடைத்தது.

அதில் கிடைத்த செய்தி தான் ஆசிரியர் குறிப்பிட்ட ஒரு சொற்றொடர். பக்கம் 74இல் அவர் கூறுகின்றார். "அன்னையாரின் சொல்லும் செயலும் சாதாரணமானவர்களுக்கே உரியது" என்று. முற்றிலும் உண்மையான அந்தக் கூற்றை ஒட்டியே ஒரு சில வார்த்தைகள் கூற விழைகின்றேன். அன்னையாரின் சொற்கள் பாமரர்களுக்குத் தெட்டத் தெளிவாகத் தெரியவைப்பதாய் அமைந் திருந்தன. தன் புலமைத்துவத்தைப் புரியாதவர்களின் புலன்களுக்குள் புகவைப்பதை அவர் விரும்பவில்லை. சைவசித்தாந்தக் கருத்துக்களை கல்வி வளம் பெறாத பாமர மக்களும் புரிந்து கொள்ளத் தக்க வகையிலேயே அன்னையாரின் தத்துவப் பேச்சுக்கள் அமைந்திருந்தன. பதி என்றால் என்ன என்று எளியவர்களும் புரிந்து கொள்ளும் விதத்தில் பின்வருமாறு கூறியுள்ளார்.

"சைவம் என்பது சிவத்தை முழுமுதலாகக் கொண்டது. சிவம் என்பதற்கு அன்பு, பூரணம், செம்மை, இன்பம், மங்கலம் எனும் பல பொருட்கள் உண்டு. அச் சிவத்தை பதி என்றும் கடவுள் என்றும் பரம்பொருள் என்றும் அழைப்பர்" என்றார்.

சைவசித்தாந்தம் எதனைக் குறிப்பிடுகின்றது என்று கூற வந்த அன்னையார் பின்வருமாறு கூறியுள்ளார். "சைவசித்தாந்தம் மூன்று உண்மைகளை அடிப்படையாகக் கொண்டது. அவை உலகினை இயக்கும் கடவுளைக் குறிப்பனவாயும், மக்களைக் குறிப்பனவாயும் மக்கள் வாழும் உலகினைக் குறிப்பனவாயும் உள்ளன".

எனவே அன்னையார் பதி, பசு, பாசம் என்ற சொற்களைப் பாவிக்காமல் கடவுள், உயிர், உலகம் என்ற பதங்களை பாமரர் நலன் கருதிப் பாவித்துள்ளார்.

இன்னுமொரு இடத்தில் "இறைவனை உருவம் கொடுத்து வழிபடும் முறை சைவ சமயத்தில் சிறப்பாக அமைந்துள்ளது. அதற்குக் காரணம் வணங்குவோருடைய மன ஒருமைப்பாட்டுக்கேயாகும். எல்லோரும் தமது மனதைக் கட்டுப்படுத்தி வணங்கும் ஆற்றல் உடையவர்கள் அன்று. அப்படியானவர்களுக்கு உள்ளத்தில் நிலை பெற்று விளங்குவதற்காகவே ஆலயங்களைக் கட்டி உருவங்களை அமைத்தனர்" என்றார். அவரின் சொற்கள் சாதாரணமானவர்களுக்கு ஏற்றவாறு வெளிவந்தன என்பதற்கு இந்தச் சில உதாரணங்கள் எடுத்துக் காட்டுக்கள் ஆவன.

அவரின் சொற்களுடன் அவரின் செயலும் சாதாரணமானவர்களுக்கு ஏற்றாற்போல் அமைந்திருந்தன. ஆசிரியர் இது பற்றி பக்கம் 72இல் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.

"...... அம்மையார் விரதத்தை அனுஷ்டித்தும் அதைப் பற்றிப் பேசியும் எழுதியும் மற்றவர்க்கு வழிகாட்டினார். ஆறுமுக நாவலர் வழிநின்று விரதத்திற்கு விளக்கம் அளித்தார். ஆலயத்திற்கு வருவோர் அனைவருக்கும் விரத அனுஷ்டானம் தொடர்பான விளக்கங்களை அளித்து முறைப்படி ஒழுக அவர்களுக்கு வழிகாட்டி நின்றார். தன் வாழ்வியலினூடாக சைவசித்தாந்த தத்துவார்த்த சிந்தனையை பாமர மக்களும் புரியும்படி செய்தவராக அம்மையார் திகழ்கின்றார் என்பது மிகையாகாது" என்றார்.

எனவே மக்களோடு மக்களாய் வாழ்ந்து மானிடர்களை வளமான வாழ்க்கை வாழ வழிவகுத்தவர் துர்க்கா துரந்தரி அவர்கள். கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்பவை அவரை நடத்தி வைத்த கைதேர்ந்த கருத்துக்கள், கண்ணியம் மிக்கவராக வாழ்ந்தார். கட்டுப்பாட்டுடன் வாழ்ந்தார். கடமையே கண்ணென்று வாழ்ந்தார்.

அன்னார் பற்றிய நூல் ஆய்வு நூலாக வெளிவருகின்றது. அன்னையாரின் ஆலயத் திருப்பணிகள் ஏராளம். ஆராய்ந்தளித்த ஆய்வுக் கட்டுரைகள் ஏராளம். அவருடைய சமயம்சார் கட்டுரைகளைப் பிரித்து நோக்குகின்றார் ஆசிரியர் பக்கம் 26இல். பேச்சும் அவரின் பெரு எழுத்தும் அவரின் மக்கள் சேவையின் பெருமாதாரங்கள். இவற்றைப் பற்றியெல்லாம் நூல் ஆராய்கின்றது.

1925ம் ஆண்டு ஜனவரி மாதம் ஏழாந் திகதி தெல்லிப்பளையில் பிறந்த அன்னையார் படித்துப் பண்டிதையாக முதலில் வெளிவந்தார். காலக் கிரமத்தில் சைவத்தையுந் தமிழையும் வளர்க்க வேண்டும் என்ற ஈடுபாடு கொண்டார். அப்பொழுதுதான் அவர் தெல்லிப்பளை துர்க்கையம்மன் தேவஸ்தானத்தின் நம்பிக்கைப் பொறுப்பாளராகக் கடமையாற்றும் பேற்றைப் பெற்றார். தொடர்ந்து அந்தத் தேவஸ்தானத்தின் அபிவிருத்திக்கு, வளர்ச்சிக்கு ஆழ்ந்த துணையாக இருந்தார். அவர் காலக் கிரமத்தில் பல பொதுசேவைப் பணிகளில் ஈடுபட்டார். சைவத் தமிழ் ஆய்வு நூலகம், சிவத்தமிழ்ச் செல்வி அன்னை இல்லம், ஸ்ரீ துர்க்காதேவி அன்னசத்திரம், துர்க்காபுரம் மகளிர் விடுதி போன்ற பலதையும் அவர் பார்த்துப்

பராமரித்து வந்தார். சைவ சமயிகள் அவரைத் "துர்க்கா துரந்தரி" என்று பட்டமளித்து அழைத்தனர். 1991ஆம் ஆண்டில் அரசாங்கம் அவருக்கு கலாசூரி பட்டம் அளித்தது. 1998ம் ஆண்டில் யாழ். பல்கலைக்கழகம் அவருக்குக் கௌரவ கலாநிதிப் பட்டமளித்தது.


மொத்தத்தில் அறிவிலும், அன்பிலும், ஆற்றலிலும் சிறந்து விளங்கிய அன்னை யார் எமது மக்களுக்கு, விசேடமாக எமது மகளிர்களுக்கு ஒரு எடுத்துக்காட்டாக விளங்குகின்றார். அவர் பணிகளை மற்றை யோர் கொண்டு நடத்த வேண்டும். இப்பேர்ப்பட்ட நூல்கள் அன்னையாரின் நினைவை மனதில் இருந்து நீங்க விடாத தன்மை வாய்ந்தன.


நல்லதொரு நூலை நமக்களித்த ஆசிரியருக்கு நன்றி. அதனை ஆவணப் படுத்தியமைக்கு அகில இலங்கை இந்து மாமன்றத்தினருக்கு நன்றி. அன்பான அழைப்பை எனக்களித்த தம்பி நீல கண்டனுக்கு நன்றி. அனைத்தையும் பொறுமையுறக் கேட்ட அனைவருக்கும் நன்றி.

*அன்புடன் விடை பெறுகின்றேன்.*

*நன்றி! வணக்கம்.*

## கவளாவத்தை அருள்மிகு ஞானவைரவர் கோயில் மஹா கும்பாபிஷேக நிகழ்வின் போது...





# காற்றுத்தலம் - திருக்காளத்தி

டாக்டர் ச.வே. சுப்பிரமணியன்

கரும்புதேன் கட்டியுங் கதலியின் கனிகளும் அரும்புநீர் முகலியின் கரையினி லணிமதி
ஒருங்குவார் சடையினன் காளத்தி யொருவனை
விரும்புவா ரவர்கடாம் விண்ணுலகாள்வரே - சம். 294:4

சென்னையிலிருந்து 80 மைல் தொலைவில், சென்னை - திருப்பதிச்சாலையில் இருக்கும் இத்தலம் ஆந்திரப் பிரதேச எல்லையுள் அமைந்துள்ளது.

காளஹஸ்தி என வடமொழியில் குறிக்கப்படும் இத்தலம், ஐம்பூதத் தலங்களுள் ஒன்றாக அமையும் சிறப்புடையது. பிற தலங்கள் நிலம், நீர், தீ, ஆகாயம் ஆகிய பூதங்கட்கு உரியனவாக, இக்காளத்தி காற்றுத்தலம் எனச் சிறப்பிக்கப்படுகின்றது.

திருக்காளத்தி, சைவர்களால் தென்கயிலாயம் எனப் போற்றப்படுகின்றது. நக்கீரர் பாடிய 'கயிலைபாதி காளத்தி பாதி அந்தாதி'யும் கயிலையோடு ஒத்து வைத்துக் கருதப்படும் பெருமை காளத்தி பெற்றதையே காட்டுகின்றது.

இத்தலத்திற்கு மூத்த நாயனார் மூவரும் பாடிய தேவாரங்களும் உண்டு. பட்டினத்துப் பிள்ளையாரும் இதனைப் பாடியுள்ளார். திருக்காளத்தி உலா, காளத்திப் புராணம் என்பனவும் இத்தலச் சிறப்புக்கு வெளிப்படைச் சான்றுகளாகும்.

சீகாளத்தி என்ற இவ்விடத்தின் பெயர், சிலந்தியும் (சீ), பாம்பும் (காளம்) யானையும் (அத்தி) வழிபட்டுப் பேறுபெற்ற காரணத்தை அடிப்படையாகக் கொண்டு எழுந்தது என்பர். சேக்கிழாரின் பெரிய புராணம், திருஞானசம்பந்தர் புராணத்தில (1020), 'இந்தமலைகாளனோடத்தி தம்மிலிகளி வழிபாடு செய்விறைவர் மேவு, மந்தமில் சீர்க் காளத்தி மலையாம்' எனக் குறிக்கின்றது. இன்றும் காளத்தித் திருக்கோயிலின் உட்சுற்றில் சிலந்தி, பாம்பு, யானை இவற்றின் திருவுருவைக் காணலாம். அவ்வாறே, இத்தலத்து இறைவனின் சிவலிங்கத் திருமேனி இரண்டு நீண்ட யானைக் கொம்புகள் கூடியன போன்றுளது. அதன் உச்சியில் ஐந்தலைப் பாம்பின் படமும் அடியிற் சிலந்தி யுருவமும் இன்றும் காணப்படுகின்றன. தலத்தின் பெயரைப் போன்றே இறைவனும் 'சீகாளத்தி' யாய் விளங்குகின்றார்.

பொன்முகலியாற்றின் கீழ்க் கரையில் திருக்காளத்தி மலையடிவாரத்திலிருக்கும் இக்கோயில், ஐந்து கோபுரங்களுடன் அழகாகத் தோற்றமளிக்கின்றது. இறைவனின் அருகுள்ள திருவிளக்குச் சுடர் அசைவு, காற்றுத் தலம் எனப்படும் இதன் பூத நிலைக்கு ஏற்ப அமைந்துள்ளது.

இங்கு எழுந்தருளியிருக்கும் இறைவன் சிவபெருமான்,

வானவர்க டானவர்கள் வாதைபட,
வந்ததொரு மாகடல்விடம்
தானமுது செய்தருள் புரிந்தசிவன்,
மேவுமலை தன்னை வினவில்
ஏனமின மானினொடு கிள்ளைதினை,
கொள்ளவெழி லார்கவணினால்

கானவர்த மாமகளிர் கனகமணி,
விலகுகா ளத்திமலையே. – சம் 327-1

காளத்தியப்பர் எனவும் குறிக்கப்படு கின்றார். குடுமித்தேவர் என்ற பெயர் வேறுபாடு கண்ணப்பநாயனார் புரா ணத்தில் உள்ளது. கணநாதர் எனத் தேவாரம் குறிக்கின்றது : 'கண்டார் காத லிக்குங் கணநாத னெங்காளத்தியாய்' (சுந்தரர் – 26-1). பொது நிலையில் காளத்திநாதர் என்ற பெயர் குறிக்கப்படு கின்றது. இறைவி ஞானப்பூங்கோதை என்பதைத் 'தேனார்ந் துக்க ஞானப்பூங் கோதையாள் பாகத்தான் காண்' என்ற அப்பர் தேவார அடிகள் உணர்த்துகின்றன. காளத்தி உள்ளிருந்த ஒளியே (26-9) காளத்தியுள் அறிவே (26-4) என்பன இறைவன் பெருநிலையைச் சுட்டுகின்றன.

கண்ணப்பரின் தொடர்பால் இக்காளத்தி கயிலாயத்திலும் சிறந்ததாக அரனடியரால் போற்றப்படுகின்றது. காளத்தியைப் பாடும் போது கண்ணப்பரைப் பிரித்து நினைக்க இயலாத நிலையில் இணைந்த சிறப்பு இது. 'திருக்காளத்திக் கண்ணப்பர்' (650) எனவே பெரியபுராணமும் குறித்தது.

வாய் கலசமாக வழிபாடு செயும்
வேடன் மலராகு நயனம்
காய் கணையினா லிடந் தீசனடி
கூடு காளத்தி மலையே, – சம் 327-4

எனத் தேவாரம் சிறப்பிக்கின்றது.

இறைவன் சந்நிதியில் கண்ணப்பர் வெளிப்பட எழுந்தருளியுள்ளார்; அத்துடன், மலையின் கண் நான்கு இடங்களில் கண்ணப்பர் சந்நிதி அமைந்துள்ளது எனும் செய்திகளும் தெரிய வருகின்றன. கண் ணப்பநாயனார் புராணப்பாடல், இறை வனாணைப் படியே கண்ணப்பர் திருவுரு இறைவன் அருகு எழுந்தருளியது எனும் உண்மையை விளக்குகின்றது.

பேறினி யிதன்மே லுண்டோ? பிரான் றிருக் கண்ணில் வந்த
ஊறுகண் டஞ்சித் தங்க ணிடந்தப்ப வுதவுங்கையை
வேறுயர்த் தவர்தங் கையாற் பிடித்துக் கொண் "டென்வலத்தின்
மாறிலாய்! நிற்க" வென்று மன்னுபே ரருள்பு ரிந்தார் – பெரிய : 829

இத்தலத் தருவாகக் கல்லாலும், நீராகப் பொன்முகலியும் அமைந்த செய்தி, பட்டி னத்தார் பாடலிலிருந்தும் தெளிவாகின்றது.

'.......... பொன் முகலிக்
கரைக்கே கல்லாலி னிழற்கீ ழமர்ந்தருள்
காளத்தியே' – *காளத்தி : 5*

இயற்கை வளனும் அழகும் நிறைந்த இத்தலத்தை தேவார அடிகள் தெளிவாக வருணிக்கின்றன:

களியார் வண்டறையும் திருக்காளத்தி
*சுந். 26-9*

காராரும் பொழில் சூழ் காளத்தி –
*சுந். 26-10*

பல்பல இருங்கனி பருங்கி மிக வுண்டவை நெருங்கியினமாய்க்
கல்லதிர நின்று கருமந்தி விளையாடு
காளத்திமலை – *சம். 327-3*

கருநீல வண்டரற்றுங் காளத்தி
– *அப். 221-12*

என்பன அவற்றுள் சில. சம்பந்தர் தரும் வருணனைகள் கற்பனைத் திறனும் கவிநயனும் பொருந்தி அமைந்துள்ளன.

இத்தலத்தின் பொதுச் சிறப்பு, 'அட்டமா சித்திகள் அணைதரு காளத்தி (294–11), சங்கரர் விரும்புமலை (327–2) என்பதனால் புலப்படுகின்றது.

இறைவழிபாட்டு நிலையில் தலத்தின் சிறப்பும் அங்கங்குச் சுட்டப்படுகின்றது. அடியாரும் தேவரும் வழிபடும் பெருமையுடையது காளத்தி :

நெறியே நின்றடியார் நினைக்கும் திருக்காளத்தி – சுந். 26–4

முடியால் வானவர்கள் முயங்கும் திருக்காளத்தியாய் – சுந். 26–7

ஆறுநாள் வழிபட்டு உய்ந்த கண்ணப்பர் இறைவழிபாடு செய்த காளத்தியில் வழிபட உய்வு பெறுவோம் எனும் பெருநிலையும் உண்டு. சம்பந்தர் பதிகம் இதனைப் பெரிதும் பாராட்டுகிறது.

ஓங்குவண் காளத்தி யுள்ளமோ குணர்தர
வாங்கிடும் வினைகளை வானவர்க்
கொருவனே

*– சம். 294–10*

காளத்தி அடிகளை அடிதொழ
வீங்கு வெந் துயர்கெடும் வீடெளி தாகுமே

*– 294–3*

காளத்தி ஒருவனை விரும்புவார்
அவர்கள் தாம் விண்ணுலக காள்வரே

*– 294–4*

இச்சிறப்பு நிலையால்,

காளத்தி விண்ணவன் நிரைதரு கழலினை
நித்தலும் நினைமினே

*– 294–5*

அண்ணலார் காளத்தி ஆங்கணைந்
துய்மினே *– 294–9*

என வேண்டுகோள் விடுக்கின்றார் சம்பந்தர்.

சம்பந்தரும், சுந்தரரும் இத்தலத்தில் வழிபட்டு, இங்கிருந்தபடியே கயிலாயத்தை எண்ணித் திருப்பதிகங்கள் பாடினர். அப்பர் சுவாமிகள், காளத்திநாதரைக் கண்டு இன்புற்றுப் பின் கயிலாயம் போக நினைத்து, அதில் ஈடுபட்டார். 'கயிலாயத் துச்சியுள்ளான் காளத்தியான்' என்ற தொடர் அவர் காளத்திநாதரிடம் கொண்ட ஈடு பாட்டை விளக்கும்.

திருக்காளத்திக் கோயில் கி.பி. 12–ம் நூற்றாண்டில் கட்டப்பட்டிருக்க வேண்டும். நூற்றுக்கால் மண்டபம், காளிகோபுரம் முதலியன பதினாறாம் நூற்றாண்டின் முற்பகுதியில் விஜயநகர மன்னர்களால் கட்டப்பட்டன என்ற செய்தி திருவண்ணா மலைக் கோயில் கல்வெட்டொன்றால் தெரியவருகின்றது.

இக்கோயிலை தேவகோட்டை மெ.அரு. குடும்பத்தினர் பல இலட்சங்கள் செலவிட்டுப் புதுப்பித்து 1912–ல் கும்பாபி ஷேகமும் நடத்தி வைத்தனர். நகரத்தார் அன்பர் பலர் இங்கு நந்தவனம், பசுமடம், நகரவிடுதி, வேதபாடசாலை என்பன அமைத்துள்ளனர்.

கோங்கமே குரவமே கொன்றையம் பாதிரி
மூங்கில்வந் தணைதரு முகலியின் கரையினில்
ஆங்கமர் காளத்தி யடிகளை யடிதொழ
வீங்குவெந் துயர்கெடும் வீடெளி தாகுமே.

*– சம்பந்தர் 294–3*

*நன்றி : திருவண்ணாமலை*
*கும்பாபிஷேமலர் 4–4–1976*

# ஐயனார் வழிபாடு

வித்துவான். திரு. வி. சா. குருசாமிதேசிகர் எம். ஏ.

### கிராம தேவதைகள்

ஐயனார் – ஹரிஹரபுத்திரர், சாஸ்தா, வனரக்ஷகர், ஐயப்பன் முதலிய பல பெயர்களால் வழிபடப்பெறும் தெய்வமாவார். நம் நாடடில் சிவபெருமான் திருக்கோயிலை ஊர்நடுவே அமைத்து ஊரின் நான்கு புறங்களிலும் ஊர்க்காவல் தெய்வங்களாக மாரியம்மன் பிடாரி, ஐயனார் முதலிய தெய்வங்களை எழுந்தருளச் செய்து மக்கள் வழிபட்டனர்.

கிராமங்களில் மழையில்லாத காலத்திலும், அம்மை, காலரா முதலிய பிணிகள் வரும் காலத்திலும் மாடுகளுக்குக் கோமாரி முதலிய நோய்கள் வரும் நேரத்திலும் மக்கள் இத்தெய்வங்களை வழிபட்டு நன்மைகள் பெற்றுவருவது கண்கூடாகும். போகம் மோக்ஷம் எனப் பெறும் பெரும் பயன்களைப் பெறுவதற்குரிய தெய்வமாகச் சிவபெருமானையும் அவ்வப்போது நமக்கு ஏற்படும் இடையூறுகளைப் போக்கிக் கொள்ள கிராம தேவதைகளையும் மக்கள் வழிபட்டு வருகின்றனர். ஐயனாரின் பிறிதொரு அவதாரம் ஐயப்பன் ஆவார்.

ஐயப்பன் வழிபாடு கேரளத்தில் சிறப்பாகப் போற்றப்பெற்று வருகிறது. இன்று தென்னாட்டில் நகரங்களிலும் கிராமங்களிலும் பல லட்சம் மக்கள் ஐயப்பன் வழிபாட்டை மேற்கொண்டு குறிப்பிட்ட காலங்களில் கேரள நாட்டிலுள்ள சபரிமலைக்கு யாத்திரை சென்று வருகின்றனர்.

ஒரு மண்டலகாலம் காலை, மாலை, இருவேளைகளிலும் நீராடித் தியானம் செய்தல் க்ஷவரம் செய்து கொள்ளாமலிருத்தல், உணவு உடை இவைகளில் சில நியதிகளை மேற்கொள்ளுதல் போன்ற சில நெறி முறைகளை மேற்கொண்டு சாமியே சரணம் ஐயப்பா' சொல்லிக் கொண்டு மக்கள் ஐயப்பன் வழிபாட்டைச் செய்கின்றனர். விரத முடிவில் இருமுடி சுமந்து சபரிமலை யாத்திரை செய்து ஐயப்பனை வழிபட்டு நன்மைகள் பலவும் பெறுகின்றனர்.

இந்நோன்பை மேற்கொள்வோர் விரதம் முடிந்ததும் தாங்கள் மேற்கொண்ட தியானம் வழிபாடு முதலிய பழக்கங்களைக் கைவிடாமல் தொடர்ந்து கடைப்பிடித்து வந்தால் மேலும் பல பயன்கள் விளையும்.

ஐயனார் வரலாற்றையும் ஐயப்பன் வரலாற்றையும் பற்றிய சமய நூற் கருத்துக்களை இக்கட்டுரையில் தொகுத்துக் காண்போம்.

### உ. ஐயனார் தோற்றம்

முன்னொரு காலத்தில் திருமால் முதலிய தேவர்களும், அசுரர்களும் அமுதம் பெறவேண்டித் திருப்பாடற் கடலைக் கடைந்தனர். சிவபெருமான் திருவருளால் திருப்பாற்கடலில் அமுத கலசம் தோன்றிற்கு. அதைக் கண்ட தேவர்களும் அசுரர்களும் தனித்தனியே 'இது எங்கள் முயற்சியால் வந்தது ஆதலால் எங்களுக்கே உரியது' என்று

கூறித் தங்களுக்குள் சண்டையிட முற்பட்டனர். அதனைக் கண்ட திருமால் பிணக்கை ஒழிக்கவும், தேவர்களே சாவா மருந்தாகிய அமுதத்தை உண்டு இறவாமல் வாழவும் விரும்பி மூவுலகத்தாரும் மையல் கொள்ளும் மோகினி வடிவத்தை எடுத்தார். அம்மோகினியின் அழகைக் கண்ட அவுணர்கள், அமுதத்தைப் பெற விரும்பும் முயற்சியைக் கைவிட்டு ஆசை மேலிட்டுக் கொண்டு மோகினியைச் சுற்றிவர முற்பட்டனர்.

**திருமாலின் சூழ்ச்சி :**

மோகினி வடிவம் கொண்ட திருமால் தன்னைச் சுற்றிவரும் அசுரர்களை நோக்கி உங்களுக்குள் சிறந்த வீரன் எவனோ அவனே என்னை அடைதற்கு உரியவன் என்றார். அசுரர்கள் அனைவரும் நானே வலியவன், நானே வீரன் என்று கூறித் தங்களுக்குள் சண்டையிட்டுக் கொண்டு இறந்தனர். இராகு கேதுக்களாகிய அசுரர் இருவர் மட்டும் தேவர்களோடு கூடிக் கள்ளத்தனமாக அமுதமுண்டு திருமாலால் தலை துணிக்கப்பட்டுக் கரும்பாம்பும் செம்பாம்புமாகி அமுதமுண்ட மகிமையால் ஒன்பது கிரங்களில் இருவராக எண்ணப்படும் பெருமையைப் பெற்றனர்.

**சிவபிரானும் மோகினியும்**

தேவர்களுக்கு அமுதமளித்தபின் திருமால் மோகினி வடிவோடு திருப்பாற் கடலின் கரையில் அமர்ந்து இருந்தார். சிவபெருமான் தனது நால்வகைச் சக்திகளில் திருமாலும் ஒருவர் என்பதை அறிவித்தருளும் பொருட்டு அழகிய திருவுருவோடு அங்கு வந்தார். மோகினியைக் கண்டு காதல் கொண்டார். மோகினியும் சிவபிரானிடம் காதல் கொண்டார். சிவபெருமான் மோகினியைத் தழுவ வந்தார். அப்போது திருமால் நான் ஆடவன்; அடியேனைத் தாங்கள் வந்து கூடுதல் முறையோ என்று கூறினார். பெருமான் திருமாலை நோக்கி நமது சக்தி நான்கு வகையான பெயர் களோடு விளங்குவாள்; எனக்கு மனைவி யாகும் போது பவானி என்றும், கோபம் கொண்டபோது காளி என்றும், போர் செய்யும் போது துர்க்கை என்றும், ஆணுருவடையும் போது திருமால் என்றும் பெயர் பெறுவாள்; ஆதலின் நீ எமக்கு சக்தியே யாவாய்' என்று கூறினார். நாம் முன்பு தாருகாவனத்திற்குப் பிக்ஷாடனராய்ச் சென்றபோது நீயும் மோகினி வடிவந்தாங்கி வந்து நம்மைக்கூடிப் பிரமனைப் பெற்றாய் அல்லவா? இன்றும் அதுபோல உன்னைக் கூட வந்துள்ளோம் என்று கூறி மோகினியின் கரத்தைப் பற்றினார். மோகினியும் உடன்பட்டார். நாவலந்தீவில் தேக்கு மரத்தடியில் இருவரும் கூடியின்புற்றனர்.

**ஹரிஹரபுத்திரர் :**

சிவபெருமானும் திருமாலும் இவ்வாறு கூடிய காலத்தில் கருங்கடல் போன்ற மேனியும், செவ்வானம் போன்ற சடையும், செண்டாயுதம் ஏந்திய திருக்கரமும் போற்றுதற்குரிய வீரமும் கொண்டவராய் ஞானியர் போற்றும் பெருமையும் நன்மையே புரியும் கருணையும் உடைய ஐயனார் திருவவதாரம் செய்தார். சிவபெருமான் அவருக்கு ஹரிஹர புத்திரர் எனத் திருப்பெயர் சூட்டினார். பல வரங்களையும் தந்தார். உருத்திரர்களுள் ஒருவராக்கினார். ஒரு புவனத்தைக் கொடுத்து, தேவர்களும் முனிவர்களும் வணங்கும் தலைமை அளித்து, அவரைப் புவனத் தலைவராக்கி

னார். உலகங்கள் அனைத்தையும் காத்துக் கொண்டிருக்கும் பெருவரம் அளித்தார்.

**மைக்க ருங்கடல் மேனியும் வானுலாம்**
**செக்கர் வேணியும் சென்டுறு கையுமாய்**
**உக்கிரத் துடன் ஓர்மகன் சேர்தலும்**
**முக்கண் எந்தை முயக்கினை நீங்கினான்.**
**அத்த குந்திரு மைந்தற்கு அரிகர**
**புத்திரன் எனும் நாமம் புனைந்துபின்**
**ஒத்த பான்மை உருத்திரர் தம்மொடும்**
**வைத்து மிக்க வரம்பல நல்கியே**
**புவனம் ஈந்து புவனத் திறையென**
**அவனை நல்கி அமரரும் மாதவர்**
**எவரும் ஏத்திடும் ஏற்றமும் நல்கினான்**
**சிவனது இன்னருள் செப்புதற் பாலதோ.**

*– கந்தபுராணம் – மகாசாத்தாபடலம்*

ஐயனார் சிவகுமாரர்களில் விநாயகர் முருகன் ஆகியோரின் இளவலாகும் பெருமையைப் பெற்று, சிவபெருமான் ஆணைப்படி, தம் கடமைகளைச் செய்து கொண்டு விளங்கி வருகின்றார் என்பது கந்தபுராணத்தில் காணப்படும் ஐயனார் திருவவதார வரலாறாகும்.

**பாத்மபுராணத்தில் :**

பஸ்மாசுரன் என்பவன் சிவபெருமானைக் குறித்துத் தவம் செய்து 'யார் தலையில் கை வைக்கின்றேனோ அவர் உடனே பஸ்மமாக வேண்டும்' என்ற வரத்தைப் பெற்றான். தான் பெற்றவரம் சரியானதுதானா என்பதைத் தெரிந்து கொள்ள விரும்பிய பஸ்மாசுரன் வரமளித்த சிவபெருமான் தலையிலேயே கைவைக்க ஓடினான். சிவபெருமான் அஞ்சியது போல மறைந்தார். ஐவேலிக் காய் எனப்படும் சிவலிங்கக்காயில் மறைந்திருந்தார் என்றும் சிலர் கூறுவர்.

வரம்பெற்ற பஸ்மாசுரன் உலகையே அழிக்க முற்பட்டான். திருமால் பஸ்மாசுரனின் செய்கையை அறிந்தார். மோகினி வடிவோடு சென்று அவனை அணுகினார். பஸ்மாசுரன் மோகினிடம் மயங்கினான். தான் பெற்ற பெருவரத்தை மோகினியிடம் தெரிவித்தான். திருமால் பஸ்மாசுரனை நோக்கி வரம்பெற்றால் மட்டும் போதுமா? வரத்தைப் பயன்படுத்துவதற்கு உரிய மந்திரத்தைச் சொல்லுமுன் கரநியாசம் அங்கநியாசம் செய்ய வேண்டாமா? என்றார். பஸ்மாசுரனும் அவ்வாறே அங்க நியாசம் செய்ய முற்பட்டு 'சிரசே சுவாகா' என்று கூறித் தன்கையைத் தானே தன் தலையில் வைத்துக் கொண்டு பஸ்பமானான். மோகினி தன்னை அடைய வேண்டுமானால் எண்ணெய் தேய்த்துக் குளித்துவா என்று கூறியதாகவும் பஸ்மாசுரனின் தலையில் எண்ணெய் தேய்ப்பதற்காகக் கையை வைக்கும்போது அழிந்ததாகவும் கூறுவது உண்டு. பஸ்மாசுரன் அழிந்த பின் சிவபெருமான் வெளிப்பட்டார்; திருமால் மோகினி அவதாரமெடுத்து அவனை அழித்ததை அறிந்தார். இருவரும் தாருகாவனத்து முனிவர்களின் செருக்கை அழிக்க மோகினியாகவும் பிக்ஷாடனராகவும் சென்றனர். அப்போது ஐயனார் அவதரித்தார் என்று பாத்மபுராணம் கூறுகிறது.

**௩. இந்திராணியைக் காத்தருளியது**

கந்தபுராணத்தில் சூரபத்மனுக்கு அஞ்சிய இந்திரன் தன் மனைவியோடு சீகாழிக்கு வந்து மூங்கிலாய் மறைந்து தங்கித் தவம் செய்ய முற்பட்டான். சூரபத்மனிடமிருந்து தன் மனைவி இந்திராணியைக் காத்தருளுமாறு ஐயனாரை வேண்டினான். ஐயனார் பூதகணங்கள்

புடைசூழ வெள்ளையானையின் மேல் பூரனை, புட்கலை என்னும் இருபெரும் தேவியரோடு இந்திரனுக்குக் காட்சி தந்தார். இந்திரன் சூரபத்மன் கொடுமை யால் தேவர்கள் துயருறுவதையும், அதனைச் சிவபெருமானிடம் தெருவிக்கத் திருக் கயிலை செல்வதையும் கூறித் தான் கயிலை சென்று திரும்பி வரும்வரை இந்திராணியை அடைக்கலமாக ஏற்றுக் காப்பாற்றவேண்டுமென்றும் கேட்டுக் கொண்டான். ஐயனாரும் அதற்கிசைந்து தனது வீரருள் மகாகாளார் என்பவரை இந்திராணிக்குக் காவலாக இருக்குமாறு கூறி மறைந்தார்.

சூரபத்மனின் தங்கை அஜமுகி என்பாள் அங்குவந்து இந்திராணி தவம் புரிவதைக் கண்டு அவளைத் தூக்கிக் கொண்டு போய்த் தன் தமையன் சூரபத்மனுக்கு அளிக்க விரும்பினாள். முடிவில் இந்திராணியை அழைத்தான். அவள் மறுக்கவே அவளை அஜமுகி தன் கைகளால் பிடித்து இழுத்தாள். அஞ்சி நடுங்கிய இந்திராணி,

**பையரா அமளி யானும் பரம்பொருள் முதலும் நல்கும்**
**ஐயனே! ஓலம்; விண்ணோர்க்கு ஆதியே! ஓலம்; செண்டார்**
**கையனே! ஓலம்; எங்கள் கடவுளே! ஓலம்! மெய்யர்**
**மெய்யனே! ஓலம்; தொல்சீர் வீரனே! ஓலம்; ஓலம்;**

**ஆரணச் சுருதியோர்சார் அடலுருத் திரன்என்று ஏத்தும்**
**காரணக் கடவுள்! ஓலம்; கடல்திறத்து எந்தாய்! ஓலம்;**
**பூரணைக்கு இறைவா! ஓலம்! புட்கலை கணவா ஓலம்;**
**வாரணத்து இறைமேல் கொண்டு வரும்பிரான்! ஓலம்.**

என்று ஐயனாரை விளித்துத் தன் அபயக் குரலை வெளிப்படுத்திப் பலவாறு கதறினாள்.

அபயக்குரல் கேட்ட ஐயனாரின் படைத் தலைவர் மகாகாளர் தன் வாட்படையைச் சுழற்றிக் கொண்டு இடிபோல் ஆரவாரித்து வெளிப்பட்டார். அஜமுகியைத் தடுத்தார். அவர் வார்த்தையைக் கேட்க மறுத்த அஜமுகி முத்தலைச் சூலத்தையும் மலை யையும் அவர் மீது எறிந்தாள். மகாகாளர் அவற்றைப் பொடிபடுத்தித் தன் ஆணையைக் கேளாது இந்திராணியைத் தீண்டிய அஜமுகியின் கையை வெட்டினார். காலால் அவளை இடறி ஓட்டினார். இந்திராணியைக் காத்த ஐயனார் கோயில் சீகாழியில் தென்பாதித் தெருவில் உள்ளது. இவ்விடத்திற்குக் கைவிடான் சேரி என்று இப்போது பெயர் வழங்கி வருகிறது.

சூரபத்மனுக்குப் பயந்த இந்திரன் கோமுத்தீசுரம் என்னும் திருவாவடு துறைத் தலத்தில் தங்கித் தவம் புரிந்தான். அஜமுகி இந்திரனைக் கண்டு காதல் கொண்டு அவனைப் பலவந்தமாக அணைய முற்பட்டாள். அதன் காரணமாக கருவுற்ற அஜமுகி கிருத்தியா என்ற பெண் குழந்தையைப் பெற்றாள். கிருத்தியை கண்ணில் கண்ட பொருள் களையெல்லாம் வாரி விழுங்கி நாச மாக்க முற்பட்டாள். ஐயனார் சிவபெருமான் ஆணைப்படி அவளைக் கடலில் எறிந்து உலகைக் காத்தருளினார்.

## 4. திருவுலா வெளியிட்ட திருப்பிடவூர் ஐயனார்

சுந்தரமூர்த்தி சுவாமிகள் சேரமான் நாயனாரோடு திருவஞ்சைக் களத்தில் தங்கியிருந்தபோது ஒரு நாள் அஞ்சைக் களத்து இறைவனை வேண்டி இவ்வுலக வாழ்வு போதும் என்னை ஏற்றருள் என்ற குறிப்புடைய திருப்பகம் பாடி வழிபட்டார். பெருமான், இந்திரன், மால், பிரமன் முதலிய தேவர்களை அனுப்பிச் சுந்தரரை

வெள்ளை யானை மீது ஏற்றித் திருக் கயிலைக்கு அழைத்து வருமாறு கட்டளை யிட்டார். சிவபிரான் அருளியவாறு தேவர்கள் திருவஞ்சைக்களம் வந்து சுந்தரரை வெள்ளை யானை மீது ஏற்றித் திருக்கயிலாயத்திற்கு அழைத்துச் சென் றனர். சுந்தரர் சேரமான் பெருமாளை மனத்தில் நினைத்துக் கொண்டே கயிலை சென்றார். சுந்தரர் கயிலை செல்வதை அறிந்த சேரமான் பெருமாளும் ஒரு குதிரையைக் கொண்டுவரச் செய்து அதன் காதில் திருவைந்தெழுத்தை ஓதி அக்குதிரை மீது ஏறிச் சுந்திரரை வலம் வந்து கயிலை சென்றார் சுந்தரர். திருக் கைலாயம் சென்று இறைவனை வணங்கி னார். சேரமான் பெருமாள் தன்னோடு உடன் வந்திருப்பதை விண்ணப்பித்தார். இறைவன் நந்திதேவரிடம் சேரர் கோவை உள்ளே அழைத்துவரக் கட்டளையிட்டார். உள்ளே வந்த சேரர் காவலரைச் சிவ பிரான் இங்கு நாம் அழையாமல் வந்தது ஏன் என வினவினார். சேரமான் பெருமாள் சுந்தரரைப் போற்றி வந்தேன் என்று கூறித் தாம் பாடியருளிய திருக்கயிலாய ஞான உலாவைப் பாடி வணங்கினார். சிவபிரான் அதனைக் கேட்டு மகிழ்ந்து அவரைச் சிவகணத் தலைவராக இருக்குமாறு அருள்பாலித்தார். திருக்கயிலையில் சேரமான் பாடியருளிய திருக்கயிலாய ஞான உலாவை அங்கிருந்து கேட்ட ஐயனார் தென்னாட்டில் திருப்பிட வூருக்குக் கொண்டுவந்து தமிழக மக்கள் அறிந்துய்யுமாறு வெளிப்படுத்தினார். இது பெரிய புராணத்தில் காணப்படும் ஐயனாரின் அருளிச் செயலாகும்.

திருப்பிடவூர் திருச்சிராப்பள்ளி யிலிருந்து பெரம்பலூர் செல்லும் வழி யிலுள்ளது. இங்குள்ள ஐயனார் கையில் திருக்கயிலாய ஞான உலா உள்ளது. இவ்வையனாரை மக்கள் அரங்கேற்றிய ஐயனார் என அழைக்கின்றனர்.

**5. ஆகமங்களில்**

சாஸ்தா என்ற சொல்லுக்கு உலகங் களை ஆள்பவர் என்றும் ஆணை செய்பவர் என்றும், மக்கள் மனங்களில் ஊடுருவியர் என்றும் பொருள்கள் கூறப்படுகின்றன.

ஐயனார் பதினாறு பேதங்களை உடையவர் என்று தியானரத்னாவளி என்ற ஆகம பத்ததி கூறுகிறது. ஐயனாரின் பதினாறு பேதங்கள்

1. மதசுஸசாஸ்தா
2. மோகினி சாஸ்தா
3. அமிருதசாஸ்தா
4. கிராமசாஸ்தா
5. உக்ரசாஸ்தா
6. வீரசாஸ்தா
7. லக்ஷ்மீசாஸ்தா
8. பாலசாஸ்தா
9. மதனசாஸ்தா
10. பீஷனசாஸ்தா
11. ருத்ரசாஸ்தா
12. வரதசாஸ்தா
13. அசுவசாஸ்தா
14. சௌந்தசாஸ்தா
15. புவனசாஸ்தா
16. மகாசாஸ்தா ஆகியனவாம்

மலைகளில் பிரதிஷ்டிக்கப்படும் சாஸ் தாவைப் பதினாறு கைகள் உடையவ ராகவும், காட்டில் பிரதிஷ்டிக்கப்படும் சாஸ்தாவை பத்துக் கைகள் உடையவ ராகவும், நகரங்களில் பிரதிஷ்டிக்கப்படும் சாஸ்தாவை எட்டுக்கைகள் உடையவ

ராகவும், கிராமங்களில் பிரதிஷ்டிக்கப்படும் சாஸ்தாவை இரண்டு கைகள் உடையவ ராகவும் பிரதிஷ்டை செய்விக்க வேண்டு மென்று சிவாகமம் கூறுகிறது.

சாஸ்தாவின் மனைவியர் சௌகந்திகன் என்ற அரசனுடைய புதல்வி பூரணா தேவியும், அம்பாராஜனுடைய புதல்வி புஷ்களாதேவியுமாகிய இருவராவார்.

சாஸ்தாவின் பரிவாரங்கள் மகா காளன், கோப்தா, பிங்களாக்ஷன், வீர சேனன், சாம்பவன், திரிநேந்திரன், சூலி தக்ஷன், பீமரூபன் முதலியோராவர்.

சாஸ்தாவின் வாகனம்; குதிரை, யானை ஐயனார் கோவில் வாயிலில் இவ்விரு வாகனங்களும் விளங்குவதைக் காணலாம். கொடி யானைக் கொடி, கோழிக்கொடி.

சுப்ரபேதம் என்ற ஆகமத்தில் ஐயனார் இரண்டு கண்களும் இரண்டு கைகளும் கொண்டவர்; கரியமேனியில் வெண்ணிறப் பூணூல் அணிந்தவர்; ஆபரணங்கள் அணிந்தவர்; நாய் கோழி, ஆடு இவை களோடு விளையாடுபவர்; எல்லாச் சித்திகளையும் அளிக்க வல்லவர்; மதனா, வர்ணினீ என்ற இரு மனைவியருடன் திகழ்பவர்; பெருவயிறும், பேருடலும் நீளமான அளகங்களால் விளங்கும் தலையும் உடையவர்; இடதுகையில் தடியும், வலது கையில் வளைதடியும் உடையவர். பழம் தளிர் இவைகளைக் கையில் கொண்டவர்; மடக்கிய கால் மீது கையை வைத்திருப்பவர் என்று ஐயனாரது தோற்றம் கூறப்பட்டுள்ளது.

அம்சுமத்பேதம் என்ற ஆகமத்தில் ஐயனார் வெண்ணிறமேனி உடையவர் என்றும் முக்கண்ணர் என்றும், சாந்த மானவர் என்றும் வெண்பட்டாடை தரித்துப் பத்மபீடத்தில் அமர்ந்திருப்பவர் என்றும் அபயம், வரதம், கத்தி, கேடயம் இவை களைத் தாங்கும் நான்கு கைகளை உடையவர் என்றும் கூறப்பட்டுள்ளது.

பூர்வகாரணத்தில் சாஸ்தா சாந்த மூர்த்தி என்றும், இருகைகள் உள்ளவர் என்றும் கருநிறமேனியர் என்றும், தூக்கிமடக்கிய இடது கால்மீது இடது கைகளையும் தொங்கவிடப்பட்ட வலது காலையும் உடையவர் என்றும் வளைதடி வஜ்ராயுதம் உடையவர் என்றும் நீல நிறகேசம் உடையவர் என்றும், யானையை வாகனமாகவும் கொடியாகவும் கொண் டவர் என்றும், நீலம் வெள்ளை நிறங்களை உடைய குதிரை எருது ஆகியவற்றை வாகனமாகக் கொண்டவர் என்றும் வீரா சனத்திலும் யோகாசனத்திலும் வீற்றி ருக்கும் ஞானி என்றும் கூறப்பட்டுள்ளது.

சில்பரத்தினம் என்ற நூலில் ஐயனார் அழகிய அளகம் உடையவர்; குண்டலம் அணிந்த காதினர்; ஒரு கையில் வில்லும் மற்றொரு கையில் அம்பும் வைத்திருப் பவர்; நீலப்பட்டாடை தரித் தவர்; மேகம் போன்ற மேனியர்; பிரபை என்ற மனைவி யையும், சத்யகன் என்ற பிள்ளையையும் அருகில் கொண்டு சிம்மாசனத்தில் எழுந் தருளியிருப்பவர்; சிவப்பு நிற அணி கலன்கள் பூண்டவர் என்று கூறப்பட் டுள்ளார்.

மகாலக்ஷ்மி கல்பத்தில் மகா சாஸ்தா, கத்ரு சாஸ்தா, ஜவசாஸ்தா, சர்வசாஸ்தா,

சாஸ்தா, பிரசாஸ்தா என்று ஐயனார் பேதங்கள் ஆறுவிதமாகக் கூறப்பட்டுள்ளன.

ஐயனார் நிறங்கள் – வசியம் ஆகர்ஷணம் இவைகளில் செந்நிறம் கொண்டவராகவும் மோகனத்தில் கருநிறம் கொண்டவராகவும், ஸ்தாபனத்தில் பொன்னிறமுள்ளவராகவும், விஷம் போக்கும் வழிபாட்டிலும் ஞானம் பெறுவதற்கான வழிபாட்டிலும் வெண்ணிறமுள்ளவராகவும், துவேஷம் உச்சாடனம் மாரனம் இவற்றில் கருநிறமுள்ளவராகவும் ஐயனார் வழிபடப் பெறுகிறார்.

**௬. ஐயப்பன் வரலாறு**

வஞ்சிநாட்டில் ஐயனார் பூரணையை மணந்து வாழ்ந்து வருவதை அறிந்த நேபாள மன்னன் பலிஞன் தன் மகளை விடுத்து ஐயனார் பூரணையுடன் வாழ்வதைக் கண்டு வேதனையடைந்து ஐயனாரை நோக்கி "மனிதனாகப் பிறந்து பன்னிரண்டு ஆண்டுகள் பிரமசாரியாக வாழ்வாயாக' என்று சபித்தான். ஐயனாரும் நாம் நிலவுலகில் தோன்றுவதற்கு இது ஒரு காரணமாயிற்று என்று கருதி, அந்நேபாள மன்னனை நோக்கி கேரளத்தில் பந்தள தேசத்தில் நீயே மன்னனாகப் பிறப்பாய்; அங்கே நாம் குழந்தையாக உம்மிடம் வந்து பன்னிரண்டு ஆண்டுகள் வாழ்வோம்' என்று கூறி மறைந்தார்.

கேரள நாட்டில் பந்தளம் என்ற பகுதிக்கு அரசனாகப் பாண்டிய மன்னர் பரம்பரையில் இராஜசேகரன் என்ற பெயரில் நேபாள மன்னன் அரசு புரிந்தான். திருமணம் ஆகிப் பல்லாண்டுகளாகியும் புத்திரப் பேறு வாய்க்காமையினால் மனவேதனை அடைந்த மன்னன், சிவபெருமானை வேண்டிப் பணிந்தான். சிவபெருமான் திருவருளால் ஐயனார் அம்மன்னனின் குழந்தையாக வரத் திருவுள்ளம் கொண்டார். ஒரு நாள் காட்டில் வேட்டையாளச் சென்ற மன்னன் குழந்தையொன்று அழுது கொண்டிருப்பதைக் கண்டு அதனருகில் சென்றான். ஒளியும் தண்மையும் உடைய அக்குழந்தையின் முகத்தைக் கண்டு வியந்தான். பெருமான் அந்தணர் உருவில் அங்கு வந்து அரசனை நோக்கி 'மன்னா! இக்குழந்தை தெய்வாம்சம் பொருந்தியது; இதனைத் தெய்வம் உனக்கு அளித்திருக்கிறது; எடுத்துச் சென்று வளர்த்துவா' என்று கூறி மறைந்தார்.

மன்னன் மகிழ்ச்சிக் கடலில் திளைத்தவனாய் அக்குழந்தையை அரண்மனைக்கு எடுத்துச் சென்று அரசியிடம் கொடுத்து மணிகண்டன் எனப் பெயர்சூட்டி அன்போடு வளர்த்து வந்தான்.

**குருதக்ஷணை :**

மன்னன் மணிகண்டனைக் குருகுலத்தில் சேர்த்துக் கல்விபயிலுமாறு செய்தான். ஓதாமலே எல்லாவற்றையும் உணர்ந்த மணிகண்டனைப் பார்த்துக் குரு வியந்தார். மணிகண்டன் கடவுள் தன்மை பொருந்தியவர் என்று உணர்ந்த குரு, ஊமையும் குருடனுமாயிருக்கும் தன் மகனைக் குறையற்றவனாகச் செய்தருளுமாறு மணிகண்டனை வேண்டினார். மணிகண்டன் குருவின் மகனுக்கிருந்த குருட்டுத் தன்மையையும் ஊமைத் தன்மையையும் ஒழித்து, அவனைச் சிறந்த ஞானமும் உடல் நலனும் உடையவனாகுமாறு செய்தருளினார்.

**அறிவிழந்த அரசி :**

மணிகண்டரை மைந்தனாகப் பெற்ற பின் மன்னன் மனைவி ஒரு ஆண் மகனைப் பெற்றிருந்தாள். அரசனும் அக்குழந்தைக்கு இராஜராஜன் எனப் பெயரிட்டான். மணிகண்டர் தம் இளவல் இராஜராஜனோடு கூடி விளையாடி மகிழ்ந்திருந்தார்.

மன்னனின் அமைச்சன் மணிகண்டரிடம் பேராற்றலை உணர்ந்து இவர் அரசரானால் நமக்குப் பெருமை இருக்காது' என்று நினைத்து எப்படியாவது மணிகண்டரை விரட்டிவிட்டு இராஜரானை அரசானாக்க வேண்டுமென்று திட்டமிட்டான். மணி கண்டனிடம் அளவற்ற அன்பைப் பொழியும் மன்னனிடமிருந்தும் மணிகண்டனை எவ் வாறு பிரிப்பது என்று ஆராய்ந்து முடிவில் அரசியிடம் சென்றான். அவளிடம் மன்னன் மணிகண்டனையே அரசனாக்குவான் போலத் தெரிகிறது; அரச பரம்பரையில் வந்த தங்கள் புதல்வன் இந்நாட்டு மன்னனாக வேண்டுமென்றால் மணிகண்டனை நாட்டை விட்டு விரட்டவேண்டும் என்று கூறினான். அரசி 'அதற்கு வழியாது' எனக் கேட்க, அமைச்சன் அரசிக்கு ஒரு உபாயம் சொல்லிக் கொடுத்தான். 'தாங்கள் தாங்க முடியாத தலைவலியால் தவிப்பது போல நடிக்கவேண்டும்; என்னுடைய தூண்டுதலால் புலிப்பால் கொண்டு வந்து தடவினால் தான் தலைவலி தீரும் என்று மருத்துவர் கூறுவார்; அதைக் கேட்ட மணிகண்டன் தானே புலிப்பால் கொண்டு வருவதாகக் கூறி காட்டுக்குச் சென்று புலியிடம் அகப்பட்டு இறப்பான்" என்று தீயவழி கூறினான் அமைச்சன். மந்தரையின் வார்த்தையினால் மனம் மாறிய கைகேயிபோல மந்திரியின் சூழ்ச்சிக்கு பலியானாள் அரசி. அமைச்சன் கூறியவாறே தலைவலி வந்ததுபோல நடித் தாள். மருத்துவர் இந்நோய் புலிப்பாலினால் அன்றித் தீராது என்றனர். மணிகண்டர் நான் புலிப்பால் கொண்டு வருகிறேன் என்று கூறிப் புறப்பட்டார். கானகம் நோக்கிச் சென்றார்.

**மகிஷிவதம் :**

தனு என்ற அசுரனுக்கு ரம்பன் கரம்பன் என்று இரு புதல்வர்கள் இருந்தனர். ரம்பனுடைய மகன் மகிடாசுரன் துர்க்கை யினால் கொல்லப்பட்டான். கரம்பனுடைய மகள் மகிஷி எனப்படுவாள். மகிஷி பிரமனைக் குறித்துத் தவம் செய்து வரம் பல பெற்றுத் தேவருலகம் சென்று அரசு பெற்று, தேவர்களுக்கும் முனிவர்களுக்கும் இடையூறுகள் விளைத்து வந்தாள். ஐயனார் மணிகட்டராகக் கானகம் வரு வதை ஞானக் கண்களால் அறிந்த இந்திரன் முதலான தேவர்களும் முனிவர்களும் கானகம் வந்தனர். அவரை அழைத்துக் கொண்டு பொன்னம்பலமேடு சென்றனர். காந்தமலையில் பொன்னம்பலத்தில் சிங்காதனத்தில் மணிகண்டரை எழுந் தருளச் செய்து தங்களுக்கு மகிஷி என்ற அரக்கியால் ஏற்பட்ட துன்பங்களைக் கூறி, மகிஷியை அழித்துத் தங்களைக் காத் தருளுமாறு மணிகண்டரை வேண்டினர். மணிகண்டரும் உடனே தெய்வலோகம் சென்றார். மகிஷியுடன் போரிட்டு வென்று அவளைக் கொன்று தேவர்களைக் காத்தருளினார்; மீண்டும் காந்தமலை வந்து அமர்ந்து தன் தாய் புலிபால் கேட்டதை இந்திரனிடம் கூறினார். இந்திரன் புலியாக மாறினான். மணிகண்டர் அதன் மீது ஏறி அமர்ந்தார். ஏனைய தேவர்கள் பெண் புலிகளாய் உடன் வந்தனர்.

புலிமீது ஏறிப் புலிக்குழாத்துடன் வரும் மணிகண்டரைக் கண்டு நகர மக்கள் அஞ்சி ஓடினர். அமைச்சன் மயக்க முற்றான். அன்னையும் அடாது செய்ததை எண்ணி வருந்தினாள். தந்தை மணி கண்டனை வாரித் தழுவினான். மணி கண்டர் அமைச்சரைத் தெளியவைத்துத் தாயைத் தேற்றி 'அன்னையே எனக்கு அரசாளும் விருப்பம் இல்லை. இராஜ ராஜக்குப் பட்டம் கட்டி நாட்டை அரசாளச் செய்யுங்கள்; உலக நலம் விரும்பிப் பன்னிரண்டு ஆண்டுகள் உங்கள் பிள்ளை யாய் வளர்ந்தேன்; நான் வந்த காரியம் முடிந்தது. போய் வருகிறேன்' என்று கூறிப் புறப்பட்டார். தந்தையை நோக்கிச் சபரி மலையில் தனக்கு ஒரு ஆலயம் அமைக்கு மாறு கூறி விடைபெற்றுக் காந்தமலை சென்றார்.

**சபரிமலையில் சாஸ்தா கோயில் :**

மணிகண்டரின் பிரிவாற்றாது மன்னன் இராஜசேகரன் மனம் வருந்தினான். கும்பமுனி அம்மன்னனின் வருத்தத்தை மாற்றினார். சில நாட்கள் கழிந்தபின் மன்னன் தன் படைகளோடு சபரிமலை சென்றான். அங்கு சரங்குத்திய மரத்தைக் கண்டு அவ்விடத்தில் கோயில் கட்டத் தீர்மானித்தான். இரவு பொழுது வந்தது. உறங்கிய மன்னனை ஒரு பூதம் தூக்கிச் சென்று காந்தமலையில் ஐயப்பரிடம் விட்டது. மன்னன் காந்தமலையிலுள்ள பொற்கோயிலில் தேவர்கள் புடைசூழ மணிகண்டர் வீற்றிருப்பதைக் கண்டான். மணிகண்டர் தந்தையை வரவேற்று உபசரித்தார்; சபரிமலையில் அமர்ந்துள்ள கோலத்தில் ஒரு கோயில் கட்டுமாறு கூறினார். இடையூறுகள் வரின் பயன் படுத்துக என்று ஒரு கத்தியையும் வழங்கி அனுப்பினார். மன்னன் சபரிமலையில் சிறந்த சிற்பிகளைக் கொண்டு கோயில் கட்ட முற்பட்டான். இந்திரன் தானே அக்கோயிலைக் கட்டவேண்டுமென்று மன்னனைத் தடுத்தான். இருவருக்கும் போர் மூண்டது. மன்னன் மணிகண்டர் தந்த கத்தியால் இந்திரனோடு போரிட்டான். முடிவில் இந்திரன் மன்னனைச் சரண டைந்தான். மன்னனும் இந்திரனும் விசுவ கர்மாவின் துணையோடு பதினெட்டுப் படிகளுடன் கூடிய சபரிமலைக் கோயிலைக் கட்டினர். சாஸ்தாவின் திருவுருவைப் பரசுராமர் அகத்தியர் தேவர் முனிவர் சந்நிதியில் எழுந்தருளச் செய்தனர். சின்முத்திரையோடு கூடிய வலக்கரமும் முழங்காலின் மீது நீட்டிய இடக்கரமும் கொண்டவராய், குந்தியமர்ந்த கோலத்தில் சாஸ்தாவைப் பிரதிட்டை செய்தனர். சாஸ்தா சபரிமலை, அச்சன்கோயில், குளத்துப் புழை, ஆரியன்காவு, எரிமேரி முதலிய இடங்களிலும் ஐயனார் அமர்ந்து அருள் வழங்கி வருகின்றார்.

**நன்றி : ஞானசம்பந்தம்**

# அடியார்களின் வினையைக் கடவுள் எடுத்துச் சுமப்பான்

**சைவப்பெரியார் சிவபாதசுந்தரனார் அவர்கள்**

திருவருளைச் சாராதாருடைய வினையையும் பயனையும் கடவுள் சுமக்கமாட்டார். ஒருவன் வறியவனாயிருக்கும்போது அவனுடைய நல்ல சுற்றத்தவர்கள் அவனுக்குள்ள கடன்களைக் கொடுத்து அவனைத் தாங்கி வருவதுண்டு இப்படியே நல்ல சுற்றத்தவர்கள் அவனுடைய சுமையைப் பலவகையாகச் சுமக்கின்றார்கள். அதுபோல கடவுள் தம்மைச் சார்ந்த மெய்யடியாருடைய ஆகாமிய வினையையும் பிராரத்தின் பயனாகிய இன்ப துன்பங்களையும் தாமே சுமக்கின்றார். தாமே சுமத்தலாவது அவர்களிலே சாராமற்றடுத்தல், "சிவனுமிவன் செய்தியெல்லாம் என் செய்தியென்னுஞ், செய்ததெனக் கிவனுக்குச் செய்ததென்றும்" என அருணந்திதேவர் திருவாய் மலர்ந்தருளினார். ஞானவான் தன்னைக் கடவுளிடங் கொடுத்தலினால் அவன் செயலில்லாதவனாக, அவனுடைய செயலெல்லாம் சிவன் செயலாகின்றன ஆதலால் வாசனைமலமாகிய பழைய பழக்கத்தினால் தீவினையென்று சொல்லப்படும் வினைகளை அவன் செய்தானாயினும், அந்த வினைகள் அவனைச் சாரமாட்டா கண்ணப்பநாயனார் திருக்காளத்தியிலே சிவ வசமாய் நின்று நைவேத்தியத்துக்காக உயிர்களைக் கொன்றார். இந்தக் கொலைத் தொழில் வாசனாமலத்தினாலே அவருடைய கருத்தின்றிக் காயத்தினாலே செய்யப்பட்டது. நோயினால் அறிவிழந்தவர்கள் பழைய பழக்கத்தின்படி பலவகையாகப் பேசிப் பல தொழில்களையுஞ் செய்வர். இவைகள் காயத்தின் செயல்களன்றி அவர்களுடைய செயலன்று கண்ணப்பநாயனார் மிருகங்களைக் கொன்றதும் இச் செயல்களையொக்கும் அவர் சுவாமிக்கு இறைச்சியைப் படைத்தமையால், சிலர் தாமும் கடவுளுக்கு இறைச்சியைப் படைக்கலாம் என்று பிதற்றுவர். கண்ணப்பநாயனார் இறைச்சியைப் படைத்ததுமன்றித் தமது வாயிற் கொண்டுபோன நீரால் அபிஷேகஞ் செய்தனர் செருப்புக் காலைச் சிவலிங்கத்தில் வைத்தனர்,இவர்களும் வாயிற் கொண்டு போன நீரால் அபிஷேகஞ் செய்து "திருமேனியிற் செருப்புக்காலை வைக்காததேனோ? இந்த மூன்று செய்கைகளும் மெய்ஞ்ஞானிகளல்லாதார் செய்யின் மகா பாதகங்களாய் முடியும். ஆதலாற்றான் கண்ணப்பநாயனார் அவைகளைச் செய்தபொழுது அவை பாதகமாகாமற் சிவ புண்ணியமாயின என்று எடுத்துப் பாராட்டப்படுகின்றன.

**"பொருட்பற்றிச் செய்கின்ற பூசைகள் போல்விளங்கச்**
**செருப்புற்ற சீரடி வாய்க்கலசம் ஊன் அமுதம்**
**விருப்புற்று வேடனார் சேடறிய மெய்குளிர்ந்தங்**
**அருட்பெற்று நின்றவா தோணோக்கம் ஆடாமோ"**

*(திருவாசகம்)*

மெய்ஞ்ஞானிகள் "பாதகத்தைச் செய்திடினும் பணியாக்கிடுமே" என்பதற்குக் கண்ணப்பநாயனார் செயல்கள் இலக்கியமாய் நின்றன. மெய்ஞ்ஞானிகளல்லாதார் அச் செயல்களைச் செய்யின் அவை பெரும் பாதகமாய் முடியுமென்பது திண்ணம். அந்தக் கர்மம் அவரிலே சாராமல் கடவுள்

அதைத் தடுத்தார். அவர் அவ்வளவு நாளும் ஊண் உறக்கமும் தம்மைப் பற்றிய சிந்தனை யுஞ் சற்றேனுமில்லாமலிருந்ததே அவர் சிவ வசப்பட்டிருந்தாரென்பதற்குச் சாட்சி.

சிறுத்தொண்டநாயனார் சிவனடி யாராகத் தோன்றிவந்தவருடைய கட்டளை யைச் சிவபெருமானுடைய கட்டளையாகப் பாவித்துச் சிவ வசமாய் நின்று தம்முடைய குழந்தையைக் கொன்றார். ஆதலால் அந்த வினை அவரைச் சாரவில்லை. தம்முடைய உயிரினும் இனியதாகிய குழந்தையைக் கொன்ற போது அவர் சற்றேனுந் துக்கப் படாமல் மகிழ்ச்சியோடிருந்தது அவர் சிவவசமாய் நின்றார் என்பதற்குச் சாட்சி யாகும்.

திருநாவுக்கரசுநாயனார் நீற்றறையில் இடப்பட்டபோது நீற்றினால் வருந் துன்பம் அவரைச் சாராமற் சிவபெருமான் தடுத் தார். அவர் கைலாசத்துக்குப் போனபோது அவருடைய கால் கை தேய்ந்து சரீரம் கல்லி னால் கிழிக்கப்பட்டதனால் உண்டான துன்பம் அவரைச் சாராமற் கடவுள் தடுத்தார். இவ்வாறு ஞானவான்களின் வினைகளும் வினைப்பயன்களும் அவர்களைச் சாராமற் கடவுள் தடுக்கின்றார்.

**இறைவன் அடியார்க்குத் தாமே வந்தருளுவார்.**

ஒரு சிறு பொருளைத் தரும்படி நாம் ஒருவரைக் கேட்க அவர் கைம்மாறு கருதாமல் அதைத் தருவாராயின் நாம் அவருக்கு நன்றி பாராட்டுகிறோம். அப்படி யாகவும், மன வாக்குகளுக்கெட்டாத பெரும் பொருளாகிய சிவானந்தத்தைச் சிவபெருமான் (நாம் கேளாமல் தாமாகவே) கைம்மாறின்றித் தரும்போது எங்களி லிருக்க வேண்டிய நன்றியறிவுக்கு எல்லை யுண்டா? நன்றியறிவு சிறிதுமில்லாமல், அவர் தாமே தருபவர் என்பதை மதி யாமல், நமது வல்லமையினால் "நாமே பெறுவோமென்று நினைப்பது பெருந் துரோகம்" திருவருள் தானாகச் சிவத்தைத் தரும் என்பதை, "தான் வந்து நாயேனைத் தாய் போற்றலையளித் திட்டு", "தானே வந்தெம்மைத் தலையளித்தாட் கொண்ட ருளும் வான்வார்கழல்" என்னும் திரு வாசகப் பாக்களிலும்,சிவன் தன்னைக் கொடுத்தபோது மாணிக்கவாசக சுவாமிகள் தம்மை அடிமையாகக் கொடுத்து ஆனந்த பரவசப்பட்டதை "தந்ததுன் றன்னைக் கொண்ட தென்றன்னைச் சங்கார ஆர் கொலோ சதுரர், அந்த மொன்றில்லா ஆனந்தம் பெற்றேன் யாது நீ பெற்ற தொன்றென்பால், சிந்தையே கோயில் கொண்ட வெம்பெருமான் திருப்பெருந் துறையுறை சிவனே, எந்தையே ஈசா உடலிடன் கொண்டாய் யானிதற் கிலனொர் கைம்மாறே" என்பதிலும் காண்க.

**சமயாசாரங்கள் :**

உறங்குபவன் கைப்பொருளை விரும்பி விடாததுபோல, சமயாசாரங் களை ஞானிகள் வேண்டாமென்று சிந்தித்து விடார்கள். சிலர் தாம் ஞானிகளென்றுந் தமக்குச் சமயாசாரங்கள் தேவையில்லை யென்றுஞ் சொல்லுகிறார்கள். இவர்கள் ஞானிகளல்லர். ஆணவ முனைப்பினால் இவ்வாறு கூறுபவர் ஆதலால் இவர்கள் சரியை கிரியை யோகங்களையும் அனுஷ் டித்தற்குத் தகுதியில்லாத பிரவிர்த்தி மார்க்கத்தாரென அறிக. உறங்குபவனது கையிலுள்ள பொருள் சில காலம் விழா மலிருப்பது போல ஞானிகள் முன் அனுஷ் டித்த சயயாசாரங்கள் வழுவப்பெறாமல் அவற்றை அனுஷ்டிப்பதுமுண்டு. உறங்கு

பவனது கைப்பொருள் பற்றின்றி இருப்பது போல இவர்களது அநுஷ்டானம் பற்றின்றிச் செய்யப்படும்.

### ஐந்தெழுத்து

**நமசிவாய:**

பெத்தநிலையிலுள்ளோர் பஞ்சாட்சர செபஞ்செயும் போது ஒவ்வோர் எழுத்தின் பொருளையும் உணர்ந்து ஊன நடனத்துக்குக் காரணமாகிய மலத்தினால் உண்டாவன யாவுந் துன்பங்களென்பதையும், சிவத்தால் உண்டாவனயாவும் நிலையான இன்பங்களென்பதையும் அறிந்து அகந்தை மமதைகளையும், உலக இன்பங்களையும் மலமென அருவருத்துத் தள்ளிக் கொடிய விஷப்பாம்பென அவைகளால் விலகி ஞான நடனங் செய்விக்குஞ் சிவத்தை அமிர்தமென நினைத்து அதில் ஆசைப்பட்டு ஆணவத்தின் விஷத்தைத் தீர்க்கும் மருந்தென அதை விரைவிற் பெறுதற்கு மனதைப் பற்றிக்கொண்டு செபஞ் செய்தல் தக்கதாம். இந்தப் பயிற்சியினாலும், மந்திரத்தில் அமைந்த திருவருளாலும், இப்படிச் செபம் பண்ணுவோன் தன் முயற்சிகளைச் செய்யும் போதும், பிறவுயிர்களோடு சம்பந்தப்படும் போதும் மலச் சேட்டைகள் தொடங்குமாயின், அவைகளை மலமென்றும் விஷமென்றும் அருவருத்து விலக்கி அவைகளுக்கிடங்கொடாமல் தர்மவழியில் நிற்பான். பஞ்சாட்சரத்தைச் சிரத்தையோடு விதிப்படி செபிக்கிறவனுக்குத் தீய எண்ணங்கள் உண்டாகுமானால், பஞ்சாட்சரத்தின் நினைவு உடனே உண்டாகும். அந்த நினைவு அத்தீய எண்ணத்தை தீய எண்ணத்தை ஒட்டிவிடும். "கொல்வாரேனும் குணம்பல் நன்மைகள், இல்லாரேனும் இயம்புவராயிடின், எல்லாத் தீங்கையும் நீங்குவரென்பரால், நல்லார் நாம நமச்சிவாயவே" என்று சம்பந்த சுவாமிகள் திருவாய்மலர்ந்தருளினார்.

தீய எண்ணங்கள் வந்து நிலைத்து முளைக்க முன்னமே பஞ்சாட்சரத்தினால் அவைகளை ஒதுக்குதல் கூடும். அவைகள் முளைத்த பின்பு அவைகளை ஓட்டுதல் சில போது பிரயாசமாயிருக்கும்,, இப்படியே பஞ்சாட்சர செபமானது ஆணவத்தின் வலியைக் கெடுத்து ஆன்மாவைக் கடவுளோடு சேர்த்தற்கு முக்கிய சாதனமாம்.

ஆணவமாகிய கொடிய கடலில் ஆன்மாக்கள் ஆழாமல் அவற்றைக் கரையேற்றத்தக்க தோணி பஞ்சாட்சரமென்பதை, "அஞ்செழுத்தின் புணை பிடித்துக் கிடக்கின்றேனை முனைவனே முதலந்தமில்லா வல்லற்கரை காட்டி யாட்கொண்டாய் மூர்க்கனேற்கே" என்பதனாலறிக.

சைவசமயத்திலே விதிக்கப்பட்ட முத்திக்குரிய சாதனங்களாவன திருக்கோயில், திருநீறு, திருவைந்தெழுத்து, சிவனடியார் சரித்திரங்கள், சிவனடியார் சங்கம், திருவருட்பாக்கள், நீதி நூல்கள், ஞான நூல்கள் முதலியவைகளும், சரியையிற் சரியையாதி முப்பத்திரண்டு பாதங்களுமாம், புறச்சமயங்கள் பலவற்றில் இந்தச் சாதனங்கள், கோடியில் ஒரு பங்குதானும் இல்லாதிருக்கவும் அவைகளும் ஆன்மாவை ஈடேற்றத்தக்க வெவ்வேறு வழிகளென்று சொல்லுவது எத்துணைப்பேதைமை புறச்சமயங்களை அநுசரித்தல் தீமையென்பதை விளக்க, "பரசமயங்கட் கெல்லாப் பாக்கியம் பண்ணொணாதே" என்று அருணந்தி தேவர் கூறியருளினர்.

சிலர் பஞ்சாட்சர செபத்தினாலும், ஆலய வழிபாட்டினாலும், விரதாநுஷ்டானங்களாலும் தாம் ஒரு பயனுமடைய வில்லை என்று சொல்லுகின்றார்கள். இவர்கள் இவைகளைச் செய்தபோது சிரத்தை இல்லாமையே இவ்வாறு சொல்லுதற்குக் காரணம், இயல்பிலே சிரத்தையுள்ளவர்கள் இவைகளின் பயனை விரைவிற் பெறுவர். மற்றையோர் இவற்றின் கருத்தையும் நோக்கத்தையும் உள்ளபடி அறிவதனாற் பயன் அடைவர். சிலர் சிரத்தையுள்ளோராயினும் தம்மாலியன்ற அளவுக்கு மேலே செய்வதினால் அலுத்து இவைகளை வெறுத்துப் பாவிகளாதலுமுண்டு நெடு நேரம் மனசை ஒரு வழிப்படுத்தமாட்டதவர் பஞ்சாட்சர செபத்தை மட்டாகச் செய்ய வேண்டும். பசியை அதிகங் தாங்க மாட்டாதவர்கள் நெடும் பசி விதிக்கப்பட்ட விரதங்களை அநுட்டிக்கத் தொடங்கிய பொழுது போகாதாமே என்று வருந்துவதும் விரத காலம் சமீபிக்கும்போது அதற்கு அஞ்சுவதும் உண்டு இது சுமக்க மாட்டாத பாரத்தைச் சுமப்பதால் வரும் பொல்லாங்கு. ஆதலால் இயல்பிலே சிரத்தையில்லாதோர் சமயாநுஷ்டானங்களின் இரகசியங்களையறிந்து சிரத்தையுறல் வேண்டும். எவர்களும் மிகுந்த பிரியத்தோடு செய்து முடிக்கத்தக்க அளவு செபதியான விரதாநுஷ்டானங்களைச் செய்ய வேண்டும். அவ்வளவு மாத்திரஞ் செய்வாராயின் சிரத்தையும் அன்பும் வளர்தலால் அவர்கள் திருவருளைப் பெற்று நற்கதியடைவார்கள். வெய்யிலில் அலைந்தவன் நிழலைச் சேரும்போது எவ்வளவு ஆசையோடு போகின்றானோ அவ்வளவு ஆசையோடு உலக முயற்சிகளை விட்டுச் செபம் தியானம் முதலிய சமயாநுட்டானங்களைச் செய்ய வேண்டும். உலக விஷயங்களாகிய ஊன நடனத்திலே இவ்வளவு நேரமும் அலைந்த நமக்குக் கடவுளை வழிபட்டு ஆன்மாவை ஈடேற்றுவதற்கு நேரம் கிடைத்து விட்டதே என்ற சந்தோஷத்தோடு அம்முயற்சிகளைத் தொடங்க வேண்டும். “ஆலயந் தானுமரனெனத் தொழுமே” என்பதிலும், “நாயினேன் நினதடியாரொடல்லால் நரகம் புகினும்.” என்பதிலும் “மேவினோம் அவனடியார் அடியாரோடு மேன்மேலுங் குடைந்தாடியாடுவோம்”, என்பதிலும் காண்க. சிவலிங்கம் முதலிய திருமேனிகளிற் சரியாவான்களுக்குச் சிவபெருமான் மறைந்து நின்று அருள் செய்வர். மந்திர நியாசத்தால் வழிபடும் கிரியாவான்களுக்கும் மந்திரங்களால் வழிபடும் யோகிகளுக்கும் அவ்வவ் மந்திரங்களால் அவரவர் விரும்பிய வடிவாய்த் திருமேனிகளில் அவ்வப்போது தோன்றிநின்று அருள் செய்வர். அன்பு மாத்திரையாய் வழிபடும் ஞானிகளுக்கு அவ்வன்பே தானாய்த் அத்திருமேனிகளில் எப்போதும் வெளிப்பட்டு நின்று அருள் செய்வர். முத்தர்கள் வாசனா மலத்தின் தாக்கத்தை நீங்குவதற்கு அடியார்களையும் ஆலயங்களையும் வழி படுவாராயின் முழு வலியோடு நிற்கும் மலங்களின் ஓயாத வினையினின்றும் விலகிக்கொள்ள அடியார்களையும் சிவாலயத்தையும் நாங்கள் எவ்வளவு அதிகமாக நாடி வழிபடல் வேண்டும்.

# கடையிற் சுவாமிகள்

யாழ்ப்பாணத்திலே உசன், கொழும்புத் துறை, கந்தர்மடம், நல்லூர், வண்ணார் பண்ணை போன்ற இடங்களில் அடியார் மடங்களும் அவ்வம் மடங்களைச் சார்ந்த குரு பரம்பரைகளும் இருந்து வருகின்றன. அனேகமாக இன்றுள்ள குரு பரம்பரை களுக்கெல்லாம் மூல முதல்வராகத் திகழ் பவர் கடையிற் சுவாமிகள். முன்பின் அறி யப்படாமல் இற்றைக்கு மூன்று தலை முறைகளுக்கு முன்னர் யாழ்ப்பாணத்திற்கு அறிமுகமானவர் சுவாமிகள். இவர் போல் வாரது ஊரும் பேரும் வினாவவுஞ் சொல்லவும் படுவதில்லை. அது குருநெறி மாண்பைப் பேணும் வழியாகும். குரு சம்பிரதாயத்தின்படி இது தத்துவக் கிரம மாகவே உணர்த்தப்படுகின்றது. திருக் கயிலாயத்திலிருந்து நேரே புறப்பட்டுத் திருத்தில்லை சேர்ந்து அங்கு நடமாடி அங்கிருந்து மண்டைதீவுக்கு வந்து தங்கிப் பின் வண்ணார்பண்ணையில் எழுந்தருளி அடியார்களை ஆட்கொண்டருளினார் சுவாமிகள் என்பதே அவர்தம் சீடர்கள் வழியாக யாம் அறிவது, இறைவனருளே மனித உருவில் வந்து பக்குவமுள்ள அன்பரை ஆட்கொள்ளும், அல்லது அவ்வருளே அருள் பெற்றுள்ள பிறரிடமாக நின்று ஆட்கொள்ளும் என்பதே தத்துவ உண்மையாதலின், அவ்வளவில் அமைதலே அறிவாம்; அதன் மேல் விசாரணை புரிதல் பழுதாம். எனினும் வரலாற்றுப் பிரியர்கள் யாவரோ கண்டு கூறிய ஒரு செய்தியும் நம்மவரிடையே அறியப்பட்டு வந்துள்ளது.

சுவாமிகள் தென்னிந்தியாவிலுள்ள பெங்களூரில் ஒரு நீதவானாக இருந்த வர்கள், ஒரு கொலை வழக்கில் குற்ற வாளிக்குத் தூக்குத் தண்டனை விதிக்க வேண்டிய சந்தர்ப்பம் ஏற்பட்டபோது, சுவாமிகளுக்கு மறித்துணர்வு தோன்றி விட்டது. இவனார் நானார்? இவனுக்குத் தூண்டனை விதிக்க நானார்? என்று விசா ரணை எழுந்துவிட்டது. அவ்விசாரணை யானது 'நானார் என்னுள்ளமார் ஞானங் களார்' என்ற விசாரணையைக் கிளப்பி விடவே அவர்கள் அந்நிலையிலிருந்து விலகி மெய்யுணர்ந்து குருவருள் பெற்றுச் சீவன்முத்தராய்த் திகழ்ந்தார்கள்.

அந்நாளில் யாழ்ப்பாணத்தில் வயிர முத்துச் செட்டியார் என்பவர் ஒருவர் இருந்து வந்தார். அவர் இந்திய யாத்திரை செய்யும் வழக்கமுடையவர். ஒரு தடவை அவர் இந்தியாவில் இருந்தபோது தற் செயலாகச் சுவாமிகளைக் கண்டு தரி சித்தார். சுவாமிகளின் திருவருள் விலா சத்தால் ஈர்க்கப்பட்டார். தாம் சுவாமி களுக்கு ஆட்படல் வேண்டும் என்னும் உள்ளக்கிடக்கையோடு சுவாமிகளை அணுகினார். அவரைக் கண்ட மாத்தி ரத்தே சுவாமிகள் 'நீ இங்கு வரவேண்டாம், நான் அங்கு வருகின்றேன்' என்று **வழக்குக் கொடுக்க முன்னரே தீர்ப்புகி கூறிவிட்டார்.** செட்டியார் பெருந் தயக் கத்துடன் சுவாமிகள் பால் உள்ளத்தைப் பறிகொடுத்து வெற்றுடலாய் மீண்டு யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தார். செட்டியார் தம் தொழிலில் ஈடுபட்டபொழுதும் சுவாமிகள் நினைவு என்றும் அவர் உள்ளத்தில் உறுத்திக் கொண்டேயிருந்தது.

ஒரு நாள் வெள்ளிக்கிழமையன்று செட்டியார் நல்லூர்க் கந்தசுவாமி கோயி

லுக்குச் சென்று வழிபட்டுக் கொண்டிருந்தார். தம் குருநாதனைத் தமக்குத் தந்துவிடல் வேண்டும் என்பது அன்று அவருடைய உருக்கமான வேண்டுகோள். வழிபாடு முடிந்து குருவைப் பெற்றுவிட்டாற் போன்ற மனமலர்ச்சியுடன் செட்டியார் வீடு திரும்பிக் கொண்டிருக்கின்றார்.

இதற்கிடையிலே செட்டியார் வீட்டிலே சுவாமியார் ஒருவர் புகுந்தார். சமையலும் முடியுந் தருணமாய் இருந்தது. செட்டியாரின் மனைவியார் சுவாமியாரை வணங்கி உபசரித்து நின்றார். சுவாமியார் தாம் உடனே பசியாறவேண்டும் விருப்பத்தைத் தெரிவித்தார். அன்று நோன்புநாள்; அத்துடன் வெள்ளிக்கிழமை. சுவாமியார் ஒருவர் விருந்தாக வந்துள்ளார் என்ற அளவில் அம்மையாருக்கு ஒரே குதூகலம். இருந்தும் தம் கணவரும் வந்துவிட்டால் நல்லாயிருக்குமே என உள்ளத்தின் ஏதோ ஒரு மூலையில் ஒரு அலை ஒரு தடவை தோன்றி மறைந்தது. அதற்காகச் சுணங்காமல் பரபரப்புடன் ஆசனமமைத்து எல்லாம் ஒழுங்கு பண்ணிச் சுவாமியாரை அமுது செய்யவேண்டினார். சுவாமியாரும் எழுந்து சென்று இலை முன் உட்கார்ந்து கொண்டு இன்னும் ஒரு இலை போடு என்றார். ஏன் என்ற பேச்சின்றி அம்மையாரும் அவ்வாறே செய்து இரண்டிலையும் படைத்து முடிந்ததும் முடியாததுமாக இருக்கையில், செட்டியார் வீட்டுள் நுழைந்தார். கற்பு நெறியும் தெய்வ நெறியும் அம்மையாருக்கு ஒருங்கே பலித்துவிட்டன. செட்டியாரும் அன்று கும்பிட்ட பயனைக் கையோடே கண்டு கொண்டார். குருவருளும் சீஷர் அன்பும் ஒருங்கு கலந்துவிட்டன. அன்னஞ் சாட்சியாக இதனைக் கண்டு வாழும் பாக்கியம் அம்மையாருக்கே கிடைத்தது; இதுவே யாழ்ப்பாண மண்ணிற் கடையிற் சுவாமிகள் கால் வைத்த முதற் செய்தி.

குருவருள் பெற்றுச் சீவன்முத்தராய்விட்ட செட்டியார் தம்மை ஒப்புக் கொடுத்தவாறே தம் உடைமை முழுவதையுஞ் சுவாமிகளிடம் ஒப்புக் கொடுத்து விட்டார். அத்தரும சாதனம் இன்று கந்தர்மடத்தில் அன்னசத்திரம் என்ற பெயரோடு விளக்கமுற்றுள்ளது. அங்கேதான் சுவாமிகளுடைய சீடர் சின்னச்சாமியவர்களின் சமாதியுமுள்ளது. நல்லூர்த் திருவிழாக் காலங்களிலும் விசேட குருபூசைத் தினங்களிலும் இங்கு விசேட அன்னதானம் நடைபெற்று வருதல் குறிப்பிடற்பாலது. சீவன்முத்தர் செல்வஞ் சிவனடியார் செல்வம்.

இனி, சுவாமிகள் வரவு பற்றிக் குரு பரம்பரைக் கிரமத்திலும் ஒரு வரலாறுண்டு. இந்திய பூமியில் நிலைத்திருந்த ஒரு குரு பரம்பரையிலிருந்து மூன்று மகான்கள் ஈழத்திற்கு வந்து சேர்ந்தனர். அவர்கள் சுவாமி சின்மயானந்தர், சுவாமி முக்தியானந்தர் சுவாமி நிரஞ்சனானந்தர் என்று அழைக்கப் பெற்றனர். அவருள் முக்தியானந்தரே கடையிற் சுவாமிகள் எனப் பெயர் பெற்றார். சுவாமி சிந்மயானந்தர் பரம்பரையில் வந்தவர்கள் சாஷன் சுவாமி பரம்பரையினர். இப்பரம்பரையில் வந்தவர்களே கந்தர்மடத்து வேதாந்த மடத்தைச் சேர்ந்தவர்கள். சுவாமி நிரஞ்சனானந்தர் கீரிமலையிற் பரமகுரு சுவாமிகள் என்ற பெயரோடிருந்து குழந்தைவேற் சுவாமிகளுக்கு உற்ற குருவாய் வாய்த்தவர். இச்செய்தி 17-10-57இல் வெளியான ஆத்மஜோதி பத்திரிகையிற் காணப்படு

கின்றது. எவ்வகையிலுஞ் சுவாமிகள் வடக்கிலிருந்து வந்தார் என்பது தெளிவு.

எல்லாம் வடக்கிலிருந்து தானா வரவேண்டும் என்ற இன்றைய கோஷம் விஷமத்தனமானது. நினைப்பிலாவது சொல்லிலாவது வடக்கிலிருந்து நம்மைப் பிரிவுபடுத்திக் கொள்ளுதல் தற்கொலைக் கொப்பதாகும். கிளை செழிக்கவேண்டும் என்பதற்காக அடி மரத்திலிருந்து அதனைத் துண்டித்தல் அறிவுடைமையாகாது; சந்ததி சந்ததியாக நம்மவர் ஆவிகள் வடக்கி லேயே போய் ஆறுதலடைந்துள்ளன. சிதம்பரத்தை நினையாமற் செத்தவரோ கயிலையை நினையாமற் கண்மூடிய வரோ யாழ்ப்பாணத் தமிழர் பரம்பரையில் இல்லை என்றால் மிகையாகாது. நம் ஆத்மீக கலாசார ஊற்று என்றைக்கும் அங்கேதான் உள்ளதென்பது உண்மையில் உண்மை. இது தனியாக விஸ்தரிக்க வேண்டிய விஷயம்.

இன்று ஞான வரட்சியால் நசிந் தொழியும் நம்மினம் இன்னும் வடக் கைத்தான் பூசிக்கவேண்டும்; நேசிக்க வேண்டும். நம்மினம் விமோசனமடைய வேண்டில் வடக்கில் ஆன்மநேயமும் அத்யந்த உறவும் நமக்கு நிரம்பவும் வேண்டும்.

வயிரமுத்துச் செட்டியார் தொடர்பி லிருந்து, சுவாமிகள் சஞ்சாரம் மண்டை தீவிலும் வண்ணார்பண்ணைப் பகுதி யிலுமே மிகுதியும் நடைபெற்று வந்தது. காந்தங்கண்ட இரும்புத் துண்டுகள் போல நாற்றிசையிலுள்ள சிவபுண்ணியப் பேறு ளோர் பலர் சுவாமிகளை அடைந்து அவர்பால் தீக்ஷையும் உபதேசமும் பெற்றுப் பக்குவராய்த் திகழ்ந்தார்கள்.

சுவாமிகள் திருவுருவும் கவர்ச்சிகர மாயும், உண்மையுள்ளமுடையார்க்குப் பயபக்தி விளைப்பதாயுமிருக்கும். அள வான உயரமுள்ள பூரித்த திருமேனி, முழந்தாள் வரை நீண்ட திருக்கரங்கள், நீண்டகன்ற திருமூக்கு, விரிந்தசையுங் குஞ்சி, ஒளி விளங்கும் எலுமிச்சம்பழ வர்ணம் இவை அவர்தம் திருவுருவப் பொலிவாகும். அரையில் வேஷ்டியும் தோளிற் சால்வையும் அவர் திருவுடை யாகும். அவை பெரும்பாலும் கருநிற மாகவே தோன்றும். வெண்சீலை வேய்ந்த குடையொன்று என்றும் அவர் வசம் இருக்கும். உலாவும் போதெல்லாம் அதனைக் கக்ஷத்தில் வைத்துக் கொள் வார்கள். நெற்றியிலே திகலம் ஒன்று பளபளக்கும். இத்திருக் கோலத்துடனே என்றும் ஆனந்த வடிவாய்க் காட்சியளிப் பார்கள். மெட்டாக அடிபெயர்த்து நடத்தல், ஓடுதல், உலாவுதல்; கொஞ்சுதல், குழைதல்; அடித்தல், அணைத்தல்; ஏசுதல், பேசுதல் இவையனைத்தும் ஆனந்தாதீத நிலையிலே சுவாமகிள் நிகழ்த்திய அருள் நடனங்களாம்.

சடைவரத சுவாமிகள் என்பவர் எட்டு வயதுச் சிறுவனாயிருந்தபோது வேறு பல பிள்ளைகளுடன் சுவாமிகளைப் பார்க்கச் சென்றிருந்தார்கள். கடையிற் சுவாமிகள் அவரைக் கண்ட மாத்திரத்தே ஆனந்தக் கூத்தாடி அவரைத் தனியாக அழைத்துச் சென்று கட்டிப் பிடித்துக் கொஞ்சித் தம் தலையிற் கிடந்த தொப்பியைக் கழற்றி அவர் தலையிற் சூட்டி ஆனந்தித்தார்கள். இவ்வருள் நிகழ்ச்சிக்கு உதவியாயிருந்த அத்திருத்தொப்பி இன்றும் மண்டைதீவி லுள்ளதென்று சொல்லப்படுகின்றது.

சுவாமிகள் சகல சம்பிரதாயங் களுக்குஞ் சங்கற்ப விகற்பங்களுக்கும்

அப்பாற்பட்டவர். அனுசரணையிலுள்ள விதிவிலக்குகளுக்கெல்லாம் அவர் தாமே விதிவிலக்காய்த் திகழ்ந்தார்கள். மது மாமிசம் போன்றவற்றையும் விலக்காது ஏற்றுக்கொள்வார்கள். இது அனாசார மென்று கருதிச் சுவாமிகளை எட்டநின்று இகழ்ந்தாரும் உளர். இதனையே சாதக மாகக் கொண்டு தமது கள் வேட்கையிலும் மாமிச வேட்கையிலும் தீவிர முன்னேற்றங் கண்டாருமுளர். இது பற்றி இன்னமும் மலைவாருமுளர். சுவாமிகள் மது மாமிசம் உட்கொண்டமையும் ஏனையோர் மது மாமிசம் உட்கொள்ளுதலும் பேரளவில் ஒன்று; தன்மையளவில் வெவ்வேறு, பற்றற்ற நிலையில் வாழ்ந்த சுவாமி களுக்கு மரக்கறியும் மாமிசமும் ஒன்றே. கள்ளுங் கழுநீரும் ஒன்றே. புலாற் சுவையைப் பற்றுகிற பற்றோ கழுநீர்ச் சுவையைப் பற்றுகிற பற்றோ அங்கில்லை. அவர்கள் சுவைநோக்கித் தமக்காக உண்பதில்லை. ஞானிகள் உண்ணும் உணவு யாகாக்கினியிற் பெய்யப்படும் ஆகுதியாகும். யாகாக்கினியில் எப் பொருளை இட்டாலும் அது ஏற்றுக் கொள்கிறது. அது அதற்கே உணவாவ தில்லை. அவ்வாகுதி எத்தனையோ தேவர்களுக்குப் பிரீதியாகின்றது. ஞானி கொள்ளும் உணவு தனக்காகவல்ல. உலக சீவன்கள் முழுவதிலுஞ் செறிகின்றது. அவரது உண்ணுஞ் செயல் தர்மச் செய லாகும். அதனிடம் பாவம் நிகழாது; சாதா ரண மக்கள் மாமிசத்தை விரும்புவதன் காரணம் அவர்களுக்குள்ள நாச்சுவைப் பற்று; மதுவை விரும்புதற்குரிய காரணம் தாகத்திற்கினியதெனும் தனியான உளப் பற்று. இங்ஙனம் ஆன்ம லாபத்திற்கு அடியோடு நாசம் விளைவிக்கும் பற்றை அடிப்படையாகக் கொண்டது. பொதுவில், சாதாரண மக்கள் உணவு. அதிலும் மதுவும் மாமிசமும் காமமோகங்களை அதிகரிக்கச் செய்வனவும் கொலைப்பழியோடு கூட வருவனவுமாகும். நாமும் சுவாமிகளைப் போலப் பற்றற்ற நிலையிலே தான் உண்கிறோம் எனின், அது **வித்தில்லாச் சம்பிரதாயமே** அல்லாது வேறில்லை. குருவருள் பெற்று இருவினை ஒப்புச் சத்திநிபாதம் அடையாதவனுக்குப் பற்ற றுதல் எவாற்றானுமில்லை. அவனுக்குப் பற்றறுதல் முயலுக்குக் கொம்பு முளைத்த வாறாம். எனவே சாதாரண மக்கள் மது மாமிசம் உட்கொள்ளுவது அனாசாரப் பழியாகும். அதுவும் கடையிற் சாமி பேரால் உட்கொள்ளுவது பழிமேற் பழியாகும். அதுவும் கடையிற் சுவாமி பேரால் உட்கொள்ளுவது பழிமேற் பழியாகும். சுவாமிகளின் உணவு விஷயம் நமது நியாயித்தலுக்கு அப்பாற்பட்டது. இப் பேருண்மையைச் சுவாமிகள் பொது மக்களுக்குணர்த்தியருளிய சம்பவமும் ஒன்று அவர்தம் வரலாற்றில் இடம்பெற் றுள்ளது.

சுவாமிகள், அன்பர்கள் இல்லங்களில் அமுது செய்வது வழக்கம். அவர் செல்லுமிட மெல்லாம் அடியார்களும் பிறருமாகப் பலர் அவரைத் தொடர்ந்து செல்வார்கள். விருந்தளிப்போர் அவர் மனங்கோணாமல் வேண்டியபடியெல்லாம் ஆக்கிப் படைத்து அவர்களை மகிழ்விப்பார்கள். உணவுப் பிரியர்கள் சிலர் இதனைச் சாதகமாக்கிக் கொண்டு சிலநாள் தொடர்பாகச் சுவாமி களைச் சூழ்ந்து கொண்டனர். ஒருநாள் சுவாமிகள் உணவு வேளைக்கு ஒரு வீட்டை நோக்கிச் செல்கயில் உணவுப் பிரியர்கள் பலர் அவரைத் தொடர்ந்து வந்தனர். வழியிலே மெழுகு உருக்கிக் கொண்டிருந்த ஒருவனிடம் சுவாமிகள் திடீரென்று கையை நீட்டினார். அவன்

தடுமாற்றமடைந்து உருக்கிக் கொண்டிருக்கும் மெழுகில் ஒரு அகப்பை அள்ளி அவர் கையில் ஊற்றிவிட்டான். பின் தொடர்ந்தவர்கள் மெல்லமெல்லப் பின் வாங்கினார்கள். சுவாமிகள் திரும்பி நின்று எல்லாருங் காண அதனைக் குடித்துவிட்டு 'வாருங்களேன், வாங்கிக் குடியுங்களேன்' என்றார்கள். பின்வாங்கியவர்கள் திரும்பி ஓட்டம் எடுத்தார்கள்.

கடையிற்சுவாமி உட்கொள்ளுகிறாரென்று மற்றவரும் மது மாமிசம் புசித்தால் கடையிற் சுவாமி குடித்தது போல உருக்கிய மெழுகையுமல்லவா உறிஞ்சிப் பருகவேண்டும். கண்ணப்பநாயனார் கடவுளுக்குப் படைத்தார் என்று இறைச்சி உணவைப் போற்றுபவர் அவரைப் போன்று கண்ணையும் அல்லவா தோண்ட வேண்டும்.

நாம் முதலில் அடையவேண்டியது சுவாமிகள் போன்ற மகான்களின் நிலை. அதற்கு அடிப்பாடான ஆன்ம வளர்ச்சி ஏற்படவேண்டும். சமய நூல்களில் விதித்தனவற்றைத் தழுவி விலக்கியனவற்றை ஒதுக்கி வாழும் ஆசாரம் அதற்கின்றியமையாதது. சாதாரண மக்கள் அதைக் கைநழுவ விட்டால் ஆன்ம முன்னேற்றத்தைப் பற்றிக் கனவுங் காணமுடியாது. குருவருளும் முத்திநெறியும் 'பஸ்' வண்டியில் ஏறுவது போல இடைவழியில் நின்று தொற்றிக் கொள்ளுதலாற் கிடைத்துவிடாது. ஆசார நெறியொழுகி அடிப்பாடாகப் பண்பட்டு வருகின்ற மகான்கள் தான் அதற்குரியோராவர். அவர்களே பயன்பெறுவர்.

உண்மையைக் காணுங்காட்சி விசேடமும், உண்மையை உணரும் உணர்ச்சி விசேடமும் இன்மையால் சுவாமிகளின் நிலையைப் புரிந்து கொள்ளாதோர் பித்தன், பேய் பிடியுண்டோன், பாலன் என்று அவர்க்கு நாமஞ் சூட்டினர். எக்கருத்தில் எவர் சொல்லும் பெயரும் இறைவன் பெயரேயாம். இறைவனடியார்களாகிய மகான்களும் அதற்குப் பெரிதும் அருகதை உடையர். சொல்வார் கருதுங் கருத்தைவிட எவ்வெவர் எவ்வெவ் பெயரிட்டழைத்தாலும் அவ்வப்பெயர் இறைவன் திருவிலாசங்களில் ஒன்றை உணர்த்துவதாகவே அமைந்து விடுகின்றது. சுந்தரமூர்த்தி சுவாமிகள், இறைவனைப் 'பித்தனோ' என்றபோது 'ஆம் அதுதான் சரி; அப்படியே வைத்துப் பாடுக' என்றார். அடியார்கள் எல்லாம் அன்புப் பித்துக் கொண்டவர்கள் என்ற பொருளில், திருநாவுக்கரசு சுவாமிகள் 'பெரும் பித்தர் கூடிப் பிதற்கும் அடி' என்று இறைவனடிகளைப் போற்றுகின்றார். மாணிக்கவாசக சுவாமிகள் தம்மைப் பித்தன் என்று பிறர் கூறுவது ஏன் தெரியுமா என்று கேட்டுக் காரணம் விளக்குகிறார். சர்வ சங்கார மயானத்தில் அங்குள்ள பேய்களோடாடுவான் இறைவன். எனவே பேய் பிடியுண்டான் என்பதூஉம் பொருந்துவதே நரை திரை மூப்பு முதலாகிய விகாரங்களின்றி எல்லோரையுங் கவருந் தோற்றத்துடன் விளங்குவது குழந்தை – பாலன் – ஆகலின் அப்பெயர் இறைவனுக்கும் அவனடியாருக்கும் பொருத்தமான பெயரேயாம்.

சுவாமிகளிடத்திலே பயபக்தி பூண்டவர்கள் கடையிற் சுவாமிகள், கடையிற் குருநாதன், கடையிற் பெரியவர், கடையான் என்ற பெயர்களாலும், ஆராமை அன்பு காரணமாகப் பித்தன் பாலன் என்ற பெயர்களாலும் வழங்குவர். எனினும் கடையோடு சார்ந்து வரும் பெயரே பலரும் அறிந்த பெயராகும். வண்ணார்பண்ணையில் என்றுஞ் சனப்புழக்கம் மிகுந்துள்ள சந்தை நிலையமாகிய பெரியகடையிலே சுவாமிகளைப் பெரும்பாலும் பலருங்

கண்டு வழிபடக்கூடியதாக இருந்தது. அது பற்றியே கடையிற் சுவாமிகள் என்ற பெயர் அவர்க்கு வழங்கலாயிற்று. அறம், பொருள், இன்பம், வீடு என உறுதிப் பொருள்கள் நான்கு. இவற்றிக் கடைசியில் உள்ளது வீடு. கடையென்ற சொல்லுக்கு இறுதி, அந்தம் என்ற பொருளுமுண்டு. எனவே கடையான் என்பதற்கு மோக்ஷசத்தைத் தருபவன் என விவேகிகள் பொருள் கொள்வர். 'கடையோ மொழி வீடு கருதுங் கழலுடையான்' – குழந்தைவேற் சுவாமிகள்.

கடையிற் சுவாமிகள் பெரிய கடைக்குள் அருள் நடனஞ் செய்யும் வேளையில் சிலவேளை சிலர் கடைக்குட் சென்று அங்குள்ள காசிற் கையிடுவார். சுவாமிகளின் கைபட்டதிலிருந்து அக்கடைக்காரருக்குக் குரு சந்திரயோகமாகிவிடும். இது கண்டு சுவாமிகள் தம் ஒவ்வொருவருடைய காசிலுஞ் கையிடுதல் வேண்டுமென்று கடைக்காரார் தவங்கிடப்பர். ஆனால் எல்லார்க்கும் அவ்வருள் நிகழ்வதில்லை. சிலவேளைகளிற் கைநிறையக் காசு கொண்டு சுவாமிகள் பெரியகடைத் தெருவழியே விசரன் போக்கில் ஓடுவார்கள். திடீரென்று சுவாமிகள் திரும்பி நின்று கையிலுள்ள காசை வீசுவார்கள். சிறுவர்கள் விழுந்தடித்து அவற்றைப் பொறுக்குவதைப் பார்த்து நின்று ஆனந்த நடனஞ் செய்வார்கள். சுவாமிகளுடைய திருவடிப் பரிசம் பெற்று அவர்தம் நடன சுகத்தையும் அனுபவித்த பெரியகடை வீதியும் பெருந் தவப்பேறுடைத்து.

ஆண்டவன் அருளுருவங்களாகிய மகான்களும் ஆண்டவனைப் போலவே முற்றுமுணர்வோர் – எல்லாம் அறிபவர்கள். 'நற்குஞ்சரக்கன்று நண்ணிற் கலைஞானங் கற்குஞ் சரக்கன்று காண்' என்பது திருவருட் பயன். அருளின் விளைவாகவே எங்குமுள்ள எல்லாம் மகான்களிடம் விளங்கித் தோன்றுவன.

சுவாமிகள் வாழ்ந்த காலத்தில் இணுவிலில் அம்பிகைபாகர் என்ற தமிழ்ப் பேரறிஞர் வசித்துவந்தார். பிற்காலத் தமிழ்ப் புராணங்களிற் சொற்செட்டுக்கும் பொருட்சிறப்புக்கும் பேர் போனது தணிகைப் புராணம் எனப்படுவது. அது மாதவச் சிவஞான சுவாமிகளின் சீடர்களில் ஒருவரால் இயற்றப்பட்டது. அதற்குத் தகுந்த உரைகாண்பதில் பண்டிதர்மார் படுஞ் சிரமம் அளவற்றது. இணுவில் அம்பிகை பாகர் என்பார் தமது அறிவுத் திறமையினாலே அந்நூலுக்குப் பொருளெழுதும் முயற்சியிலீடுபட்டிருந்தார். ஒரு பகுதியிற் சில பாடல்களுக்கு உரைகாண்பதில் அவருக்குக் கஷ்டமுண்டாயிற்று. ஒருநாள் அது பற்றிய சிந்தனையோடு அம்பிகைபாகர் பெரிய கடை நோக்கிப் பெருந்தெரு வழியே போய்க்கொண்டிருந்தார். வண்ணார் பண்ணைச் சிவன் கோயில் வாசலையடைந்ததும் அப்படியே நின்றுவிட்டார். தம் காதுகளையே அவரால் நம்ப முடியவில்லை; திரும்பிப் பார்த்தார். ஒரு மக்கட் கூட்டத்தின் நடுவே சுவாமிகள் பாடிக்கொண்டிருக்கக் கண்டார். அம்பிகைபாகருக்கு எந்தெந்தப் பாடல்கள் விளங்காதிருந்தனவோ அந்தந்தப் பாடல்களை ஒவ்வொன்றாகப் படித்துப் பொருள் விளக்கிக் கொண்டிருந்தார்கள் சுவாமிகள். பிறகு பேசுவானேன்?

சீவன்முத்தர்களாகிய சீவன்களின் திருவுருவே சிவரூபம். அவர் கரணங்கள் அனைத்துஞ் சிவகரணங்கள். அவர்கள் உச்சிட்டமும் அருளேதான்.

திருநெல்வேலியில் ஒரு பெண் மணிக்கு ஒரு கை நோயுற்று வழங்கா நிலையிலிருந்துது. எந்தப் பரிகாரத்தி னாலும் அது தீரவில்லை. கடையிற் சுவாமிகளின் அருளாலாவது இது மாறாதா என்பது அப்பெண்மணியின் ஏக்கம். நல்லவேளையாக ஒரு வெள்ளிக்கிழமை அவர் நல்லூர்க் கந்தசுவாமி கோயிலுக்குப் போயிருந்தார்; வழிபாடு முடிந்து வாசலில் நின்று கொண்டிருந்தார். யாரோ ஒருவர் கோவிலின் வாசலை நோக்கி ஓடிவரக் கண்டார். அங்கு நின்ற மற்றவர்கள் கடையிற் சாமீ! கடையிற் சாமீ!! என்றனர். கேட்டுப் பரபரப்புடனே அப்பெண்மணியும் சுவாமிகள் பின்னே ஓடினார். சுவாமிகள் கோயில் உள்வீதி சுற்றியோடி மறுபடியும் வாசலில் வரும்போது கோயில் ஐயர் பூத்தட்டத்துடன் அங்கு நின்றார். சுவாமிகள் ஐயரிடம் திடீரென்று கையை நீட்டவே ஐயர் தட்டத்திலிருந்த செவ்வரத்தம்பூக்களிற் சிலவற்றை அள்ளிச் சுவாமிகள் கையி லிட்டார். சுவாமிகள் அவ்வளவையும் தம்வாயிலிட்டுக் குதப்பிக் கொண்டோடவே அப்பெண்மணியும் தொடர்ந்தோடிக் கொண்டிருந்தார். சுவாமிகள் கோயிற் புறவீதியில் ஓரிடத்தில் திரும்பி நின்று கைநீட்டும்படி பெண்மணிக்குச் சைகை காட்ட அவரும் அவ்வாறே கைநீட்டிப் பரிந்து நின்றனர். சுவாமிகள் திருவாய் திறந்து நன்கு மெல்லப்பட்ட செவ்வ ரத்தம்பூக்குதப்பலை உமிழ்ந்துவிடவே 'தனம் பெரிதும் பெற்று வந்த வறியவன் போல' மகிழ்ச்சியில் மலர்ந்து நின்றார். சுவாமிகள் பின்பு நிற்கவில்லை, ஓடி விட்டார். அம்மையார் அதனைத் தங்கையிற் றடவிய மாத்திரத்தே கை நோயும் தீர்ந்து மெய்நெறிக்கும் அருகதை உடையவராயி னார். சீவன்முத்தர்களின் தீராநோய் அருள் அமிழ்தம். அதுவே மருந்து; தீரா நோய் தீர்த்தருளவல்லது. மெய்யடியார் அதனைப் பெறத் தவங்கிடப்பார்கள்.

குறித்த நிகழ்ச்சி போன்ற எத்தனை எத்தனையோ அருள் நடனங்கள் சுவாமி களின் அருட்செயல்கள். சுவாமிகளின் சீடர் திலகமாகிய குழந்தைவேற் சுவாமிகள் செய்தருளிய பாடல் ஒன்று இச்சந்தர்ப் பத்திற்கு மிகவும் பொருத்தமானது.

**எண்டோள்களும் வீசி எழில்சேர் நடமாடிக்**
**கண்டோர் கலிநீக்குங் கடையிற் குருதாளை**
**வண்டோ லிடுஞ்சோலை வண்ணைப் பதிமேவித்**
**தொண்டாம் புணையேறித் தொடர்ந்தாட் படுவீரே.**

(கண்டோர் – பயபக்கதியுடன் சந்தித்தோர். கலி– நோய், பிணி, வறுமை, மனத்துயர் முதலியன)

குழந்தைவேற் சுவாமிகள் பாடிய துதிப் பாடல்களில் இதுவே முதற்பாடலு மாகும். கடையிற் சுவாமிகளைப் பற்றிச் சிந்திக்கையில் அவர்தம் நடனவியல்பை முற்கொண்டு, கலிநீக்கும் அதிசயத்தை வியந்து அவர் சீடர்கள் சிந்தித்தவற்றை இச்செய்யுள் நன்கு புலப்படுத்துகின்றது. இச்செய்யுளிலுள்ள கண்டோர் குறித்த பெண்மணியாகவும் கலி அவர்க்குற்ற கைநோயாகவும் சிறப்பாகப் பொருள் காணும் போது இந் நிகழ்ச்சியை முன்னிட்டுத்தான் இச் செய்யுள் எழுந்தது போலும் என எண்ணி இன்புறத்தக்க தாயிருக்கின்றது.

இவ்வகையாகக் கடையிற் சுவாமிகள் பல தடவைகளில் நல்லூர்ப் பக்கத்தில் உலாவியதுண்டு. அக்காலத்தில் நல்லூர்க் கோயில் வீதியில் செல்லப்பர் என்ற ஒரு பக்குவசீலர் வாழ்ந்து வந்தார். அவர் அவ்விடஞ்சென்றுலாவிவரும் கடையிற்

சுவாமிகளைப் பலமுறை உற்று நோக்கி வந்தார்; ஒருநாள் அவரையணுகி எலுமிச் சம்பழமொன்றைக் கொடுக்கச் சுவாமிகள் அதனை ஏற்றருளினார்கள். பின் ஒரு தடவை சுவாமிகளுக்குக் கொடுக்க என்று ஒரு போத்தல் சாராயமும் முழு ரூபா ஒன்றுஞ் சம்பாதித்துச் சேமமாக வைத்துக் கொண்டு சுவாமிகள் வரவை எதிர்பார்த் திருந்தார். ஒரு நாள் சுவாமிகள் திடீரெனத் தம்முன் தோன்றக் கண்டு சாராயப் போத்தலை எடுக்க ஓடிப்போனார். போத்தல் வெறுமையாயிருக்கக் கண்டு அதிசயித் தார். பின்னொருநாள், சுவாமிகளை அவரிருக்குமிடத்திற் சென்று காணவேண்டு மென விரும்பி, செல்லப்பர் பெரிய கடைக்குச் சென்றார். செல்லப்பரைக் கண்டதும் கடையிற் சுவாமிகள் பக்கத் திலேயிருந்த கடலைக் காரி ஒருத்தியிடம் முழு ரூபா ஒன்று வாங்கி அதனை ஒரு வெற்றிலையில் வைத்து மடித்து அவர் கையிற் கொடுத்தார். அவர் தலைமேல் ஒரு குடையையும் அசைத்துத் தம் கைகளைத் தட்டி 'ஓடெடா' என்று சொல்லிவிட்டார். அந்த க்ஷணமே பூமி பூலோகந் தெரியாத நிலை செல்லப்பருக்குண்டாயிற்று. அந்நிலை பதினைந்து நாட்கள் வரை நீடித்தது. அதன் மேல் அவர் உலகம் போற்றும் உத்தம ஞானியாகத் திகழ்ந்தார். தற்போது கொழும்புத்துறையில் விளங்கும் யோகர் சுவாமிகளின் குருவே குறித்த செல்லப் பாச்சாமி ஆவார்.

சுவாமிகளை மெய்ம்மெய்யாக விசரனே என்று கருதிவிட்டவருள் ஒரு பகுதியினர் வண்ணார்பண்ணைப் பொலி சார். உண்மையில் பைத்தியத்தினாலே உழன்று திரிகிறார் என்ற எண்ணத்தினால் அவர்கள் ஒருநாள் சுவாமிகளைத் தம்பால் வரும்படி அழைத்தார்கள். அவர்களும் ஏதோ பயந்தவர் போலப் பொலிசாருடன் சென்றருளினார்கள். அடுத்தநாள் கோட் டுக்கு அவரைக் கொண்டுபோய் உத்தர வெடுத்துக் கொழும்பு பைத்திய ஆஸ் பத்திரிக்கனுப்பி வைத்தியஞ் செய்து அவருக்கு நல்வாழ்வளிக்க அவர்கள் எண்ணிருக்க வேண்டும். அவர்கள் சுவாமி களைக் கோட்டைப் பொலிஸ் நிலை யத்தில் ஒரு அறையில் விட்டுக் கதவை நன்றாகத் தாளிட்டுப் பூட்டிச் சென்று விட்டனர். மறுபடி வந்து பார்த்த போது பூட்டுப் பூட்டாகவேயிருந்தது; திறந்து பார்த்தார்கள்; ஏமாற்றந்தான் அவர்களை வரவேற்றது. சுவாமிகள் அங்கில்லை.

பிறவியே பெரியதோர் சிறைச்சாலை. இதனை விட்டு விலகித் தப்பிக்கொள்ள மாட்டாது உயிரான உயிர்களையெல்லாங் காலமான காலமெல்லாம் பிணி மூப்புச் சாக்காடுகளின் வாய்ப்பட்டு வருந்து கின்றன. இந்தப் பொல்லாத சிறையி னின்று நீங்குதற்கு வழிகண்டுவிட்டவர் சுவாமிகள். பிறவா நெறி கண்டு விட்ட பெரியார் அவர். இந்தப் பிறவிச் சிறையோ பிரமனான பிரமனால் வகுக்கப்பட்டது. அப்பிரமனுக்கும் பிரமனான சிவபெரு மானின் திருவருள் வடிவாய் நின்று பிறர் பிறவிச்சிறையையும் விடுவிக்குந் தகைமை யுள்ளவர் சுவாமிகள். பிரமனிட்ட சிறை யிலிருந்து பிறரையும் விடுவிக்கும் பெருமகனாரைப் பொலிஸ் சிறையா தடுத்துவைத்திருக்கப் போகின்றது. பொலிசோடு போய்ச் சிறைபுகுந்ததே சுவாமிகள் அருள் நடனத்தில் ஒரு சட்டம்.

தீபாவளித் திருநாளிற் சுவாமி களுக்குத் தத்தம் கையாற் பொன்னாடை போர்த்தி வணங்கவேண்டுமென்பது பெரியகடைப் புடவை வியாபாரிமார்

தனித்தனி புரிந்துகொள்ளும் பிரார்த்தனை யாகும். இது வாயிலாகத் தமக்கு வியா பாரம் பெருகிச் சிறக்க வேண்டுமென்றோ என்னவோ இவர்கள் இவ்வகையிற் பெருஞ் சிரத்தைபூண்டிருந்தார்கள். எத் தனையோபேர் எத்தனையோ பொன்னா டைகளோடு காத்திருப்பார்கள். ஆனால் சுவாமிகள் அவர்களுக்ககப்படுவது கஷ்டம். சிலதடவைகளில் எல்லோருமே ஏமாந்து விடுவர். சில தடவைகளில் சிலருக்கு அவ்வாய்ப்புக் கிட்டும். அதிர்ஷ்டசாலி யான ஒரு வியாபாரிக்கு ஒருதடவை அந்த வாய்ப்புக் கிடைத்துவிட்டது அவர் சந்தனம், குங்குமம், கஸ்தூரி, புனுகு, சவ்வாது, மலர்மாலை முதலிய மங்கலத் திரவியங்களுடன் சென்று சுவாமிகளை வணங்கி, விலையுயர்ந்த பட்டாடை யொன்றைச் சால்வையிடுவதுபோல அவர் திருக்கழுத்திற் சாத்திக் கண்குளிரக் கண்டு மனங்குளிர வணங்கிநின்றார். சுவாமிகள் அதற்கு மகிழ்ந்தவர்போலக் காட்டி ஆனந்த நடனமிட்டுக்கொண்டு வீதிவழியே புறப் பட்டருளினார். பொன்னாடை சூட்டிய வியாபாரியாருக்கிருந்த அக்களிப்புச் சுவாமிகள் பின்னே செல்லும்படி அவரைச் செலுத்திக் கொண்டிருந்தது. வீதியிலே சுவாமிகள் வரக்கண்டு தீண்டாச்சாதியார் ஒருவர் அஞ்சியொதுங்கி வீதியோ ரத்திலே நின்றுகொண்டிருந்தார். சுவாமிகள் அவரைத் தமக்குக் கிட்ட வரும் படி சைகை காட்டினார். அவர் கிட்டச் செல்லக்கா லெழாது தயங்கித் தவிப்புற்றார். அந்நிலை யில் சுவாமிகள் மெல்ல அவரைப்பற்றி யிழுக்க அவர் உடல்பதறிக் குனிந்தார். குனியுமுன்னரே சுவாமிகள் தம் திருத் தோளிற் கிடந்த அப்பொன்னாடையைத் தூக்கி அவர் தோளிற்போட்டுவிட்டார். "இதற்கு நானார்! என்ற எண்ணத்தில் ஏங்கிப்போய்விட்டார் அவர். பின்னே பார்த்துக்கொண்டிருந்த வியாபாரியா ருக்குத் தூக்கி வாரிப்போட்டது போலா யிற்று. சுற்றி ஓடிப்போய்ச் சுவாமிகள்முன் கும்பிட்டு, 'இந்தப் பீதாம்பரத்தை இவ னுக்கு...' என்று இழுத்தார். அவர் குரல் தழு தழுத்தது. அவர் அந்த நிலையில் நிற்கவே சுவாமிகள் 'முந்திக்கு முந்தி நேபாள இராசா' (முந்திய பிறப்புக்கு முந்திய பிறப் பிலே அவர் நேபாள நாட்டுக்கு இராசா) என்று சொல்லிக் கொண்டே ஓடி மறைந்தரு ளினார். பொன்னாடை பெற்ற அன்பரோ வியாபாரியாரோ வெகு நேரமாக அவ்விடத்தைவிட்டு அசையவே யில்லை.

மகான்களின் அறிவில் ஏகதேசத்தில் முக்கால நிகழ்ச்சிகளும் ஒருங்கே பிரதி பலித்துக்கொண்டிருப்பன. காலத்தை வென்றவர்கள் அவர்கள். எந்த உயிர் எந்தப் பிறப்பிலே என்னவாயிருந்தது என்பதை அவர்கள் அறிவார்கள். நம்மறிவு இதற்கு நேர்விரோதமானது. காலத்தின் மறைப்புத் திரைக்குள் மயங்கிக்கிடப்பவர் நாங்கள். காலத்தின் ஏகதேசத்தில் ஏகதேசத்தைத் தானும் உள்ளபடி காணும் அறிவு நமக் கில்லை. அந்த அற்ப காட்சியைத்தானும் ஆண்டவனருள் காட்டவே காண்கிறோம் என்ற விவேகமும் நமக்கில்லையானால் நம்மை நாம் என்ன செய்ய!

கடையிற் சுவாமிகளின் அருட்பெரு விளையாடல்களும் அற்புதச் செயல் களும் இவ்வாறாக அவர்கள் புரிந்த சித்துக்களும் பல அவற்றுள் ஒருசில இந்நாட்டில் இங்குமங்குமுள்ள அன்பர்கள் வாய்க் கேட்கப்பட்டு வருகின்றன. அவற்றுள் இரண்டொன்றை இங்கு குறிப்பிடுதல் தகும்.

இப்போ ஒரு தலைமுறைக்கு முன் வண்ணார்பண்ணையிற் பிரபல வர்த்தக

ராயிருந்தவர் செட்டியார் கந்தையா என்பவர். அவரின் தாயார் பொன்னம்மா என்பவர். வண்ணார்பண்ணையில் இன்றுள்ள பிரபல வர்த்தக ஸ்தாபனங்களுட் பேர்போனது 'பொன்னம்மா மில்' என்பது. இம்மில் அவ்வம்மையார் பெயராலேயே அமைந்துள்ளது. அவ்வம்மையார் ஆரம்பத்திற் செல்வ வாழ்வில் அமைந்தவரல்லர். மணமாகிச் சாமானிய வாழ்வு வாழ்ந்தவர். அவ்வம்மையார் அந்நாளில் வண்ணார்பண்ணைப் பகுதியிற் பெரிதுஞ் சஞ்சரித்து வந்த கடையிற் சுவாமிகளுக்கு அடிமைத்திறம் பூண்டொழுகி வந்தனர். சுவாமிகள் சில தடவைகளில் அவர் வீட்டுக்கு எழுந்தருளுவதுமுண்டு. அவ்வேளையில் அம்மையார் சுவாமிகளுக்கு அன்பாசாரமாக அமுதூட்டி வருவார் சிலவேளைகளிற் சுவாமிகள் அடியார் பலருடன் அவர் வீட்டுக்கு எழுந்தருளுவார். அவ் வேளைகளிலும் அம்மையார் மனங்கோணாது தம்மால் ஆனமட்டும் முயன்று பக்தி சிரத்தையுடன் எல்லோருக்கும் அமுதூட்டி மகிழ்வர்.

ஒருதடவை அம்மையார் குடும்பத்திற் பெரும்பொருள் முடையேற்பட்டிருந்தது. கணவரும் அவருமாகக் கஷ்டஜீவனஞ் செய்து கொண்டிருந்தனர். கழுத்துத் தாலியைத் தவிர ஏனைய சொத்துக்களெல்லாம் அடைவிற் போய்விட்டன. இந்நிலையில் அம்மையாரைச் சோதிக்க வந்ததுபோல ஒருநாள் கடையிற் சுவாமிகள் அடியார் பலருடன் அவ்வீட்டுக்கு எழுந்தருளியிருந்தார். அடியார் கூட்டமும் வழமையிற் பார்க்க அதிகமாகவேயிருந்தது.

சுவாமிகளையும் அடியார்களையுங் கண்டவுடன் அம்மையார் பெருங் குதூகலத்துடன் வரவேற்று வணங்கினார்கள். கணவனாரனுமதி பெற்றுக் கழுத்திலிருந்த தாலியைக் கழற்றி அடகு வைப்பித்து அன்று அடியார்களுக்கு அமுதூட்டுவதற்கு வேண்டிய ஏற்பாடுகளெல்லாஞ் செய்தார்கள். வழமையிலும் பார்க்கப் பன்மடங்கு சிறப்புடனே அன்றைய அமுதூட்டு வைபவம் நடந்தேறியது. என்றையிலும் பார்க்க அன்றுதான் அம்மையாருக்கு மிகுந்த திருப்தி ஏற்பட்டிருந்தது.

பொருள் முடையைப் பற்றிக் கவலை கொள்ளாது தம் தாலியையே அர்ப்பணித்து அடியார் பூசையை நிறைவேற்றுவதில் அன்று அம்மையார் கொண்ட சிரத்தை மேலானது அபாரமானது. அச்சிரத்தையன்பின் திறம் சுவாமிகளது திருவுள்ளத்திற்குப் பெரிதும் ஏற்புடைத்தாயிற்று.

திருவமுது முடித்து ஆறியிருக்கையில் சுவாமிகள் அம்மையாரை அழைத்தார்கள். ஒருதரம் ஏற இறங்கப் பார்த்துவிட்டு 'ஒரு இரும்புத் துண்டு கொண்டுவாடி' என்றார். பணிமறுக்காத அம்மையார் இரும்புத் துண்டுக்காக வளவெங்குந் தேடினார். எங்கேயோ ஒரு மூலையிற் கறள்பிடித்த ஓர் இரும்புத் துண்டு கிடைத்தது. அது வெகு காலத்திற்கு முன் கழித்தெறியப்பட்ட ஒரு நாகபடம். அம்மையார் அன்பாதரவாக அதை எடுத்துக்கொண்டு வந்து சுவாமிகள் கையிற் கொடுத்து நின்றார். 'போடி, போய் உன் வேலையைப் பார்' என்ற ஆணை பிறந்தது. அம்மையார் போய்விட்டார். சிறிதுநேரஞ் செல்லச் சுவாமிகள் அம்மையாரை அழைத்தார்கள். 'இந்தாடி இதைக் கொண்டுபோய் உன் பெட்டகத்துட் பூட்டிவை' என்று சொல்லி அதே நாகபட இரும்பை அவர் கையிற் கொடுத்தார்கள். பின்பு சுவாமிகள் அவ்விடம் விட்டகன்று விட்டார்கள். அம்மையார் சுவாமிகள் பணித்தவாறே செய்துமுடித்தார். நாலாவது

நாள் ஏதோ தேவைக்காகப் பெட்டகத்தைத் திறந்தபோது அங்கொரு அதிசயம் அவரை வரவேற்றது. 'பழைய இரும்புத்துண்டு பத்தரைமாற்றுத் தங்கமாகக் காட்சியளித்தது. எத்தனை வகையிற் பரீட்சித்த போதும் அது சுத்தத் தங்கமாகவேயிருந்தது. அம்மையாருங் கணவரும் சுவாமிகளின் திருவருளை வியந்து மகிழ்ந்தனர் சுவாமிகள் அருட்செல்வத்திற்றிளைத்த அம்மையார் குடும்பம் அன்றுதொட்டுப் பொருட் செல்வத்திலுந் திளைப்பதாயிற்று. அவர் சந்ததி இன்றும் பொருட்செல்வத்தில் மேலோங்கி நல்வாழ்வெய்திச் சிறத்தல் கண்கூடு.

இத்தொடர்பில் யாம் ஒருண்மையைக் கருத்திற் கொள்வதவசியம். பெரியோர்க்குத் தொண்டு பூண்டொழுகுதல் செல்வம் பெறச் சிறந்த சாதனம் என்றெண்ணுதல் தவறு. அடிமைத் தொண்டிற்குக் கைம்மாறு செல்வப்பேறாகாது. அது திருவருட் குறிப்புமன்றாம். எப்பற்றினும் முனைப் பின்றிச் சேவை இன்பம் வேண்டிச் செய்யும் சேவையே உண்மையில் தொண்டெனற் பாலது. பன்னாளாகப் பண்பட்டுவரும் அத்தகைய தொண்டானது தன்னிலே வலுவுற்றுக் காலகதியில் தன் உண்மை இயல்பைத் தோற்றுவிக்கும். அந்நிலையில் அது எத்தகைய தடையேற்படினும் அவற்றை யெல்லாம் அடித்தடக்கித் தானே முனைப் புற்றெழுந்து நிற்கும். அந்நிலையிலேயே அடிமைத்தொண்டு விசேடம் பெறுகின்றது. எவ்வெவர்க்கு எவ்வெக் கணத்தில் அப்படியொரு நிலை ஏற்படுகின்றதோ அவ்வக் கணத்தில் அணுப்பிசகாது அவ்வவரை ரக்ஷிக்கக் காத்துநிற்கும் ஆண்டவனருள் அப்படியான ஒருநிலையில் தானே வெளிப்பட்டு நின்றருளும். அத்தகையதோர் அருள் வெளிப்பாட்டின் அறிகுறியே இத்தகைய பேறென்றறிதல் வேண்டும்.

இரும்பு பொன்னாக்கிக் கொடுக்கப் பட்டது பொன்னம்மையார் தொண்டுக்குக் கைம்மாறன்று. கைப்பொருளெல்லா மிழந்து கட்டிய தாலியுமிழந்த நிலையிலும் அடியார்க்கு அமுதூட்டுந் தொண்டிலே ஆறுதல் கண்டு மலர்ந்து நிற்கும் அவர்தம் அடிமை விசேடத்தில் தோன்றிய அருள் வெளிப்பாடே அது.

அன்பர் செய்திகளும் ஆண்டவன் அருளிப்பாடுகளும் எங்கும் என்றும் இவ்வாறே நடைபெற்று வந்திருப்பதைக் காண்கிறோம். அப்பூதியடிகள் திருநாவுக்கரசு சுவாமிகளிடத்து அடிமைத் தொண்டு பூண்டொழுகியவர். ஒருநாள் திருநாவுக்கரசு சுவாமிகள் அப்பூதியடிகள் பால் எழுந்தருளியிருந்தார்கள். சுவாமிகளுக்கு அமுதூட்டுதலுக்கான விசேட ஏற்பாடுகள் அங்கு நடைபெற்றன. வாழையிலை கொண்டு வருவதற்காக அப்பூதியடிகள் தம் மூத்த மகனைத் தோட்டத்துக்கு அனுப்பியிருந்தார். வாழையிலை வெட்டும் போது அவனைச் சர்ப்பமொன்று தீண்டிவிட்டது. விஷவேகத்துடன் வெகுவேகமாக ஓடிவந்த அச்சிறுவன் வாழையிலையைத் தாய் கையிற் கொடுத்துத் தனக்கு விஷந்தீண்டிய செய்தியையுங் கூறி விழுந்திறக்கின்றான். மிக அசாதரணமானதொரு சந்தர்ப்பம். அப்பூதியார் மகனுடைய காரியம் பார்ப்பதா? அப்பர் சுவாமிகளுக்கு அமுதூட்டுவதா?

அப்பூதியடிகளும் அவர்தொண்டில் ஆதரவுபட்ட அவர் மனைவியாருமாக ஒரு கணமுந் தாமதியாது இறந்த மகனை மூடிமறைத்தனர். சுவாமிகளை அமுதுண்ண அழைத்தார்கள். செத்த மகனையும் மறைத்துப் பிள்ளைப் பாசத்தையும் அடித்தொதுக்கி அடிமைத் தொண்டிலேயே முனைந்து நிற்கிறது அவர்கள் சிரத்தை

யன்பு. அருள் வெளிப்பாட்டிற்கு இது உகந்ததோர் தருணமாகின்றது.

அமுது படைக்கப்பட்டு உண்ண அமருந் தருணம் மகன் எங்கே என்று அப்பர் சுவாமிகள் வினாவுகின்றார்கள். 'அவன் இப்போதைக்குதவான்' என்று அப்பூதியார் பதிலளிக்கின்றார். மகன் இறந்ததற்காக வன்று, தம் அடிமைத்தொண்டு தடைப்படு கிறதற்காகவே இரங்கிநின்றார் அவர். இந்நிலையில் சுவாமிகளின் கருணை முகிழ்த்தெழுகின்றது. இறந்த மகன் விரைவில் உயிர்த்தெழுகின்றான். பாவம்! இளம்பையன் இறந்தொழிந்தானே என்ப தற்காகவுமன்று, அன்பராகிய அப்பூதியார் தம் அருமை மகனை இழந்துவிட்டாரே என்பதற்காகவுமன்று, பிள்ளை இறந்ததற் காகத் துடிக்க வேண்டிய பிள்ளைப் பாசத்தையுங் கீழ்ப்படுத்தி அடியார்க்கு அமுதூட்ட முனைப்புற்றெழுந்து நிற்கும் அவர்தம் அடிமை விசேடங் கண்டே அது நிகழ்வதாயிற்று. சுவாமிகள் தேவாரம்பாடி இறந்த பிள்ளையை உயிர்ப்பிக்கின்றனர். இங்ஙனமே பிறவும்.

வல்வெட்டித்துறை வாசியான தண்டேல் ஒருவர் சுவாமிகளின் சீடர்களில் ஒருவரா யிருந்தார். ஒருநாள் சுவாமிகளை வெள் ளெனவே கண்டு கும்பிடும் விருப்புடன் அதிகாலையிலே புறப்பட்டு வண்ணார் பண்ணைக்கு வந்து சேர்ந்தார். தற்செயலாக அன்று சுவாமிகள் வண்ணார்பண்ணை யிலில்லை. மண்டைதீவிலிருக்கிறார் என்ப தறிந்து அங்கு சென்று காணப்புறப்பட்டார். வழிச்சென்று கொண்டிருக்கையில் வெயி லேறிவிட்டது. நீண்டதொரு மணல் வெளியைத் தாண்ட வேண்டியிருந்தது. மணல் வெம்மையினாற் பாதங்கள் வெம்பிப்போயின. வியர்த்துக் களைத்துத் தலை சுழல்வதாயிற்று. வெயிலை நோவது மின்றி மணலை நோவதுமின்றித் தம்மை மறந்த நிலையில் 'குருநாதா' என்றார் அவர்.

இவரிவ்வாறாகச் சுவாமிகள் தாம் வழமையாகத் தங்கும் நன்னியர் வீட் டிலேயே தங்கியிருந்தார். அடியார் பலர் சூழ்ந்திருந்தனர் சுவாமிகள் பலகைக் கட்டிலொன்றிற் சாய்ந்து படுத்திருந்தார்கள், திடீரெனத் துடித்தெழுந்தார்கள். ஆகா! அகோரம்! அகோரம்! என்று உரக்கச் சப்தமிட்டுத் துள்ளித் துள்ளியசைந்தார்கள். தலைமாட்டிற் கிடந்த தம் குடையை எடுத்துத் தாமே விரித்து அங்கிருந்த ஒருவரிடங் கொடுத்தார்கள். 'இதை என் கால் மேற் கவித்துப் பிடித்துக்கொள்' என்று பணிந்து விட்டு முன்போற் சாய்ந்து படுத்திருந்தார்கள்.

வெகுநேரமாயிற்று யாரோ வீட்டு வாசலுக்குக் கிட்ட வந்துகொண்டிருக்கும் அசுகை தோன்றிற்று 'சரி' இனிக்குடை யைச் சுருக்கலாம் என்றார் சுவாமிகள்.

திடீரென ஒருவர் உட்புகுந்தார். சுவாமிகளின் பாதங்களில் விழுந்து விழுந்து வணங்கியெழுந்தார். வாயாரப் போற்றி மகிழ்ந்திருந்தார். அவர் அந்தத் தண்டேலேதான். குருநாதா என்றதன்மேல் அவருக்கு வெப்பமுமிருந்தில்லை, களைப்பு மிருந்தில்லை வெய்யில் வெய்யிலாகவே யிருந்தது. அங்கே குடை கவிக்க இங்கே வெப்பந் தணிந்துபோயிற்று.

தண்டேல் அவர்கள் ஆறியமர்ந்து அடியார்களுடன் உரையாடிக்கொண்டி ருக்கும்போது தாம் வழிவந்த செய்தியைக் கூறினார்கள். அன்று குடைகவிப்பித்த அருளின் அர்த்தம் இன்னதென்பதை அப்போது தான் அங்குள்ளோர் புரிந்து

கொள்ளக்கூடியதாயிருந்தது. இச்செய்தி களெல்லாம் அடியார் வாயிலாயறிய வந்தபோது தண்டேல் அவர்கள் ஆனந்த பரவசமுற்றார்கள்.

உண்மையான குருவும் உண்மையான சீஷனும் உருவினால் வேறேயாயினும் கலப்பினால் ஒருவரேயாவர். இருவருந் தம்முள் மாறிப்புகுந்து ஒருவருணர்விலே மற்றவர் கலந்து கொள்கின்றார்கள். ஆயினும் குரு விகாரமற்றவர். அவருக்கு இன்பதுன்ப அவஸ்தைகளில்லை. சீஷனோ விகாரமின்னைமை அடையும் நிலையில் உள்ளவனே அன்றி முற்றிலும் விகாரமற்ற வனாதல் அமையாது. அவன் மலம் முற் றாகக் கெடுக்கப்பட்டபோதிலும் அவன் உடலுள்ள வரையிலும் அதன் சார்பான பிராரத்தம் இருந்தேயாக வேண்டும். அதன் விளைவாக அவன்பால் இன்ப துன்ப அவஸ்தைகள் தோன்றும். அவ்வேளை களிற் குருவைத் தியானித்தல் மூலமாக அவ்வவஸ்தைகளிலிருந்து விலகவேண் டியது சீஷன் கடமையாகும்.

குரு சீஷர்கள் கலப்பினால் ஒருவரே யாயினும் சீஷனுடைய இன்பதுன்பங்களி னாற் குரு பாதிக்கப்படுபவரல்லர், அங்ஙன மாயின் அவர் அவனுடைய இன்ப அவஸ் தைகளை நீக்க முடியாது போய்விடும். ஆயினுஞ் சீஷனுடைய இன்ப துன்பங்களி னாற் குரு தானும் பாதிக்கப்படுபவராகக் காட்டிக்கொள்ளாதிருக்கக் கூடியவரு மல்லர். சீஷர்களின் நன்மைகருதி அவனுக் கருளுதல் வேண்டிக் குருவிடத்தே நிகழும் கருணையின் துடிப்பு இதுவாகும்.

சீஷன் குருவிடத்தே பெறற்பாலன வாகிய அருளிச் செயல்கள் எல்லாவற் றுள்ளும் தான் துயரப்படும் வேளையில் குரு அதற்காகத் துடிதுடித்துக் கருணைபுரியும் அருளிப்பாட்டிலேயே பெரிதும் ஆராமை யுறுபவனாதல் வேண்டும்.

'காவாய் கனகக் குன்றே போற்றி' என்று வேண்டிக்கொண்ட மாணிக்கவாசக சுவாமிகள் 'அ...ஆ' என்றெனக் கருளாய் போற்றி என்று அடுத்து வேண்டிக் கொள் வதும் பின்னொருகால் ... ... ... 'என்முகம் நோக்கி 'ஆ...ஆ' என்ன ஆசைப்பட்டேன் கண்டாய் அம்மானே' என்றிங்ஙனம் தான் அவ்வருளிச் செயல்களைப் பெறுதற்கே ஆசைப்படுவதாகக் கூறுவதும் திருவாச கந்தரும் உண்மைகளாகும்.

இறைவனுக்கு இன்பமுமில்லை துன்ப முமில்லை ஆயினுந் தன் அன்பர்க்காக இன்பமுந் துன்பமும் உறுபவனாக இறைவன் தன்னைக் காட்டியருளுகின்றான் சிவ புராணத்தில் இறைவனின் கல்யாண குணங்களைப் பலபடப் போற்றிப்புகழும் மாணிக்கவாசக சுவாமிகள் 'இன்பமுந் துன்பமும் இல்லானே' என்பதன் மேல் 'உள்ளானே' என்றுங் கூறுயருளுகின்றார். ஞானகுருவும் ஆண்டவனேயாவர்.

இங்ஙனம் அருட்பெரு விளையாடல் களைப் புரிந்து அன்பர்களை ஆட்கொண்டி ருந்த யாழ்ப் பாணம் வண்ணார்பண்ணைப் பகுதியிலும் மண்டைதீவிலும் மாறிமாறி உலாவரலானார். மண்டைதீவு சம்பந்தப் பட்ட வரையில் சுவாமிகளின் செய்தி பிறிதோரத்தியாயமாக எழுதப்படு கிறது. தம் பிற்காலத்திற் சில ஆண்டுகளாகச் சுவாமிகள் மண்டைதீவுப்பக்கம் திரும்பவில்லை, வண்ணார்பண்ணையைச் சேர்ந்த நீராவியடி என்னும் இடத்திலே தங்கி விட்டார்கள். இவ்விடம் நீராவியடிப் பிள்ளையார் கோயிலின் தென்மேற்குத் திசையாகத்

கோயிலெல்லையில் இருந்து சுமார் ஐம்பது யாருக்காப்பாலுள்ளது. கோவிலின் மேற்கு வீதிவழிபாயகத் தெற்கே செல்லும் பாதையின் ஓரத்திலே உள்ள அந்த இடத்திற் சுவாமிகள் சமாதி கூடினார்கள். அந்திய காலத்திற் சுவாமிகளுடனிருந்து சமாதி வைபவத்தை நிறைவேற்றி வைத்த அன்பர் களின் அருமுயற்சியால் சமாதிக் கோயி லொன்றெழுப்பப்பட்டுள்ளது. கோயில் மிகவும் அமைவாக அமைந் துள்ளது. எனினும் இப்போது கோயில் பார்க்கக்கூடிய நிலையிலில்லை. கோயிற் சுவர்கள் பூச்சு மெழுக்கற்று உதிரும் நிலை யிலுள்ளன. அர்த்த மண்டபம் அழுக்கேறிய நிலையிற் காட்சி தருகிறது. வசந்த மண்டபம் அழுக்கேறிய நிலையிற் காட்சி தருகிறது. வசந்த மண்டபம் கூரையற்றுப் பரவெளி யாகக் காட்சியளிக்கின்றது. நந்தி பலிபீடம் மட்டும் புதிதாகச் சாந்தகப்பை பட்ட அடை யாளத்துடனிருக்கின்றன. வாயிலிற் கற்றி ருப்பணி நிகழ்ந்து குறையாய்க் கிடக்கின்றது. நித்திய பூசைக்கு வேண்டப்படும் பொருட் களின் தட்டுப்பாட்டைப் பற்றிப் பூசகர் சொல்லும் செய்தியைக் கேட்பதில் தோன்றும் துன்பம் தனியானது. வெறிச்சென்ற நிலை யிற் காட்சியளிக்கும் இச்சமாதிக்கோயிலின் தோற்றம் ஞான மூலத்தைப் பேணுவதில் நம்மவர் கொண்டுள்ள அலட்சிய மனப் பான்மையை அப்படியே பிரதிபலித்துக் கொண்டிருக்கிறது. இரண்டு தலைமுறைக் குள்ளாக இச்சமாதிக் கோயில் விஷயத்தில் இவ்வளவு அசிரத்தை காட்டும் நம் நாட்டிற் கலாசாரம் வளர்ச்சியடைகிறது என்று, நாக்கூசாது எப்படிச் சொல்ல முடியும்? சிவன் கோயிலைக் காண்கிறபோது சிவபெரு மானைக் கண்டாலன்ன திருப்தியேற்பட வேண்டும். கடையிற் சுவாமிகளது சமாதி யைக் காணும்போது அவரையே கண்டா லன்ன திருப்தி ஏற்படக்கூடிய அளவுக்குச் சமாதி விளங்கினாலல்லவோ நம் கலா சாரம் விளங்குகிறதென்று கூறலாம். யாழ்ப்பாணம் உள்ள வரையும் சந்ததி சந்ததியாகக் கடையிற் சுவாமிகள் வழிபாடு விளக்கமுற்று வரவேண்டியதொன்று. இச் சமாதிக்கோயில் இங்ஙனம் மங்கிக்கொண்டு போகையில் அது எங்கே கைகூடப் போகின் றது? சைவ உலகம் இதனைத் தீரஉணர்ந்து தீவிரமாகச் செயலாற்றி உய்வதாக.

**குறிப்பு :-** குழந்தைவேற் சுவாமிகள் ஆட்கொள்ளப்பெற்ற செய்தி கடையிற் சுவாமிகள் வரலாற்றில் முக்கியமான அம்சமாகும் அதன் விபரம் பின்வருங் குழந்தைவேற்சுவாமிகள் வரலாற்றிலிருந்து அறியக்கூடியதாகும்.

*சிவ! சிவ! சிவ*

*நன்றி : குழந்தைவேற் சுவாமிகளும் குரு பரம்பரையும் – நூல்*

# அருள்வாய் வருவாய்

இறைவன் இறங்கிவருவான் பாரில்
இன்னல் களைந்து இடர்நீக்க
பித்தனாகப் பிறர் அஞ்சும்
சித்தனாக சிலவேளை வருவான்
கந்தல் ஆடையும் கடுங்கோப வார்த்தையும்
கால காலனின் திருவிளையாடலே


நல்லூர் தேரடியில் மண்ணிலிருந்து
மாமருந்தாய் பிணி தீர்க்கவந்த
செல்லப்பன் திருவருளை இன்று
செகமெல்லாம் பேசும் திறனறிவோம்
தன்னையறிவித்து தடுத்தாற் கொண்ட
செல்லப்பர் செதுக்கிய சிவயோகர் நாமறிவோம்


எல்லாம் எப்பவோ முடிந்த காரியம்
என்ற தத்துவத்தின் ஞான வித்தகனே
ஆசனமில்லை பீடமில்லை ஆசாரமில்லை
ஆரவாரமில்லை உன் ஆழம் அறியோம்
விழியால் மொழியால் அடியால் பலரை
வினைதீர்த்து விதி மாற்றி ஒளிரவைத்தாய்

நடமாடிய தெய்வம் கல்லாகிக் காட்சி தந்த
நாள் நூற்றாண்டு ஆனது அன்றோ
விண்ணவரும் மண்ணவரும் நாள் குறித்தாலும்
விளக்காய் விளங்கும் உனக்கு மறைவில்லை
அருள்வாய் வருவாய் அகஇருள் போக்க
ஆவலுடன் காத்திருப்போம் தேரடியில் அரனே

- ஆதி


# கவளாவத்தை அருள்மிகு ஞானவைரவர் கோயில்
# 08-02-2015 ஞாயிற்றுக்கிழமை மஹா கும்பாபிஷேக நிகழ்வின் போது...







# 'தங்கம்மா அப்பாக்குட்டியின் வகிபாகம்' : ஓர் ஆய்வு நூல் வெளியீட்டு விழாவில்...























# சிறுவர் விருந்து

# எப்போ வருவான்?

**சகோதரி யதீஸ்வரி அவர்கள்**

அன்பான பிள்ளைகளே! அன்பு வாழ்த்து

பஞ்ச பாண்டவர்களின் தேவியான பாஞ்சாலி ஒருமுறை விரதம் ஒன்று அனுட்டித்தாள். அந்த விரதமுடிவில் கண்ணன் வந்து பாரணை உணவில் முதற்பிரசாதம் எடுத்துக் கொள்ள வேண்டுமென எண்ணினாள். இந்த விருப்பத்தை அவள் அர்ஜூனனிடம் கூறினாள். அதைக் கேட்ட அர்ஜூனன் "நீ கவலைப்படாதே பாஞ்சாலி!, எப்படியும் கிருஷ்ணனைப் பாரணைக்குக் கூட்டிவருகிறேன்" என்று சொல்லித் துவாரகைக்குச் சென்றான். அர்ஜூனனுக்குத் தன் கிருஷ்ணபக்தியில் ஒரு பெருமிதம். கிருஷ்ணன் தன்னிடம் தான் மிகவும் அந்தரங்கமான, முதல் தரமான அன்பு கொண்டிருக்கிறான் என்று கர்வமும்கூட. இந்நிலையில் துவாரகை சென்ற அர்ஜூனன் பாஞ்சாலி கூறியதைக் கிருஷ்ணனிடம் சொல்லி, "கிருஷ்ணா! உன் தங்கை நீ நிச்சயமாக வருவாய் என எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறாள். நீ வருவாய் தானே!" என நம்பிக்கையோடு கேட்டான். "அர்ஜூனா மிக அவசரமாகச் செய்யவேண்டிய வேலை நிறைய இருக்கிறது. என்னால் இப்போ இதற்கு வரமுடியாதப்பா. தங்கையிடம் சொல், என்னை நினைத்துக் கொண்டு பாரணை முடிக்கட்டும். இப்போது என்னால் துவாரகையை விட்டு அசையவே முடியாது" என்று சொல்லி அர்ஜூனனை அனுப்பிவிட்டான். அவனும் கவலையுடன் திரும்பிவந்து பாஞ்சாலியிடம் கிருஷ்ணன் வரமுடியாததைச் சொல்லித் தலைகுனிந்து நின்றான். பாரணை நாளும் வந்துவிட்டது. பாஞ்சாலிக்கு ஒரே கவலை. ஸ்ரீ கிருஷ்ணன் வரவில்லையே என்று அவர் மிகவும் வருந்தினாள். இதை அறிந்த பீமன் "பாஞ்சாலி! நீ பாரணைக்கு ஆயத்தம் செய்! நான் கண்ணனை அழைத்து வருகிறேன்" என்றான்.

அர்ஜூனன் சிரித்தான். உற்ற நண்பனான நான் அழைத்தே வராத கண்ணன், இந்த முரடன் கூப்பிட்டால் வந்துவிடுவானா? இது என்ன பகிடி! அதுவும் பாரணைக்கு நேரம் நெருங்கி விட்டது. துவாரகைக்கு பீமன் போவதாவது, கிருஷ்ணன் வருவதாவது!" எனக் கேலியாக நினைத்ததுடன், மற்றவர்களிடமும் சொல்லிச் சிரித்தான். "பாஞ்சாலி! கண்ணன் வருவான் எனக் கற்பனை செய்து கொண்டிராமல், அவரை நினைத்து பிரசாதத்தைப் படைத்துவிட்டுப் பாரணைக்கு ஆயத்தம் செய்யம்மா!" என்றும் கூறினான்.

பீமன் அருகிலிருந்த நீர்நிலையின் கரையில் போய் நின்றான். தன் கையில் கதாயுதத்தைத் தூக்கினான். "கண்ண பிரான் வந்து என்னைக் காப்பாற்றா விட்டால் இந்தக் கதாயுதம் என் தலையில் விழுந்து நான் சாவேனாக!" என்று சபதம் செய்துவிட்டுக் கதாயுதத்தைச் சுழற்றி ஆகாயத்தில் எறிந்தான். அது மிக உயரத்தில் சென்று மிண்டும் பூமியை நோக்கி மிக வேகமாக வந்து கொண்டிருக்க, நேரே அதன் கீழே போய் நிமிர்ந்து நின்றான் பீமன். கதாயுதம் வந்து கொண்டிருக்கிறது. ஓரிரு விநாடியில் பீமன் தலைமேல் இடிபோல் விழப்போகிறது; பீமன் சாகப்போகிறான். பாண்டவருக்கும் என்ன செய்வதென்று தெரியவில்லை. "கிருஷ்ணா! கிருஷ்ணா!" என்று கூவியபடி பதறித் துடித்தனர்.

அடுத்த நொடி.... கண்ணன் அங்கே நின்றான். கதாயுதம் அவன் கையில் அகப்பட்டிருந்தது. "ஓ! பீம சேனா! இதென்ன விளையாட்டு!" என்றபடி புன்னகை செய்தான் கண்ணன். பீமன் கண்ணீருடன் "பாஞ்சாலி! கண்ண னுக்குப் பூசை செய்யம்மா!" என்றபடி சமைக்கும் இடத்திற்கு ஓடினான்.

கர்வம் நீங்கிய அர்ஜூனனும் கண்ணன் பாதங்களை நமஸ்கரித்தான். ஆம் கர்வமற்ற அன்பிற்கே இறைவன் கட்டுப்பட்டு வருவான்.


## சிவபூமி கண்தான சபை

தானங்களில் சிறந்த தானமாக கண் தானத்தைச் செய்ய முன் வாருங்கள். உங்கள் இறப்புக்குப் பின் பார்வையற்றிருக்கும் ஒருவருக்கு ஒளி கொடுக்க நீங்கள் உதவுங்கள். வாழும் போதே இப்புண்ணிய காரியத்திற்கு ஒப்புதல் தாருங்கள்.

### தொடர்புகளுக்கு

**கலாநிதி ஆறு. திருமுருகன்**
**021 - 222 6550**

கண் வைத்திய நிபுணர்
**Dr. ச. குகதாசன்**
**021 - 222 3645**

# அருள் ஒளி தகவல் களஞ்சியம்

**இளவாலை ஆனைவிழுந்தான் விக்ன விநாயகர்**

மேற்படி ஆலயத்தின் ஜய வருட மஹோற்சவம் 24-03-2015 ஆரம்பமாகி 03-04-2015 வெள்ளிக்கிழமை தேர்த் திருவிழா நடைபெறும்.

**சிவத்தமிழ்ச்செல்வி ஆய்வுநூல் வெளியீடு**

அகில இலங்கை இந்து மாமன்றம் யாழ். பல்கலைக்கழக இந்து நாகரீகத் துறையுடன் இணைந்து அன்னை சிவத்தமிழ்ச்செல்வி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள் இலங்கையின் சைவத்தமிழ்ப் பண்பாட்டு வளர்ச்சியில் ஆற்றிய பங்களிப்பு தொடர்பான ஆய்வு நூல் 07-03-2015 அன்று கொழும்பு சரஸ்வதி மண்டபத்தில் திரு. கந்தையா நீலகண்டன் (தலைவர், அகில இலங்கை இந்துமா மன்றம்) தலைமையில் வெளியிடப்பட்டது. நூலாசிரியர் திரு.த. செல்வமனோகரன்.

**மட்டக்களப்பு மயிலம்பாவெளி, இராம்நகர் ஸ்ரீ காமாக்ஷி அம்பாள் தேவஸ்தானம்**

மேற்படி ஆலயத்தின் வசந்த நவராத்திரிப் பெருவிழா 20-03-2015 வெள்ளிக்கிழமை ஆரம்பமாகி 30-03-2015 திங்கட்கிழமை திருக்கல் யாணத்துடன் நிறைவு பெறும்.

**வண்ணை ஸ்ரீமத் வாலாம்பிகா சமேத ஸ்ரீ வைத்தீஸ்வர சுவாமி தேவஸ்தானம்**

16-03-2015 மஹோற்சவம் ஆரம்பமாகி 05-04-2015 சண்டேஸ்வரர் உற்ஷவத்துடன் நிறைவு பெறும்.

**பழனிகோவில் பங்குனி உத்திரவிழா 28ந் திகதி கொடியேற்றம்**

பழனியில் நடைபெறும் பெருந் திருவிழாக்களில் தைப்பூசத்திற்கு அடுத்தபடியாக பங்குனி உத்தர திருவிழா மிகவும் பிரசித்தி பெற்றது. இத்திரு விழாவின் முக்கிய அம்சமே பக்தர்கள் கொடுமுடி உட்பட பல்வேறு புண்ணிய நதிகளில் இருந்து தீர்த்தங்களைக் காவடியாகச் சுமந்து வந்து முருகனுக்கு அபிஷேகம் செய்து வழிபடுவர். 10 நாட்கள் நடைபெறும். இத்திருவிழா வின்போது பல்லாயிரக் கணக்கான பக்தர்கள் கலந்து கொள்வார்கள்.

இந்த வருடத்திற்கான திருவிழா வரும் 28ம் திகதி சனிக்கிழமை கொடியேற்றத்துடன் தொடங்குகிறது. பெரியநாயகி அம்மன் கோவிலிலிருந்து முத்துக்குமாரசாமி வள்ளி தெய்வானை திருஆவினன்குடி கோவிலுக்கு எழுந் தருளி காலை 11 மணிக்குமேல் 12 மணிக்குள் கொடியேற்ற நிகழ்ச்சி நடைபெறுகிறது. அதனைத் தொடர்ந்து உச்சிக் காலப் பூசையின் போது பழனிமலைக் கோவிலில் காப்புக் கட்டுதல் நடைபெறும்.

6ம் நாள் திருவிழாவாக ஏப்ரல் 2ஆம் திகதி இரவு 7 மணிக்கு திருக்கல்யாண நிகழ்ச்சியும் அதனைத் தொடர்ந்து வெள்ளி தேரோட்டமும் நடைபெறும். 7ம் நாள் திருவிழாவில் பங்குனி உத்தர தேரோட்டம் நடைபெறும். அன்று அதிகாலை 4 மணிக்கு மலைக் கோவிலில் நடை திறக்கப்பட்டு

விஸ்வரூப தரிசனமும், மாலை 4.35 மணிக்கு பங்குனி உத்தர தேரோட்டமும் நடைபெறும்.

திருவிழா நடைபெறும் 10 நாட்களும் அடிவாரம் குடமுழுக்கு நினைவரங்கில் கலைநிகழ்ச்சிகள், இன்னிசைக் கச்சேரி, பக்தி சொற்பொழிவு, பரதநாட்டியம் என பல்வேறு நிகழ்ச்சிகள் நடைபெறும்.

**நல்லூரில் செல்லப்பா சுவாமிகள் குருபூசை**

எதிர்வரும் 22-03-2015 காலை நல்லூரில் உள்ள செல்லப்பா சுவாமி களின் சமாதிக் கோவிலில் செல்லப்பா சுவாமிகளின் குருபூசை நடைபெற வுள்ளது. காலை 8 மணி முதல் விஷேட அபிஷேக ஆராதனைகள் இடம்பெற்று நண்பகல் 12 மணியளவில் நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் அன்னதானம் நடைபெறும். சுவாமிகளின் சிறப்புக்கள் குறித்து சிறப்பு மலர் ஒன்று வெளியிடப்படுகிறது.

**கீரிமலை நகுலேஸ்வரத்தினை இந்தியப் பிரதமர் வழிபட்டார்**

வரலாற்று ஈஸ்வரங்களில் ஒன்றாக விளங்கும் கீரிமலை நகுலேஸ்வரர் கோவிலை இந்தியப் பிரதமர் கௌரவ திரு.நரேந்திர மோடி அவர்கள் 14-03-2015 அன்று தரிசனம் செய்தார். கீரிமலையில் இந்திய வீட்டுத்திட்டத்தைத் திறந்து வைக்க வந்த வேளை இத்தரிசனம் நடைபெற்றது.

**அகில இலங்கை இந்து மாமன்ற வைரவிழா ஆண்டு ஆரம்பம்**

அகில இலங்கை இந்து மாமன்ற வைரவிழா ஆண்டு ஆரம்ப வைபவம் 06-03-2015 அன்று கொழும்பு வெள்ள வத்தை மாணிக்கப் பிள்ளையார் கோவில் மண்டபத்தில் திரு. கந்தையா நீலகண்டன் அவர்கள் தலைமையில் ஆரம்பமாகியது. 60 விளக்குகள் ஏற்றப்பட்டு மங்களகரமாக ஆரம்பித்து வைக்கப்பட்டது.

**வண்ணை ஸ்ரீமத் வாலாம்பிகா சமேத ஸ்ரீ வைத்தீஸ்வர சுவாமி தேவஸ்தானம்**

16-03-2015 மஹோற்சவம் ஆரம்ப மாகி 05-04-2015 சண்டேஸ்வரர் உற்ஷவத்துடன் நிறைவு பெறும்.

**யோகர் சுவாமிகள் குருபூசை**

யாழ்ப்பாணத்து யோகர் சுவாமி களின் 51வது குருபூசை நிகழ்வுகள் 30-03-2015இல் நல்லூர் ஸ்ரீ துர்க்காதேவி மணி மண்டபத்தில் கலாநிதி ஆறு.திரு முருகன் அவர்கள் தலைமையில் நடைபெறும்.

கோப்பாய் சுப்பிரமுனிய கோட்டத்தில் நடைபெற்ற சிவராத்திரி யாக பூசையை அமெரிக்காவில் வாழும் சைவ பக்தர்கள் (வெள்ளையர்) நடாத்தும் காட்சி







அகில இலங்கை இந்துமா மன்றமும் யாழ். பல்கலைக்கழக
இந்து நாகரிகத்துறையும் இணைந்து நடாத்தி நூல்வெளியீட்டு விழாவில்
**தங்கம்மா அப்பாக்குட்டியின் வகிபாகம் : ஓர் ஆய்வு**
பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் 07-03-2015 அன்று










PRINT Master T.P. 021-205 3322